# வருடாந்த அறிக்கை 2017

இலங்கை முதலீட்டுச் சபை

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| தலைவரின் வாழ்த்துச் செய்தி | 1 |
| பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | 2 |
| பணிப்பாளர்களின் பொதுச் சபை 2017 | 3 |
| நோக்கு மற்றும் பணிக்கூற்று | 4 |
| இலங்கை முதலீட்டுச் சபையின் பக்கத் தோற்றம் நோக்கங்கள் | 5 |
| 40 வருட உன்னதத்தன்மை 2017 ஆம் ஆண்டின் சிறப்பம்சங்கள் | 6 |
| இலங்கையின் நிலத்தோற்றத்தை மாற்றுவதற்கான ஊக்கி | 7 |
| ஒரே பார்வையில் இலங்கை முதலீட்டுச் சபை | 8 |
| 2017 ஆம் ஆண்டில் புதிய முன்னெடுப்புக்கள் | 10 |
| 40 ஆவது ஆண்டு நிறைவுவிழா | 13 |
| மைல்கற்கள் | 14 |
| **மேன்நோக்கு** | 15 |
| உலக முதலீட்டின் சூழ்நிலைகள் 2017 | 15 |
| இலங்கையின் முதலீட்டு எதிர்பார்ப்புக்கள் 2017 | 17 |
| **பிரிவுகளின் செயலாற்றுகை** | 25 |
| 1. முதலீட்டு ஊக்குவிப்புப் பிரிவு | 25 |
| 2. ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனைப் பிரிவு | 28 |
| 3. முதலீட்டாளர் சேவைப் பிரிவு | 29 |
| 4. முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவு | 30 |
| 5. கருத்திட்ட கண்காணிப்புப் பிரிவு | 32 |
| 6. கருத்திட்ட செயற்படுத்துகைப் பிரிவு | 33 |
| 7. சட்டப் பிரிவு | 34 |
| 8. தொழில்நுட்ப சேவைப் பிரிவு | 35 |
| 9. வலய முகாமைத்துவப் பிரிவு | 36 |
| 10. சுற்றாடல் முகாமைத்துவப் பிரிவு | 37 |

11. பொறியியல் அங்கீகாரம் மற்றும் விசேட செயற்திட்டப் பிரிவு 38

12. கைத்தொழில் உறவுகள் பிரிவு 39

13. தகவல் தொழில்நுட்பப் பிரிவு 40

14. ஊடக மற்றும் பிரச்சாரப் பிரிவு 41

15. நிருவாகப் பிரிவு 42

16. மனித வள முகாமைத்துவப் பிரிவு 43

17. பாதுகாப்பு மற்றும் தீயணைப்புப் பிரிவு 44

**நிதி மீளாய்வு 2017** 45

**கணக்காய்வு அறிக்கை 2017** 79

2017.12.31 இல் இலங்கை முதலீட்டு சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் 106

**முதலீட்டு சபையின் அலுவலக விபரக் கொத்து** 107

# தலைவரின் வாழ்த்துச் செய்தி



இலங்கை முதலீட்டுச் சபையின் கருத்திட்டச் சுற்றோட்டத்தில் பல்வேறு கட்டங்களில் 2500 இற்குக் கூடுதலான தொழில்முயற்சியாளர்களுக்கு வசதிகளை வழங்கி, தேசிய முதலீட்டு ஊக்குவிப்பு முகவர் நிலையமாக 2017 ஆம் ஆண்டில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தின் 40 ஆவது வருடத்திற்கு காலடி எடுத்து வைத்தது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் முதலீட்டு கருத்திட்டங்களின் ஊடாக இலங்கை முதலீட்டுச் சபை ஐக்கிய அமெரிக்க டொலர் 15 பில்லியனுக்கும் கூடுதலான நேரடி வெளிநாட்டு முதலீட்டினை அடைந்துள்ளது. அது நாட்டின் கைத்தொழில் ஏற்றுமதிகளில் 84% சதவீதத்திற்கும் மேற்பட்டதாகும்.

இலங்கை முதலீட்டுச் சபை நேரடி வெளிநாட்டு முதலீட்டினை அடைந்து கொள்ளும் போது அதன் உபாயத் திட்டங்களை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளையில், 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணி, நேரடி வெளிநாட்டு முதலீட்டை அதிகரிப்பதற்கு நாட்டின் தேசிய அபிவிருத்தி திட்டத்திற்கு இணையாக இலங்கை முதலீட்டுச் சபையின் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குமாறு வெளிப்படை தன்மையுடனும் பொறுப்புடனும் முதலீட்டு ஊக்குவிப்பு மேற்கொள்வது குறித்து கவனத்தை செலுத்தி சரியான உபாய திட்டங்களை பின்பற்றுவதாகும்

இலங்கை முதலீட்டுச் சபையின் மூலம் கொள்ளப்பட்ட பல்வேறு ஆரம்ப நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தின் மூலம் தாபிக்கப்பட்ட அதிகூடிய அதிகாரத்தைக் கொண்ட குழுவின் மூலம் ஆரம்பிப்பதற்கு தடையாக இருந்த மற்றும் தாமதம் அடைந்த கருத்திட்டங்களுக்காகன சவால்களையும் பிரச்சினைகளையும் இலகுவாக தீர்ப்பதற்கு சபைக்கு வாய்ப்பு கிடைத்தது. இலக்கு வைக்கப்பட்ட துறைகள் மற்றும் நாடுகளில் முதலீட்டை ஊக்குவிப்பதற்காகவும் மீண்டும் ஈடுபடும் புதிய உபாயத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு மேலதிகமாக இலங்கை முதலீட்டு சபையினால் தற்போது காணப்படுகின்ற கம்பெனிகளை உலகளாவிய மதிப்புச் சங்கிலியுடன் இணைப்பதற்காகவும் பாரிய அளவில் ஊக்குவிப்புகளையும் வசதிகளையும் வழங்குவதனை மேற்கொள்கின்றது. இலங்கை முதலீட்டுச் சபையினால் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான முன்னெடுப்புகளுக்கு இணையாக புதிய பொருளாதார வலயங்களை மேம்படுத்துவதற்காக காணிகளை அடையாளம் காணும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றது.

இவ்வாறான முயற்சிகளுக்கு மத்தியில் இந்த வருடத்தில் இதுவரை பதிவாகிய அதிகூடிய பெறுமதியான ஐக்கிய அமெரிக்க டொலர் 1.7 பில்லியனுக்கும் கூடுதலான நேரடி வெளிநாட்டு முதலீட்டினை அடைந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. அது 2016 ஆம் ஆண்டில் அடைந்து கொண்ட பெறுமதி ஆகிய ஐக்கிய அமெரிக்க டொலர் 801 மில்லியனுடன் ஒப்பிடும்போது இரண்டு மடங்கிலும் பார்க்க கூடுதலானதாகும்.

அதிமேதகு சனாதிபதி அவர்களினதும், கௌரவ பிரதமர் அவர்களினதும், அபிவிருத்தி உபாய திட்டம் மற்றும் சர்வதேச வர்த்தகம் பற்றிய கௌரவ அமைச்சரினதும் மற்றும் சர்வதேச வர்த்தகம் பற்றிய இராஜாங்க அமைச்சரினதும் அறிவுரையின் கீழ் மற்றும் முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபையினதும் பதவியினரினதும் உதவியுடன் இலங்கை முதலீட்டுச்சபையை சரியான திசையில் இட்டுச் செல்வதற்கு வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இலங்கையில் தங்கள் நம்பிக்கையை வைத்துள்ள நிறுனங்களுக்கும், இலங்கை முதலீட்டுச் சபையின் எமது அணியுடன் இணைந்து இவ்வெண்ணிக்கையை அடைவதற்கு செயற்பட்ட தொடர்புடைய முகவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாங்கத்தின் முதலீடு குறித்த ஈடுபாடு செலுத்திய கொள்கை மற்றும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தியை நடைமுறைப்படுத்தும் போது வழங்கிய அர்ப்பணிப்பு சம்பந்தமாக முதலீட்டுச் சபையின் பதவியினருக்கும் பணிப்பாளர் சபைக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

# பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி



தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பினை வழங்கி தனது 40 ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கும் இலங்கை முதலீட்டுச்சபை நேரடி வெளிநாட்டு முதலீட்டாளர்களின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினூடாக வலுவான பொருளாதார வளர்ச்சியொன்றை ஏற்படுத்துதல், தொழில் உருவாக்கம் மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்துதல் உட்பட அரசாங்கத்தின் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்ளும் போது அடிப்படை பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது.

2017 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டுச்சபைக்கு அதி கூடுதலான நேரடி வெளிநாட்டு முதலீட்டை பெற்றுக்கொடுத்த முக்கியமான வருடமாக காணப்பட்டது. இதன் மூலம் அரசாங்கத்தின் கொள்கை குறித்து முதலீட்டு சமூகத்தினரிடம் காணப்படுகின்ற நம்பகத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

கருத்திட்டத்தின் அங்கீகரிக்கும் செயல்முறைக்காக செலவாகும் காலத்தைக் குறைத்தல் மற்றும் வினைத்திறனுடன் முதலீட்டாளர்களின் பிரச்சினைகளை தீர்த்தல் ஆகியவற்றுக்காக முதலீட்டு சபையின் மூலம் 2017 ஆம் ஆண்டில் ஆரம்ப முன்னெடுப்புக்கள் பல எடுக்கப்பட்டுள்ளன. கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவின் மூலம் அது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற திணைக்களங்களுடன் அனுமதியை வழங்கும் போது முதலீட்டாளரின் விண்ணப்பப் படிவங்களை உடனடியாக பரிசீலனை செய்யப் படுகின்ற அதேவேளையில், முதலீட்டாளர்கள் முகம்கொடுக்கின்ற சகல செயற்பாட்டு பிரச்சனைகளுக்கும் அவசரமாக தீர்வுகள் வழங்கப்படுகின்றன. முதலீட்டுக்கான வசதிகளை வழங்குகின்ற நிறுவனம் என்ற வகையில் இலங்கை முதலீட்டுச் சபை முதலீட்டுக்கான அனுமதியை வழங்கும் போது செய்முறையின் வசதிகளை வழங்கும் பிரிவாக செயற்படுகின்ற தனிச் சாளர முதலீட்டுக்கான வசதிகளை வழங்கும் செயலாற்றுகை அணியை அறிமுகப்படுத்தி சேவை வழங்குவதனை மேம்படுத்துவதற்காக ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள அதேவேளையில் அதன்மூலம் உரிய விதத்திலான பின்னணியை அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டினூடாக கருத்திட்டத்தை அனுமதிக்கும் செயல்முறையை துரிதப்படுத்துவதற்காக தொடர்புடைய நிரல் முகவர் நிலையங்களுடன் தேவையான கூட்டிணைப்பை வழங்குகிறது.

இலங்கை முதலீட்டுச்சபையினால் தற்போது இருக்கின்ற முதலீட்டாளர்களுக்கு அவர்களின் முதலீட்டினை விரிவுபடுத்துதல், மீண்டும் முதலீடு செய்தல் மற்றும் அவர்களின் பிரச்சினைகள் இருக்குமாயின் அவற்றை தீர்ப்பதன் மூலம் வியாபாரத்தை மேம்படுத்துவதற்காகவும் அதேபோன்று ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட உற்பத்தி மற்றும் சேவை துறைகளின் மக்கள் புதிய முதலீட்டாளர்களை கவர்ந்தீர்ப்பதற்கான தூதுவர்களாக பயன்படுத்திக்கொள்வதற்கு உதவுவதற்காக மீள் முதலீட்டு செயலாற்றுகை அணியொன்று தாபிக்கப்பட்டுள்ளது.

எமது ஊழியர்கள் முன்னணி வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களை கவர்ந்தீர்ப்பதற்கும் அவர்களுக்கான வசதிகளை வழங்குவதற்கு தேவையான நிபுணத்துவத்தையும் கொண்ட “எதிர்காலத்தில் தயாரான தரப்பினர்” என்பதை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை முதலீட்டுச் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. உலக வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதலீட்டு ஊக்குவிப்பு சான்றுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஹாவட் பல்கலைக்கழகத்தின் சர்வதேச அபிவிருத்திக்கான நிலையத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட Problem driven interactive adaptation நிகழ்ச்சித்திட்டம் என்பன முதலீட்டுச் சபையின் பதவியினரின் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வசதிகளை வழங்கும் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்கு உதவியாக இருந்தது.

இலங்கை முதலீட்டுச் சபையின் எதிர்கால பணிகளை நிறைவேற்றுவதற்காக அதி கூடிய தகைமையைக்கொண்ட பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள அதே வேளையில் பதவியினரின் தொடர்பாடல் திறன்களை மேம்படுத்துவதற்காக Toastmaster International - Colombo toastmasters மூலம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

எதிர்காலத்தில் எடுத்து நோக்கும் போது உலகின் முன்னணி பொருளாதார நிலைமையை அடைந்து கொள்வதற்குத் தேவையான உயர் தொழில்நுட்பங்களையும் மதிப்பையும் உருவாக்குவதனை கவர்ந்தீர்ப்பதற்கு இலங்கை முதலீட்டுச்சபை உறுதி பூண்டுள்ளது. நிலைபேறான சூழல் உட்பட எமது அடிப்படை மதிப்பைப் பாதுகாத்து இதனை மேற்கொள்ளுதல் வேண்டும்.

2017ஆம் ஆண்டில் விசேட செயலாற்றுகையினை அடைந்து கொள்வதற்காக எம்மை வழிநடாத்திய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கும் அவர்களின் விஷேட தலைமைத்துவத்திற்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்ற அதேவேளையில் கடந்த வருடத்தில் முதலீட்டு சபையின் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு பங்களிப்பினை வழங்கிய அதன் ஊழியர்களுக்கு எனது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலீட்டாளர்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் எமக்கு வழங்குகின்ற உதவிகளுக்கும் விசேட நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்ற அதேவேளையில் எதிர்காலத்திலும் இலங்கை முதலீட்டுச் சபை தொடர்ச்சியான உதவியைச் அவர்களுக்கு வழங்குவதற்கு உறுதிபூண்டுள்ளது.

# பணிப்பாளர் சபை 2017



திரு. துமிந்ர ரத்நாயக்க
- தலைவர்



திரு. சாகர குணவர்தன
- அங்கத்தவர்



திரு. அஜித் குணவர்தன
- அங்கத்தவர்



திரு. ஹேமன்த விக்ரமசிங்ஹ
- அங்கத்தவர்



பொறி. மங்கள பீ.பீ. யாப்பா
- அங்கத்தவர்

# நோக்கு

*“ஆசியாவின் நிலையான முதலீடுகளுக்காக அதிசிறந்த கவர்ச்சிமிக்க கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைத்தல்.”*

# பணி

*“இலங்கைக்கு தரமான முதலீட்டினைக் கவர்ந்தீர்ப்பதற்கும் அதனை தக்க வைப்பதற்கும் உள்ள சாத்திய தன்மையை நிறைவேற்றுவதற்காக மேம்படுத்தப்பட்ட ஏற்றுமதி அடிப்படையொன்றுக்கு இட்டுச் செல்வதற்கும் மிகச்சிறந்த தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்கம் என்பவற்றினூடாக அறிவையும் திறன்களையும் மேம்படுத்துவதற்கும் இலங்கை முதலீட்டுச்சபை நேர்மறையாகவும் வேகமாகவும் செயலாற்றுகின்றது.”*

# இலங்கை முதலீட்டுச் சபையின் பக்கத் தோற்றம்

முதலீட்டு மேம்பாடு மற்றும் அதற்கான வசதிகளை வழங்குவதற்கான பிரதான நிறுவனமாகிய இலங்கை முதலீட்டுச் சபை 1978 ஆம் ஆண்டில் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் நியதிச்சட்ட நிறுவனமொன்றாக தாபிக்கப்பட்டது. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் அதிகாரம் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் வரையறைகளை விதிக்கப்பட்டுள்ள விசேட பிரதேசங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. ஆரம்ப அபிவிருத்தி மாதிரி, விசேட சலுகைகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்கியுள்ள விசேட பிராந்திய ஏற்றுமதி ஊக்கவிப்பு வலயங்களாக வரையறைகளை விதிப்பதாகும். இந்த வலயங்கள் ஆரம்பத்தில் கட்டுநாயக்க மற்றும் பியகம பிரதேசங்களில் தாபிக்கப்பட்டன. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு 1992 ஆம் ஆண்டில் முழு நாட்டையும் உள்ளடக்கக்கூடிய விதத்தில் அதன் விடயப்பரப்பை விரிவுபடுத்தி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றிக்கொள்ளப்பட்ட சட்டமொன்றின் மூலம் இலங்கை முதலீட்டுச் சபை என மாற்றப்பட்டது. அன்றிலிருந்து முதலீட்டுச் சபையானது, கைத்தொழில் ஏற்றுமதித் துறையில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டு மேம்பாடு, கூட்டிணைப்பு மற்றும் வசதிகளை வழங்குவதற்காக பிரதானமாக பொறுப்புக்கூறவேண்டிய நிறுவனத்திலிருந்து சேவை மற்றும் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் துறைகளுக்கும் முதலீட்டு மேம்பாடு, கூட்டிணைப்பு மற்றும் வசதிகளை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்கிய அதன் தற்போதைய பணிகள் வரை படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது.

மேலும், இலங்கையில் 04 மாகாணங்களை உள்ளடக்குகின்ற 12 ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள் முதலீட்டுச் சபையின் கீழ் தொழிற்படுகின்றன.

## நோக்கங்கள்

பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்தல், ஊக்குவித்தல், பொருளாதார அடிப்படையினை விரிவுபடுத்தலும், பலப்படுத்தல், உள்நாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை ஊக்குவித்தல், விருத்தி செய்தல், அந்நிய நாட்டுச் செலாவணி உழைப்பு வகைகளைப் பல்வகைப்படுத்தல், ஏற்றுமதிச் சம்பாத்தியத்தை அதிகரித்தல், நாட்டுக்குள் கைத்தொழிலையும் தொழில்முயற்சிகளையும் தாபித்து அபிவிருத்திசெய்து ஊக்குவித்தலும் வளர்த்தலும் இலங்கை முதலீட்டு சபையின் பிரதான நோக்கங்களாகக் கருத முடியும்.

## பங்களிப்பு

அரச முதலீட்டுக் கொள்கையினை அமுல்படுத்துவதற்கு உதவிகளை வழங்கும் முன்னணிப் பிரிவாக முதலீட்டுக்கான சந்தர்ப்ப இலக்குகளை வகுத்தல், முதலீட்டுகளுக்கான வாய்ப்புக்களைப் போன்று தேசிய பொருளாதார விருத்தியினை இலக்காகக் கொள்வதற்கான பங்களிப்புக்களை வழங்கி நேரடி வெளிநாட்டு முதலீட்டு மட்டத்தினைக் கிரமமாக அதிகரிப்பதும் எமது செயற்பாட்டுப் பணிகளாக அமைந்துள்ளன.

இலங்கையில் உயர் பெறுமதி சேர்க்கப்பட்ட / உயர் தொழில்நுட்ப உற்பத்தித் துறை, உயர் பெறுமதி சேர்க்கப்பட்ட ஆடைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் இணைந்த சேவைகள், சுற்றுலா வர்த்தகம், உணவு பதனிடல், ஏற்பாட்டியல், கல்வி மற்றும் பாரிய அளவிலான உட்கட்டமைப்பு வசதிகள், அல்லது ஏனைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவுகளின் செயற்றிட்டங்களை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களுக்காக அனுசரணைகள் மற்றும் வசதிகளை வழங்கும் முதன்மை நிறுவனமாக முதலீட்டுச் சபை செயற்படுகின்றது. தேவையான தகவல்கள் மற்றும் வழிகாட்டல்கள், செயற்றிட்ட விண்ணப்பப்படிவத்தினைக் கையளிப்பதற்கு முன்னர் வழங்கப்படுவதுடன் ஏனைய முகவர் நிறுவனங்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள தேவையான சந்தர்ப்பங்களில் இலங்கை முதலீட்டுச் சபையின் மூலம் தேவையான இணைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊக்குவிப்பு கொடுப்பனவுகளுக்கு அமைய சலுகைக் கட்டணங்களை அங்கீகரித்து அச் சலுகை கட்டணங்களை வழங்குதல், வெளிநாட்டு நபர்களின் வீசாக்களை வழங்குவதற்கு இலங்கை முதலீட்டு சபை மூலம் அந்தந்தப் பிரிவுகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை மதிப்பீடு செய்தல்.

இலங்கை முதலீட்டு சபை மூலம் செயற்திட்டத்தை ஆரம்பிப்பது தொடக்கம் அமுல்படுத்தப்படும் வரை முழுமையான செயற்திட்டச் சுற்று முழுவதும் முதலீட்டாளர்களுக்கு உதவிகள் வழங்கப்படுவதுடன் செயற்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்காக ஏற்றுமதி/ இறக்குமதித் தீர்வினை வழங்குதல், மூலதனப் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களுக்காகவும் முடிவுப்பொருள் ஏற்றுமதிக்காகவும் சுங்கச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் அதற்காக தலையீடுகளை மேற்கொள்வதும் இலங்கை முதலீட்டு சபையின் பணியாகும்.

மிகக் குறைந்த காலப்பகுதிக்குள் செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்காக முதலீட்டாளர்களுக்குப் பொருத்தமான சூழலை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களின் சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் விருத்தி செய்வதற்காக இலங்கை முதலீட்டு சபை நிதி முதலீடுகளை மேற்கொள்கின்றது.

BOI
SRI LANKA

# 40 வருட உன்னதத்தன்மை
# 2017 ஆம் ஆண்டின் விசேட நிகழ்வுகள்

முதலீட்டுச் சபையின்கீழ் 2500 இற்கும் மேற்பட்ட கம்பனிகள் தொழிற்படுகின்றன.
800 (பிரிவு 16) -1700 (பிரிவு 17)

பொருளாதார அபிவிருத்திக்கு ஐ.அ.டொ.15 பில்லியன் இற்கும் மேற்பட்ட திரண்ட நேரடி வெளிநாட்டு முதலீட்டுப் பங்களிப்பு.

2017 இல் இதுவரை பதிவாகிய ஐ.அ.டொலர் 1.7 பில். நேரடி வெளிநாட்டு முதலீடு.

70% சதவீத தேசிய ஏற்றுமதிக்கும் 84% சதவீத கைத்தொழில் ஏற்றுமதிக்கும் பங்களிப்புச் செய்தல்

500,000 நேரடி வேலைவாய்ப்புக்கள்

12 ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை/ கைத்தொழில் பேட்டைகளை நிருவகித்தல்
3 புதிய உத்தேச வலயங்களுக்குத் திட்டமிடுதல்.

முதலீட்டு வசதிகளை வலுவூட்டுதல்

# இலங்கையின் நிலத்தோற்றத்தை மாற்றுவதற்கான ஊக்கி



கொழும்பின் வான்வழியை மாற்றுதல்



இளைஞர்களின் எதிர்பார்ப்பக்களை மாற்றுதல்



முதலீட்டாளரின் புலக்காட்சியை மாற்றுதல்



ஊயர் தொழில்நுட்பத்தை நோக்கிய மாற்றம்



இலங்கையின் தேசப்படத்தை மாற்றுதல்

## ஒரே பார்வையில் முதலீட்டுச் சபை

### நேரடி வெளிநாட்டு முதலீடு (1978 - 2017)

திரண்ட நேரடி வெளிநாட்டு முதலீடு (1978 முதல் 2017 வரை) : ஐ.அ.டொ.15,015 மில்லியன்கள்.




*மூலம்: முகாமைத்துவ தகவல் தொகுதி, இலங்கை முதலீட்டுச் சபை*

### இலங்கையில் முதலீடு செய்துள்ள முதல் 10 நாடுகள் (2008 - 2017)




*மூலம்: முததொ இமுச*

### துறை ரீதியாக வெளிநாட்டு நேரடி முதலீடு (2008 - 2017)




*மூலம்: முகாமைத்துவ தகவல் தொகுதி, இலங்கை முதலீட்டுச் சபை*

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வெளிநாட்டு நேரடி முதலீடு (2008 - 2017)**




*மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் மத்திய வங்கி*

**தேசிய ஏற்றுமதிகளுக்கான பங்களிப்பு (2008 - 2017)**




*மூலம்: முகாமைத்துவ தகவல் தொகுதி, இலங்கை முதலீட்டுச் சபை*

**தேசிய வேலைவாய்ப்புக்கான பங்களிப்பு (2008 - 2017)**

**முதலீட்டுச் சபை தொழில்முயற்சிகள் : மொத்த ஊழியப் படைக்காக 6% பங்களிப்பு**




*மூலம்: முகாமைத்துவ தகவல் தொகுதி, இலங்கை முதலீட்டுச் சபை*

# 2017 ஆம் ஆண்டில் புதிய முன்னெடுப்புக்கள்

**முதலீட்டு அங்கீகார செயல்முறையை துரிதப்படுத்துவதினூடாக முதலீட்டுக்கு வசதியளித்தலை வலுவூட்டுதல்**

பின்வரும் குழுக்களை தாபிப்பதன் மூலம் அங்கீகரிக்கும் செயல்முறைக்காக செலவிடப்படுகின்ற காலத்தை குறைப்பதற்கும் முதலீட்டாளர்களின் பிரச்சினைகளை வினைத்திறனுடன் தீர்ப்பதற்கும் இலங்கை முதலீட்டு சபையினால் பல முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டுள்ளன.

- **கருத்திட்ட பரிசீலனைக் குழு (PSC)**

இலங்கை முதலீட்டுச் சபைக்கு கிடைக்கின்ற சகல கருதிட்டங்களையும் பரிசீலனை செய்வதற்கும் தற்போது காணப்படுகின்ற மற்றும் சாத்தியமுள்ள முதலீட்டாளர்களுக்கும் உள்ள நடைமுறைப்படுத்தும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக முதலீட்டாளர்களுக்கு வசதிகளை வழங்கும் செயற்பாடுகளை முறையாக தடைகள் இன்றி மேற்கொள்வதற்காக பணிப்பாளர் நாயகம் அவர்களின் தலைமையின் கீழ் தொடர்புடைய சிரேட்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய கருத்திட்ட பரிசீலனைக் குழு வாராந்தம் ஒன்று கூடுகின்றது.

- **தனிச் சாளர முதலீட்டுக்கான வசதிகளை வழங்கும் செயலணி (SWIFT)**

முதலீட்டுக்கான வசதிகளை வழங்கும் நிறுவனம் என்ற வகையில் முதலீட்டு சபையினால் பணிகளை அடிப்படையாகக் கொண்ட பிரயோக மேடை ஒன்றினூடாக கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் செயல்முறையை துரிதப்படுத்துவதற்காக தனிச் சாளர முதலீட்டுக்கான வசதிகளை வழங்கும் செயலணியினால் (SWIFT) தொடர்புடைய நிரல் நிறுவனங்களுக்கு தேவையான கூட்டிணைப்பு வசதிகளை வழங்குகிறது. தனிச் சாளர முதலீட்டுக்கான வசதிகளை வழங்கும் செயலணியினால் இணக்கப்பாடுகள் சம்பந்தமாக முதலீட்டாளர்களின் விழிப்பணர்வு அதிகரிக்கப்படுகின்ற அதேவேளையில் அங்கீகரிக்கும் செயல்முறை முழுவதும் முதலீட்டாளர்கள் வழிகாட்டும்.

இதன் மூலம் உரிய நுட்பமுறையின் தகவல்களின் வெளிப்படைத் தன்மை மேம்படுத்தப்பட்டுள்ள அதேவேளையில் நிரல் நிறுவனங்களின் செயல்முறைகள் இலகுபடுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று மிகமுக்கியமான 24 நிரல் நிறுவனங்கள் படிமுறை அணுகுமுறையினைப் பின்பற்றி ஒரே மேடையின்கீழ் தொடர்புபடுத்தப்படும்.

- **காணி ஒதுக்கீட்டுக் குழு**

முதலீட்டுச் சபையின் காணி தேவைப்படுகின்ற கருத்திட்ட முன்மொழிவுகள் தொழில்நுட்ப மற்றும் நிதிரீதியான தகுதிறன்களுக்கு இணங்க மதிப்பீடு செய்வதற்காக காணி ஒதுக்கீட்டுக் குழு தாபிக்கப்பட்டுள்ளது.

- **மீள் முதலீட்டு செயலாற்றுகைக் குழு**

தற்போதிருக்கின்ற முதலீட்டாளர்களுக்கு மீண்டும் முதலீடு செய்வதற்கும் அவர்களின் கருத்திட்டங்களை விரிவுபடுத்துவதற்கும் அல்லது மேம்படுத்துவதற்கும் அவர்களுக்கு உள்ள தடைகளுக்கான வசதிகளை வழங்குதலும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முதலீட்டுச் சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. மேலும் அதன்மூலம் தற்போதிருக்கின்ற முதலீட்டாளர்களினால் முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் உள்ள புதிய முதலீட்டாளர்களை அடையாளம் காண்பதும் மேற்கொள்ளப்படுகின்றன.

- **கருத்திட்டங்களை பரிசீலனை செய்து மதிப்பீடு செய்வதற்கான முறைமை**

தகுதியான முதலீட்டாளர்களை அடையாளம் காண்பதற்கும் நம்பகத் தன்மையற்ற முதலீட்டாளர்களை கைவிடுவதற்கும் கருத்திட்டத்தை பரிசீலனை செய்து மதிப்பீடு செய்வதன்மூலம் முதலீட்டுச் சபை உத்தியோகத்தர்களுக்கு சாத்தியமுள்ள கருத்திட்டத்தின் பொருட்டு கூடுதலான காலத்தை செலவிடக்கூடிய விதத்தில் முதலீட்டுச் சபையின் முதலீட்டாளர்களை மதிப்பீடு செய்யும் செயல்முறையை மேம்படுத்துவதற்காக McKinsey (மெக்கின்சே) ஆலோசகர்களினால் முறைமையொன்று விருத்தி செய்யப்பட்டுள்ளது.

**புதிய முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களை அபிவிருத்தி செய்வதற்காக காணிகளை அடையாளம் காணல்.**

நாட்டில் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அரசாங்கத்தின் முன்னெடுப்புகளுக்கு இணையாக ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை அபிவிருத்தி செய்வதற்காக காணிகளை அடையாளம் காண்பதற்கு சரியான வழிவகைகளை மேற்கொள்ளுதல் அதேபோன்று புதிய ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டாளர்களைக் கண்டறிதல் என்பன முதலீட்டுச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முதலீட்டு

வலயங்களை தாபிப்பதற்கு பொருத்தமான காணிகள் என அடையாளம் காணப்பட்டுள்ள காணிகளிடையே பிங்கிரிய, மாத்தறை சாலி மவுன்ட் எஸ்டேட், மில்லனிய ஆகிய மூன்று இடங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**புதிய ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களைத் தாபிப்பதற்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள்**

இந்த நோக்கத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ரூ.2.5 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

***உத்தேச மில்லனிய கைத்தொழிற்பேட்டை***

- அரசாங்க தனியார் ஒத்துழைப்பு மாதிரியொன்றாக கைத்தொழில் வலயங்களைத் தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
- கைத்தொழில் பிரதேசங்களுக்காக காணி (244 ஏக்கர்) சுவீகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- சூழல் தாக்க மதிப்பீட்டுக்காகத் தொடர்புடைய தரப்பினர்களுடன் முதலாவது கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.
- களுத்துறையிலிருந்து வேலைத்தள எல்லை வரை ஆரம்ப மின்சாரம் வழங்கும் (தற்காலிக) வசதிகளை நிர்மானிப்பதற்காக ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- நிரந்தர மின் வழங்கலுக்காக உப மின்வலு நிலையமொன்றைத் தாபிப்பதற்காக வக வத்த பேர்த் தோட்டத்தில் 5 ஏக்கர் காணியை விடுவிப்பதற்காக முதலீட்டுச் சபையினால் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது.

***பிங்கிரிய புதிய கைத்தொழில் வலயத்தின் முன்னேற்றம்***

- அபிவிருத்தி திறமுறை மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் காணிகளை சுவீகரிப்பதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- அபிவிருத்தி திறமுறை மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் காணிகளை சுவீகரிப்பதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- நில ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ஆரம்பத்தில் நாளொன்றுக்கு 1000 கன மீட்டர் நீரை வழங்குவதற்காக கோரிக்கை மற்றும் அதற்காக நீர் வழங்கல் சபை மதிப்பீட்டுக் கொடுப்பனவை மேற்கொள்வதற்காக அபிவிருத்தி திறமுறை மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
- மெகா வோட் மின்சாரத்தை வழங்குவதற்காக மின்சார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட




மதிப்பீட்டுக்காக கொடுப்பனவைச் செய்வதற்கு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

- முதலீட்டுச் சபையினால் எண்ணக்கரு ரீதியான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சூழல் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்காக தொடர்புடைய தரப்பினர்களுடன் முதலாவது கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளது.

**முதலீடுகளைக் கவர்ந்தீர்ப்பதற்காக இலக்கு வைக்கப்பட்ட அணுகுமுறை**

இலங்கை முதலீட்டுச் சபையினால் நேரடி வெளிநாட்டு முதலீட்டைக் கவர்ந்தீர்ப்பதற்கான இலக்கு வைக்கப்பட்ட துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ள அதேவேளையில் சர்வதேச அபிவிருத்திக்கான ஹாவாட் பல்கலைக் கழகத்தின் நிலையம் மற்றும் உலக வங்கியின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வினூடாக முதலீட்டினை அதிகரிக்கும் துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இலக்கவைக்கப்பட்டுள்ள துறைகளை அடையாளம் காணும்போது அந்நியச் செலாவணி சம்பாத்தியத்தை அதிகரிப்பதனை நோக்காக்கொண்டு ஏற்றுமதியை நோக்காக்கொண்ட வர்த்தகப் பண்டங்கள் அதேபோன்று சேவைகளுக்காகவும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**முதலீட்டு ஊக்குவிப்புக்காக முன்னணி இலக்கு வைக்கப்பட்ட துறைகளை அடையாளம் காணுதல்**

பின்வரும் அளவீட்டு கருவிகளைப் பயன்படுத்தி முன்னணி இலக்குத் துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

- இலங்கையில் வளங்கள் சந்தைக்காக பொருத்தமான விதத்தில் இருத்தல். (உதாரணம்: இலங்கையில் முடிப்புப் பொருள் மிகப் பலமாக இருக்கின்ற அதேவேளையில் நேரடி வெளிநாட்டு முதலீட்டைக் கவர்ந்தீர்ப்பதில் தடைகள் கிடையாது)

- இலங்கையில் நேரடி வெளிநாட்டு முதலீட்டு சாத்தியத் தன்மையுடன் மிகவும் பொருந்துகின்ற துறை என்ன என்பது.

- தரம், எண்ணிக்கை மற்றும் வளங்கள் செலவு ஆகியவற்றைக் கவனத்திற்கொள்ளும்போது போட்டிக்குரிய நாடுகளுடன் தெளிவாக சாதகமான நிலைமைகள் காணக்கூடிய துறைகள்.

### *முன்னுரிமை இலக்கு வைக்கப்பட்ட துறைகள்*

- உயர் பெறுமதி சேர்க்கப்பட்ட உயர் தொழில்நுட்பத் தயாரிப்புகள் (வாகனங்களின் உதிரிப் பாகங்கள், மருத்துவ உபகரணங்கள், மருந்து, சூரிய கலம், வடிவமைக்கப்பட்ட உலோகப் பாகங்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட கனிப்பொருட்கள்)

- பெறுமதி சேர்க்கப்பட்ட ஆடைகள் (ஸ்மார்ட் புடவைகள், அணியக்கூடிய தொழில்நுட்பங்கள், சந்தை விசேட ஆடை உற்பத்திகள்)

- உணவு பதனிடல் (மீன், கடலுணவுகள், பழங்கள், மரக்கறிகள் மற்றும் பால் உற்பத்திகள்)

- சேவைத் துறைகள்

- தகவல் தொழில்நுட்ப சேவைகள் (தகவல் தொழில்நுட்ப மென்பொருள், BPM, KPM).

- சுற்றுலாக் கைத்தொழில் (ஹோட்டல்கள், உல்லாச நடவடிக்கைகள், .......... விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்)

- கொண்டுசெல்லல் வசதிகள் (கைத்தொழில் வர்த்தகம், போக்குவரத்து, பண்டகசாலை மற்றும் களஞ்சியம்)

- கல்வி (தொழில்சார் மற்றும் உயர்கல்வி ஆகிய இரண்டும்)

### *முதலீட்டாளர்களுக்கு வசதியளிப்பதற்கான முதலீட்டினை வலுவூட்டுதல்*

மேலே குறிப்பிடப்பட்ட ஆரம்ப முன்னெடுப்புகளுக்கு மேலதிகமாக இலங்கை முதலீட்டுச் சபையினால் கொள்கை மட்டத்திலான முதலீட்டுப் பிரச்சினைகளை வினைத்திறனுடன் தீர்ப்பதற்கும் அங்கீகரிக்கும் செயல்முறையை துரிதப்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் இரண்டு குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

### தனிச் சாளரத்தில் முதலீட்டை அங்கீகரிக்கும் குழு

பாரிய கருத்திட்டங்களுக்கு அங்கீகாரமளிப்பதற்காக அரசாங்கத்தின் மூலம் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட திறைசேரி செயலாளரின் தலைமையிலான தனிச் சாளர முதலீட்டை அங்கீகரிக்கும் குழு தாபிக்கப்பட்டுள்ள அதேவேளையில் முதலீட்டுச் சபையினால் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க தாக்கத்தைச் செலுத்துகின்ற கருத்திட்டத்திற்கு ஆரம்ப அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தக் குழுவுக்கு அனுப்பப்படுகின்றது.

### *முதலீட்டு அங்கீகாரத்திற்காக வசதியளிக்கும் குழு*

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் ஆலோசகரின் தலைமையிலான முதலீட்டு அங்கீகாரத்திற்காக வசதியளிக்கும் குழுவில் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதனைத் தாமதிக்கின்ற தடைகள் மற்றும் நிரல் அமைச்சுக்களுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்காக தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்புடைய நிரல் அமைச்சினதும் முதலீட்டுச் சபையின் பங்குபற்றுதலுடனும் பல பிரச்சினைகள் வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டுள்ளன.



# 40 ஆவது ஆண்டு நிறைவுவிழா











2017 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டுச் சபை அதன் 40 ஆவது ஆண்டினைப் பூர்த்திசெய்துள்ளது. கொழும்புக்கு வெளியிலுள்ள பிரதேசங்களிலுள்ள அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு என 1978 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் 1992 ஆம் ஆண்டில் 14 வருடங்களின் பின்னர், முழு நாட்டையும் உள்ளடக்கியதாக இலங்கை முதலீட்டுச் சபை என மீண்டும் தாபிக்கப்பட்டது.

இலங்கை முதலீட்டுச் சபை கடந்த 04 தசாப்தங்கள் முழுவதும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க தாக்கமொன்றைச் செலுத்துகின்ற வளர்ச்சியின் இயந்திரமாக செயற்பட்டு வருகின்றது. அதனால் இலங்கை முதலீட்டுச் சபை சமூக ரீதியான மாற்றமொன்றை ஏற்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்ற அதேவேளையில் இலங்கை 40 வருட காலத்தில் துரிதமாக பூகோளமயமாகின்ற உலகுடன் இணைந்து இந்நாட்டின் பொருளாதார மற்றும் சமூக ரீதியான புரட்சிகர மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு துணைபுரிந்துள்ளது.

# மைல்கற்கள்

**1978** — 1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின்கீழ் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு தாபிக்கப்பட்டது.

**1979** — இலங்கையில் முதலாவது மற்றும் பாரிய ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயமாகிய கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் தாபிக்கப்பட்டது.

**1986** — இலங்கை முதலீட்டுச் சபையின் இரண்டாவது ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் பியகமவில் தாபிக்கப்பட்டது.

**1990** — வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக்குழு மற்றும் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு என்பன ஒன்றிணைந்து இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டினை அனுமதிக்கும் ஏக அதிகாரத்தை கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவிற்குக் கிடைத்தது.

**1991** — தென் மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக கொக்கலை ஏற்றுமதி ஊக்குவிப்பு வலம் தாபிக்கப்பட்டது.

**1992** — கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு இலங்கை முதலீட்டுச் சபை எனப் பெயர் மாற்றப்பட்டது. 200 ஆடைக் கைத்தொழில் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

**1995** — கண்டி கைத்தொழிற்பேட்டை தாபிக்கப்பட்டது.

**1998** — மீரிகம ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் மற்றும் மல்வத்த ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் என்பன தாபிக்கப்பட்டன.

**1999** — ஹொரண ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் மற்றும் வத்துபிட்டிவல ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் என்பன தாபிக்கப்பட்டன.

**2000** — பொல்காவலை, மாவத்தகம மற்றும் மிரிஜ்ஜவில் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

**2001** — சீத்தாவக்கை ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் கைத்தொழில் அபிவிருத்தி சபையிடமிருந்து முதலீட்டுச் சபைக்கு உரிமை மாற்றப்பட்டது.

**2006** — 300 தொழில் முயற்சியாளர்கள் நிழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

**2008** — இலங்கை முதலீட்டுச் சபையின் தலைமை அலுவலகம் நிரந்தரமாக உலக வர்த்தக நிலையத்தில் தாபிக்கப்பட்டது.

**2009** — ஐளுழு 9001:2000 சான்றிதழைப் பெற்றுக்கொண்ட முதலாவது அரசாங்க நிறுவனம் இலங்கை முதலீட்டுச் சபையாகும். முதலீட்டுச் சபையின் யாழ்ப்பாண அலுவலகம் தாபிக்கப்பட்டது.

**2011** — முதற்தடவையாக ஐக்கிய அமெரிக்க டொலர் 01 பில்லியன் நேரடி வெளிநாட்டு முதலீடு அடையப்பெற்றது.

**2013** — "பொதுநலவாய வியாபார பேரவை" கொழும்பில் ஒழுங்குசெய்யப்பட்டது.

**2014** — இலங்கை முதலீட்டுச் சபையினால் "ஆசிய பசுபிக் வியாபார பேரவை 2014" இற்கு அனுசரணை வழங்கியது.

**2017** — 40 ஆவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம் இதுவரை பெற்ற அதிகூடிய நேரடி வெளிநாட்டு முதலீட்டின் அளவு ஐக்கிய அமெரிக்க டொலர் 1.7 பில்லியன்களை அடைந்தமை.

# மேன்நோக்கு

## உலக முதலீட்டு போக்கு 2017

### உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல்

2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட பெறுமதியாகிய ஐ.அ.டொ.1.87 ட்ரில்லியன் பெறுமதியுடன் ஒப்பிடும்போது 2017 ஆம் ஆண்டின் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சலின் அளவு ஐ.அ.டொ.1.43 ட்ரில்லியன் வரை 23% இனால் வீழ்ச்சியடைந்தது. ஏனைய நாடுகளின் முதலீட்டாளர்களுடன் ஒன்றிணைந்தமை மற்றும் சுவீகரித்தல் 22% இனால் குறைவடைந்தமை மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட முதலீடுள் 14% இனால் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிப் போக்கிற்கு முக்கியமான காரணமாக அமைந்தது.

### பிராந்திய ரீதியாக வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல்




*மூலம்: ஐ.நா வர்த்தக மற்றும் அபிவிருத்தி பற்றிய மாநாடு, 2017 ஆம் ஆண்டுக்கான உலக முதலீட்டு அறிக்கை.*

அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு உட்பாய்ந்து சென்ற வெளிநாட்டு நேரடி முதலீடு 2017 ஆம் ஆண்டில் 37% இனால் ஓரளவு குறைவடைந்தது. 2016 ஆம் ஆண்டின் பெறுமதியாகிய 60.6% உடன் ஒப்பிடும்போது 2017 ஆம் ஆண்டின் அபிவிருத்தியடைந்த நாடுகளினால் உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் 49.8% இனை மாத்திரமே அடைந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு உட்பாய்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடு 2017 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ.671 பில்லியன் பெறுமதியில் நிலையாகக் காணப்பட்டது.




*மூலம்: ஐ.நா வர்த்தக மற்றும் அபிவிருத்தி பற்றிய மாநாடு, 2017 ஆம் ஆண்டுக்கான உலக முதலீட்டு அறிக்கை.*

அபிவிருத்தியடைந்து வரும் ஆசிய நாடுகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல் 2017 இல் நிலையாகக் காணப்பட்ட அதேவேளையில் உலகின் பாரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டினைப் பெறும் நாடுகள் அந்த நாடுகளின் நிலைமையை மீண்டும் அடைந்துகொண்டது. 2017 இல் இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் நாடுகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல் 2017 இல் 8% இனால் அதிகரித்தது. இருப்பினும் 2017 இல் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது ஆபிரிக்க நாடுகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடு 21% இனால் வீழ்ச்சியடைந்தது.

அபிவிருத்தியடைந்த நிலைமைக்கு மாறிவருகின்ற நாடுகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல் 2017 இல் 27% இனால் குறைந்துள்ளது அதேவேளையில் அது 2005 ஆம் ஆண்டு முதல் பதிவாகிய இரண்டாவது குறைந்த மட்டமாகும்.

## உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீட்டின் வெளிப்பாய்ச்சல்

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 2017 ஆம் ஆண்டின் உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீட்டின் வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொ.1430 பில்லியன் வரை 2.9% இனால் குறைந்துள்ளது.




*மூலம்: ஐ.நா வர்த்தக மற்றும் அபிவிருத்தி பற்றிய மாநாடு, 2017 ஆம் ஆண்டுக்கான உலக முதலீட்டு அறிக்கை.*

### பிராந்திய ரீதியில் உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீட்டின் வெளிப்பாய்ச்சல்

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்குமான வெளிநாட்டு நேரடி முதலீட்டின் வெளிப்பாய்ச்சல் முறையே 3% இனாலும் 6% இனாலும் குறைந்துள்ளது. இருப்பினும் அபிவிருத்தியடைந்த நிலைமைக்கு மாறிவருகின்ற நாடுகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டின் வெளிப்பாய்ச்சல் 2017 இல் 59% இனால் அதிகரித்துள்ளது.




*மூலம்: ஐ.நா வர்த்தக மற்றும் அபிவிருத்தி பற்றிய மாநாடு, 2017 ஆம் ஆண்டுக்கான உலக முதலீட்டு அறிக்கை.*

# 2017 ஆம் ஆண்டில் இலங்கையின் முதலீட்டுப் பார்வை

## முதலீட்டுச் செயலாற்றுகை - 2017

### 1. 2017 ஆம் ஆண்டில் விண்ணப்பப் படிவங்களை தயாரிப்பதன் முன்னேற்றம்




*மூலம்: முததொ இமுச*

2017 ஆம் ஆண்டில் புதிய கருத்திட்டங்களுக்காக முதலீட்டுச் சபையிடம் 106 விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இந்த 106 விண்ணப்பங்களிலும் அனுமதிக்கப்பட்ட 84 கருத்திட்டங்களில் 06 கருத்திட்டங்கள் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்துள்ள அதேவேளையில் 11 கருத்திட்டங்கள் செயற்படுத்துகை நிலையில் காணப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக 2017 ஆம் ஆண்டில் தற்போது காணப்படுகின்ற கருத்திட்டங்களை விரிவுபடுத்துவதற்காக 61 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

## 2. நிலைமை அடிப்படையில் கருத்திட்டத்தின் விபரம்

### ◆ அங்கீரிக்கப்பட்ட கருத்திட்டங்கள்

2017 ஆம் ஆண்டில் அங்கீகாரமளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை ஐ.அ.டொ.4,747 மில்லியன் (ரூ.723,781 மில்லியன்). மொத்த முதலீட்டுப் பெறுமதியுடன் 144 ஆகும். 2017 இல் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களிலிருந்து 37,000 இற்கும் அதிகமான வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**2017 இல் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களில் முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு பகிர்வு - துறைரீதியாக**

| துறை | கருத்திட்டங்களின் | மதிப்பிடப்பட்ட முதலீடு | வேலைவாய்ப்புக்கள் |
|---|---|---|---|
| சேவைகள் / உட்கட்டமைப்பு | 52 | 521,776 | 9,382 |
| லீடமைப்பு, சொத்து அபிவிருத்தி | 13 | 31,048 | 2,464 |
| ஹோட்டல் , உணவக சேவை மற்றும் கழியாட்டக் கட்டடத் தொகுதி | 11 | 42,437 | 915 |
| கடை மற்றும் அலுவலகத் தொகுதிகள் | 6 | 101,082 | 1,548 |
| வைத்தியசாலை சேவைகள் மற்றும் மருத்துவ நிலையங்கள் | 3 | 4,480 | 1,228 |
| மின்னுற்பத்தி பொறித்தொகுதிகள் | 3 | 19,827 | 218 |
| கடல்சார் சேவைகள் | 2 | 2,693 | 20 |
| அழைப்பு நிலையங்கள்/ BPO மற்றும் சேவை நிலையங்கள் | 2 | 85 | 160 |
| துறைமுக அபிவிருத்தி | 2 | 314,927 | 2,246 |
| கொள்கலன் சேவைகள், பண்டகசாலை மற்றும் கப்பற் சரக்கு கொண்டுசெல்லல் | 2 | 672 | 94 |
| ஏனையவை | 8 | 4,526 | 489 |
| **உற்பத்தி** | 35 | 72,139 | 14,999 |
| **விவசாயம்** | 2 | 304 | 127 |
| **அமுலிலுள்ள கருத்திட்டங்களின் விரிவாக்கம்** | 55 | 129,561 | 12,725 |
| **மொத்தம்** | 144 | 723,781 | 37,233 |

*மூலம்: முகாமைத்துவ தகவல் தொகுதி, இலங்கை முதலீட்டுச் சபை*

2017 ஆம் ஆண்டில் அங்கீரிக்கப்பட்ட மொத்த முதலீடுகளில் அதிகூடிய பங்களிப்பு (72%) சேவை / உட்கட்டமைப்பு வசதிகள் துறையின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதேவேளையில் கருத்திட்டத்தை விரிவுபடுத்தும் முதலீடு (18%) மற்றும் உற்பத்தித்துறை (10%) அதற்கு அடுத்ததாகப் பங்களிப்புச் செய்துள்ளது.

2017 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின்மூலம் மதிப்பீடுசெய்யப்பட்ட மொத்தத் தொழில் வாய்ப்புக்களில் 40% உற்பத்தித் துறையின் மூலமும் 25% சேவை / உட்கட்டமைப்பு வசதிகள் துறை மூலமும் உருவாக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றன.

### ◆ கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள்

2017 இல் கைச்சாத்திடப்பட்ட கருத்திட்டங்களின் மொத்த எண்ணிக்கையாகிய 103 இல் 56 புதிய கருத்திட்டங்களாகக் காணப்படுகின்ற அதேவேளை 47 கருத்திட்டங்கள் தற்போதிருக்கின்ற கருத்திட்டங்களின் விரிவாக்கம் ஆகும். இந்தக் கருத்திட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த முதலீடு ஐ.அ.டொ.3,462 மில்லியன் (ரூ.527,882 மில்லியன்) ஆகும். அதன்மூலம் 25,900 இற்கும் அதிகமான வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

### ◆ நிர்மானம் / செயற்படுத்துகை ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

2017 இல் 68 புதிய கருத்திட்டங்களும் 8 கருத்திட்ட விரிவாக்கமும் செயற்படுத்துகை / நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டது. செயற்படுத்துகை ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த முதலீடு ஐ.அ.டொ.1400 மில்லியன் (ரூ.213,531.57 மில்லியன்) ஆகக் காணப்பட்டது. எதிர்பார்க்கப்படும் வேலைவாய்ப்புகள் 12,000 இற்கும் அதிகமாகும்.

**அட்டவணை 2: 2017 இல் நிர்மாணத்தை / செயற்படுத்துகையினை ஆரம்பித்துள்ள முதல் 10 கருத்திட்டங்கள் (மதிப்பீடு செய்யப்பட்ட முதலீட்டின் அடிப்படையில்)**

| செயற்றிட்டத்தின் பெயர் | வியாபாரச் செயற்பாடு | மதிப்பீடு வேலைவாய்ப்பு (எண்ணிக்கை) | செய்த முதலீடு (ரூ.மி) | துறை | அமைவிடம் |
|---|---|---|---|---|---|
| த வன் ட்ரான்ஸ் வர்க்ஸ் ஸ்குயார்ஸ் (ப்ரைவேட்) லிமிட்டட் | கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் | 1,350 | 60,300 | உட்கட்டமைப்பு | கொழும்பு |
| கெபிட்டல் டவர்ஸ் லிமிட்டட் | வதிவிடத் தொகுதி | 895 | 16,632 | உட்கட்டமைப்பு | கொழும்பு |
| ப்ளு மவுன்டன் எபார்ட்மன்ட்ஸ் கொழும்பு 04 | கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் | 138 | 16,269 | உட்கட்டமைப்பு | கொழும்பு |
| ஹெவ்லொக் சிட்டி ப்ரைவேட் லிமிட்டட் | கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் | 259 | 15,211 | உட்கட்டமைப்பு | கொழும்பு |
| ஒடெல் ப்ரொப்படீஸ் வன் (ப்ரைவேட்) லிமிட்டட் | கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் | 66 | 14,730 | உட்கட்டமைப்பு | கொழும்பு |
| ரிஜிட் டயர் கோபரேசன் (ப்ரைவேட்) லிமிட்டட் | ரேடியல் மற்றும் திண்ம டயர்கள் | 981 | 10,875 | உற்பத்தி | களுத்துறை |
| ஈ ஏ மெக்ரோ ஹோல்டிங்ஸ் (ப்ரைவேட்) லிமிட்டட் | கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் | 20 | 7,892 | உட்கட்டமைப்பு | கொழும்பு |
| யூனியன் ப்ளேஸ் அபார்ட்மன்ட்ஸ் (ப்ரைவேட்) லிமிட்டட் | தொடர்மாடி வீட்டுத்தொகுதி ஒன்றை நிறுவுதல் | 10 | 7,647 | உட்கட்டமைப்பு | கொழும்பு |
| ஜே.எஸ்.எப். கோப்பரேசன் (ப்ரைவேட்) லிமிட்டட் | சூரியக் கலம் மாற்றல் மற்றும் லெட் குமிழ்கள் உட்பட சூரிய சக்தி தொகுதி | 83 | 5,337 | உற்பத்தி | கம்பஹா |
| மெரைன் ட்ரைவ் ஹொடேல் (ப்ரைவேட்) லிமிட்டட் | 308 அறைகளைக் கொண்ட (நான்கு நட்சத்திர)ஹோட்டல் | 99 | 5,031 | சுற்றுலா மற்றும் உல்லாசம் | கொழும்பு |

*மூலம்: முகாமைத்துவ தகவல் தொகுதி, இலங்கை முதலீட்டுச் சபை*

### ◆ வர்த்தக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள்

2017 ஆம் ஆண்டில் வர்த்தக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை 66 (புதிய கருத்திட்டங்கள் 65 மற்றும் விரிவாக்கல் கருத்திட்டம் 1) ஆகும். இந்தக் கருத்திட்டங்களின் மூலம் ஐ.அ.டொ.470 மில்லியன் (ரூ.71,674 மில்லியன்) வருமானமொன்று கணக்குக் கூறப்படுகின்ற அதேவேளையில் இதன்மூலம் 7,500 இற்கும் கூடுதலான வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன.

### ◆ வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் துறைரீதியான பரம்பல்

2017 வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட 66 கருத்திட்டங்களில் 17 கருத்திட்டங்கள் சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு துறையின் மூலமும் 13 கருத்திட்டங்கள் உற்பத்தித் துறையின் மூலமும் 8 கருத்திட்டங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் துறையின் மூலமும் 4 கருத்திட்டங்கள் சேவைத் துறையின் மூலமும் 2 கருத்திட்டங்கள் விவசாயத் துறையின் மூலமும் 1 கருத்திட்டம் அறிவை அடிப்படையாகக்கொண்ட சேவைத் துறையின் மூலமும் பங்களிப்புச் செய்துள்ளது.

**2017 இல் வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் துறைரீதியான பரம்பல்**




*மூலம்: முகாமைத்துவ தகவல் தொகுதி, இலங்கை முதலீட்டுச் சபை*

### ◆ வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் மாவட்ட ரீதியான பரம்பல்

2017 இல் வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களில் 38% கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அமைந்துள்ளன. எஞ்சிய கருத்திட்டங்கள் 14 மாவட்டங்கள் முழுவதும் பூகோள ரீதியில் வியாபித்துள்ளன.

**2017 ஆம் ஆண்டில் வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் மாவட்ட ரீதியான பரம்பல்**




*மூலம்: முதஜொ இமுச*

## 3. கவர்ந்தீர்க்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடு

2017 இல் இலங்கையில் பதிவாகிய அதிகூடிய வெளிநாட்டு நேரடி முதலீடு வெளிநாட்டுக் கடன்கள் நீங்களாக ஐ.அ.டொ.1,173 மில்லியனுக்கும் வெளிநாட்டுக் கடன் ஆக்கக்கூறுகள் உள்ளடங்களாக ஐ.அ.டொ.1,710 மில்லியன்களுக்கும் கணக்குக் கூறியது.

### துறைரீதியாகக் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு நேரடி முதலீடு

2017 இல் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் ஐ.அ.டொ.541 மில்லியன் (32%) ஆகிய அதிகூடிய தொகை வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி துறைக்காகக் கிடைத்துள்ள அதேவேளையில் அதற்கடுத்ததாக உற்பத்தித்துறை ஐ.அ.டொ.347.6 மில்லியன் (20%) துறைமுக அபிவிருத்தித் துறை ஐ.அ.டொ.293 (17%) ஹோட்டல் துறை ஐ.அ.டொ.253 மில்லியன் (15%) தொலைபேசி மற்றும் தொலைத் தொடர்புகள் துறை ஐ.அ.டொ.209 மில்லியன் (12%) என்றவகையில் கிடைக்கப்பெற்றுள்ளது.

**2017 இல் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு நேரடி முதலீடு (ஐ.ஆ.டொ. மிலி.)**




*மூலம்: முதஜொ இமுச*

**வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பிரதான மூலங்கள் - 2017**

2017 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ.628 மில்லியன்களுடன் சீனா மிகப் பாரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு மூலமாகக் காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஹொங்கொங் (ஐ.அ.டொ.296 மில்), இந்தியா (ஐ.அ.டொ.174 மில்), மலேசியா (ஐ.அ.டொ.88 மில்), சிங்கப்பூர் (ஐ.அ.டொ.81 மில்), நெதர்லாந்து (ஐ.அ.டொ.72 மில்), ஐக்கிய இராச்சியம் (ஐ.அ.டொ.67 மில்), ஜப்பான் (ஐ.அ.டொ.46 மில்), சுவீடன் (ஐ.அ.டொ.43 மில்), ஐக்கிய அமெரிக்கா (ஐ.அ.டொ.38 மில்), அவுஸ்திரேலியா (ஐ.அ.டொ.27 மில்), தாய்லாந்து (ஐ.அ.டொ.22 மில்), பிலிப்பைன்ஸ் (ஐ.அ.டொ.20 மில்), ஐக்கிய அரபு எமிரேட் (ஐ.அ.டொ.19 மில்), டுபாய் (ஐ.அ.டொ.14 மில்) போன்றவை காணப்பட்டன. இந்தப் 15 நாடுகளும் ஒன்றிணைந்து 2017 ஆம் ஆண்டில் கிடைத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் 96மூ இற்குப் பங்களிப்புச் செய்துள்ளது.

**வெநேமு இன் பிரதான மூலங்கள் (ஐஅ கூ மி)**




*மூலம்: முததொ இமுச*

## 4. தேறிய முதலீடு (திரண்ட)

**2017 முடிவிலான திரண்ட தேறிய முதலீடு (%)**




2017 ஆம் ஆண்டின் இறுதியில் தேறிய திரண்ட முதலீடு ரூ.2727 பில்லியனாகக் காணப்பட்ட அதேவேளையில் அது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது 9% வளர்ச்சியாகும். ரூ.2727 பில்லியன் ஆகிய இந்தப் பெறுமதியில் 60% (ரூ.1635 பில்லியன்) மூலம் வெளிநாட்டு ஆக்கக்கூறு மற்றும் எஞ்சிய 40% (ரூ.1092 பில்லியன்) மூலம் உள்நாட்டு தனியார் முதலீடுகளை எடுத்துக்காட்டுகின்றது.

தேறிய திரண்ட மொத்த முதலீடுகளில் 76% இற்கு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைத்துறை பங்களிப்புச் செய்துள்ள அதேவேளை எஞ்சிய 24% ஆடை உட்பட உற்பத்தித்துறை பங்களிப்புச் செய்துள்ளது.

## 5. வேலைவாய்ப்பு (திரண்ட)

**2017 டிசம்பரில் உள்ளவாறு திரண்ட வேலைவாய்ப்பு**




*மூலம்: முததொ இமுச*

2017 டிசம்பரில் உள்ளவாறு முதலீட்டுச் சபையின் கருத்திட்டங்களில் திரண்ட வேலைவாய்ப்பு 494,397 ஆக பதிவாகியுள்ளது.

முதலீட்டுச் சபையின் கருத்திட்டங்களின் திரண்ட மொத்த வேலைவாய்ப்பில் 59% ஆனவை புடைவை, ஆடை மற்றும் தோற்பொருட்கள், ஆகக் காணப்படுகின்ற அதேவேளையில் 20% ஆனவை ஏனைய உற்பத்தித் துறைகளாகக் காணப்படுகின்றன. 2017 இல் மொத்த திரண்ட வேலைவாய்ப்பில் 21% ஆனவை விவசாயம் உட்பட சேவைகள் மற்றும் உட்டகட்டமைப்பு வசதிகள் துறையின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.

## 6. ஏற்றுமதி செயலாற்றுகை

முதலீட்டுச் சபையின் தொழில்முயற்சியாளர்களின் மொத்த ஏற்றுமதியின் அளவு 2017 இல் ஐ.அ.டொ.7,792 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளையில் அதன்மூலம் தேசிய உள்நாட்டு ஏற்றுமதியாளர்களில் 68% ஐயும் உள்நாட்டு கைத்தொழில் ஏற்றுமதியாளர்களின் 84% ஐயும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**2017 இல் இமுச வின் தொழில்முயற்சிகளின் ஏற்றுமதி ( ஐஅகூ மி)**




*மூலம்: முகாமைத்துவ தகவல் தொகுதி, இலங்கை முதலீட்டுச் சபை*

**2017 இல் முதலீட்டுச் சபையின் தொழில்முயற்சிகளின் ஏற்றுமதி (மூ)**




*மூலம்: முததொ இமுச*

2017 ஆம் ஆண்டில் ஏற்றுமதிகளின் மூலம் அதிகூடிய சதவீதம் (63%) ஆடைத்துறையின் மூலம் பிரிதிநிதித்துவப்படுத்திய அதேவேளை மொத்த முதலீட்டுச் சபையின் ஏற்றுமதிகளின் 29% உற்பத்தித்துறையும் (ஆடை தவிர்ந்த) 8% விவசாயத்துறையின் மூலமும் பிரதிநிதித்துவப்படுத்தியது

# பிரிவுகளின் செயலாற்றுகை

## 1. முதலீட்டு ஊக்குவிப்பு பிரிவு

### செயற்பாடுகள்

**முதலீட்டு ஊக்குவிப்புப் பிரிவின் பிரதான பணி புதிய முதலீட்டாளர்களுடன் முதலில் தொடர்புபட்டு தொடர்புடைய இலக்குவைக்கப்பட்ட நாடுகளிலிருந்தும் துறைகளிலிருந்தும் நேரடி வெளிநாட்டு முதலீட்டினைக் கவர்ந்தீர்ப்பதாகும். தற்போது காணப்படுகின்ற முதலீட்டாளர்களிடம் மேம்படுத்தக்கூடிய சாத்தியத் தன்மைகளை அடையாளம் கண்டு அதன்மூலம் அந்த முதலீட்டாளர்களை / கம்பனிகளை ஏனைய மேலதிக முதலீடுகள் குறித்து ஊக்குவிப்பதும் முதலீட்டு ஊக்குவிப்பில் உள்ளடங்குகின்றது.**

**முன்னேற்றம்**

**2017 ஆம் ஆண்டில் நாட்டிலிருந்து வெளிச்சென்ற மற்றும் நாட்டுக்கு வருகைதந்த முதலீட்டு ஊக்குவிப்பு தூ துக்குழுக்கள்**

| நாட்டிலிருந்து வெளிச்சென்ற தூதுக் குழுக்கள் |
|---|
| **அவுஸ்திரேலியா (மெல்பேர்ன்): 2017 பெப்ரவரி 13 - 17** |
| கௌரவ பிரதம மந்திரியின் விஜயத்தையொட்டி மெல்பேர்னில் வட்ட மேசை கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. |
| **தாய்லாந்து : 2017 பெப்ரவரி 15 - 18** |
| தாய் வர்த்தக சம்மேளனத்தில் நடைபெற்ற வட்ட மேசை கலந்துரையாடலைத் தொடர்ந்து ரோஜனா இன்ட். பார்க் பப்ளிக் கம்பனி மற்றும் அமரா கூட்டுத்.உட்பட தெரிவு செய்யப்பட்ட கம்பனிகளுடன் தனித்தனியாக கூட்டங்கள் இடம்பெற்றன.<br>அதனைத் தொடர்ந்து ரோஜனா தொழில்நுட்ப குழு (2017) வருகை தந்ததுடன், 2018 ஆகஸ்டில் ஆர்வம் தெரிவித்து கடிதத்தில் ஒப்பமிடுவதற்காக உயர் மட்ட குழு வருகை தந்தது. |
| **ஹொங்கொங் : 2017 மார்ச் 15 - 18** |
| ஸ்டேன்டட் சார்டட் வங்கியின் அழைப்பின் பேரில் இலங்கை முதலீட்டுச்சபையின் பணிப்பாளர் நாயகம் இலங்கை முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கான நடுவர் குழவின் உறுப்பினராக பங்குபற்றினார். |
| **மொஸ்கோ, ரஷ்யா: 2017 மார்ச் 23 - 25** |
| அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் மொஸ்கோ பயணத்தின் போது இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் உயர்மட்ட கலந்துறையாடலில் பிரதிநிதித்துவப்படுத்தினார். 2017 ஒக்டோபர் மாதத்தில் கொழும்பில் இடம்பெற்ற வர்த்தக, பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு பற்றிய இலங்கை - ரஸ்யா அரசாங்கங்களுக்கு இடையிலான ஆணைக்குழுவின் இரண்டாவது அமர்வில் இமுச பங்குபற்றியது.<br>ரஸ்ய முதலீட்டாளர்களுக்குள்ள வாய்ப்புக்கள் பற்றி இமுச வினால் எடுத்துக் கூறப்பட்ட அதேவேளை, வியாபார தூதுக்குழு பரிமாற்றம் ஊடாக நெருங்கிய முதலீட்டு உறவுகளுக்கான வசதிகளையும் வழங்குவதற்கு இரு தரப்பினரும் உடன்பட்டனர். |
| **ஹனோய், வியட்னாம் : 2017 ஏப்ரல் 15 - 20** |
| இலங்கை முதலீட்டுச்சபையின் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் கௌரவ பிரதமரினதும் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்ட இலங்கை-வியட்னாம் முதலீட்டு பேரவையை பிரதிநிதித்துவ படுத்திய அதேவேளையில் வியட்னாமின் முன்னனி கம்பனிகளுடன் வெவ்வேறாக வியாபார கலந்தரையாடல்கள் நடாத்தப்பட்டன. |
| **துருக்கி : 2017 மே 14 - 20** |
| ஆடையணிச் சங்கத்தின் தலைவரின் அழைப்பின் பேரில் இசுத்தான்புல்லில் உண்மையைக் கண்டறியும் பணி இடம்பெற்றது. |
| **ஓஸாக்கா, ஜப்பான் : 2017 மே 13 - 18** |
| முதலீட்டுச்சபையின் தலைவரினால் மிட்சுபிசி டோக்கியோ UFJ வங்கி, இலங்கை ஜப்பான பொருளாதார கூட்டுறவு குழு மற்றும் மிட்சுபிசி கோப்ரேஸன் ஆகியவற்றுடன் இடம்பெற்ற கலந்தறையாடல்களை பிரதிநிதித்துவ படுத்தினார். |
| **சிங்கப்பூர் : 2017 மே 31 ஜுன் 4** |
| இலங்கை முதலீட்டுச்சபை உலக வங்கியின் நிகழ்ச்சித்திட்ட கலந்துறையாடல் சபையின் உறுப்பினராக பங்குபற்றியது. |

**சுவீடன் மற்றும் டென்மார்க் : 2017 ஜூன் 6 - 9**

மாநகர ஆரம்ப நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ள முதலீட்டு வாய்ப்புக்கள் பற்றி சுவீடன் மற்றும் டென்மார்க் முதலீட்டாளர்களுக்கிடையில் இடம் பெற்ற விளக்கம் அளிக்கும் தூதுக்குழுவுக்காக இலங்கை முதலீட்டு சபை பிரதிநிதித்துவப்படுத்தியது.

போட்ரம் லிமிடட் குழுவொன்று 2017 ஜூன் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் கழிவு முகாமைத்துவம் மற்றும் கழிவுகளிலிருந்து மின் சக்தியை உற்பத்தி செய்யும் ஆற்றல்களை ஆராய்ச்சி செய்வதற்காக இந்நாட்டுக்கு சுற்றுலாவை மேற்கொண்டது.

**துருக்கி : 2017 ஆகஸ்ட் 14 - 19**

துருக்கியில் இடம்பெற்ற இஸ்மீர் சர்வதேச சந்தைக்காக இலங்கை முதலீட்டுச்சபை பங்குபற்றியது.

**இத்தாலி மற்றும் சுவிட்சலாந்து : 2017 செப்டம்பர் 24 - ஒக்டோபர் 2**

மீள் எற்றமதி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக இத்தாலி மற்றும் சுவிட்ஸலாந்தின் முதலீட்டு ஊக்குவிப்பு தூதுக்குழு நிகழ்வொன்று இடம்பெற்றது.

இந்த முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஏற்கனவெ இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள சுவிஸ் கம்பனி ஒன்றின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள அதேவேளையில் பணிப்பாளர் நாயகம் அவர்களும் நிறைவேற்று பணிப்பாளர் (முதலீட்டு சேவைகள்) அவர்களும் பிரதிநிதித்துவப்படுத்தினர். வியாபார வாய்ப்புக்களை தேடிப்பார்ப்பதற்காக இலங்கைக்கு வரகை தருவதற்கு பல கம்பனிகள் விருப்பத்தை தெரிவித்துள்ளன.

கேயூகெ எலகரோனிக் 2018 ஜுன் மாதத்தில் இலங்கையின் தனது முதலாவது விஜயம் பற்றி திர்மாணித்துள்ளது.

**சீனா : 2017 நவம்பர்**

முதலீட்டு ஊக்குவிப்பு கருத்தரங்கு மற்றும் முன்னர் அடையாளங் காணப்பட்ட கம்பனிகளுடனான இலக்கு வைக்கப்பட்ட நகரங்களில் வெவ்வேறான கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

**சிங்கப்பூர் : 2017 நவம்பர்**

சிங்கப்பூரின் ஐநு நிறுவனத்தின் உதவியுடன் முதலீட்டு மற்றும் வர்த்தக ஊக்குவிப்பு தூதுக்குழு ஒன்றை ஒழுங்கு செய்வதற்காக இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் இலங்கை - சிங்கப்பூர் வியாபார பேரவைக்காக முதலீட்டுச் சபையின் அனுசரணை வழங்கப்பட்டது.

**கொரியக் குடியரசு : 2017 நவம்பர்**

அதி மேதகு சனாதிபதி அவர்களின் கொரியாவுக்கான உத்தியோகப்புர்வ விஜயம் தொடர்பாக ஒழுங்க செய்யப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு தூதுக்குழுவுக்காக முதலீட்டு சபையின் தலைவர் பங்குபற்றினார். தெரிவு செய்யப்பட்ட நகரங்களுடன் வெவ்வேறாக உயர்மட்ட மாநாடுகள் நடாத்தப்பட்டன. லொடே பொறியியல் மற்றும் நிர்மானத்துறை கம்பனி இலங்கையின் நிர்மாண கருத்திட்டங்களில் ஈடுபடவதன் வாய்ப்பபுக்களை தேடிப்பார்ப்பதற்கு விருப்பத்தை தெரிவித்துள்ளது. லொடே கம்பனியின் தூதுக்குழு ஏற்கனவே இலங்கைக்கு வருகை தந்து முதலீட்டு சபை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டது.

**நாட்டுக்கு வருகைதந்த தூதுக் குழுக்கள்**

**மலேசியாவின் சைட்டோ கொலேஜ் மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் ஸ்டெபர்ட் எல்பா இன்டநெ'னல், எடியுகேஸ ன் நிறுவனத்தின் தூதுக்குழு பெப்ரவரி 21**

**புடவை மற்றும் ஆடை கைத் தொழிலில் தகவல் தொடரபான வடிவமைப்பு கற்கை நெறியை நடாத்துவதற்காக பயிற்சி நிறுவனம் ஒன்றை தாபிப்பதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளன.இலங்கை முதலீட்டுச் சபை தயக மற்றும் மொரட்டுவை பல்கலைகழகத்துடன் கலந்துறையாடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.**

**சிங்கப்பூரின் மிட்சுயி ஏசியா பசுபிக் வியாபார அலகின் தூதுக்குழு பெப்ரவரி 21**

விடயங்களைத் தேடிப்பார்ப்பதற்கான தூதுக்குழு

**நியூசிலாந்தின் வியாபார தூதுக்குழு மார்ச் 06**

அவுஸ்திரேலிய நியூசிலாந்து வியாபார மன்றம் மற்றும் நியூசிலாந்தின் வர்த்தக மற்றும் வியாபார அமைப்பினால் ஒழுங்குசெய்யப்படுகின்ற வியாபார பேரவைக்காக இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் பங்குபற்றினார். 2017 அக்டோபர் மாதத்தில் நாட்டுக்கு வருகைதந்த தூதுக்குழு மத்தள விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்து அக்கடமி ஒன்றைத் தாபிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்துள்ளது.

**கனடா வியாபார தூதுக்குழு மார்ச் 14**

முதலீட்டுச் சபையின் தலைவரையும் சிரேட்ட உத்தியோகத்தர்களையும் சந்தித்தது. ஜேஜஎம்ஏ கம்பனி லிமிட்டடின் தூதுக்குழு, ஜப்பான் - மார்ச் 23

சூரிய சக்தி கருத்திட்டங்களில் விருப்பத்தைத் தெரிவித்தது.

**ஜப்பான் நாட்டின் மிட்சுபிசி கோப்பரேசன் பினான்ஸ் அன்ட் கொன்சல்டின் ஏசியா லிமிட்டட் தூதுக்குழு - ஏப்ரல் 25**

துறைமுக நகரத்தில் உட்கட்டமைப்புத் துறை மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களில் விருப்பத்தைத் தெரிவித்தது.

**ஜப்பான் நாட்டின் மிட்சுயி அன்ட் கம்பனி தூதுக்குழு - ஏப்ரல் 26**

மின்சாரத் துறையில் விருப்பத்தைத் தெரிவித்தனர்.

**செக் குடியரசின் வியாபார தூதுக்குழு - மே 04**

இலங்கையில் செக் குடியரசின் கௌரவ கொன்சியுலரினால் ஒழுங்குசெய்யப்பட்ட வர்த்தகப் பேரவை மற்றும் அதற்குப் பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலின் முதலீட்டுச் சபையின் தலைவர் பங்குபற்றினார்.

**சீனாவின் குஎன்சி மாகாணத்தின் வியாபார தூதுக்குழு - மே 19**

கைத்தொழிற் பேட்டை மற்றும் துறைமுக அபிவிருத்தி

**தாய்லாந்தின் வணிக அமைச்சு, வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தை திணைக்களம், அரசிறைக் கொள்கை நிறுவகத்தின் தூதுக்குழு - மே 23**

இலங்கையில் முதலீட்டு வாய்ப்புக்கள் சம்பந்தமாக தெரிந்துகொள்வதற்கான கல்விச் சுற்றுலாவாகும். முதலீட்டுச் சபையின் சிரேட்ட உத்தியோகத்தர்களைச் சந்தித்து பியகம மற்றும் அம்பாந்தோட்டை ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் சுற்றுலாவொன்றை மேற்கொண்டனர்.

**சீனாவின் சென்சூ நகர சபைக் குழுவின் தூதுக்குழு - மே 24**

பலிங்குக் கல்லுக்காக பெறுமதிசேர்க்கும் கருத்திட்டம் குறித்து விருப்பத்தைத் தெரிவித்தது.

**ஜப்பான் நாட்டின் மறுபேனி இன்டியா ப்ரைவேட் லிமிட்டடின் தூதுக்குழு - மே 31**

FSRU/LNG விநியோகம் / எண்ணெய்த் தாங்கி போன்ற மின்சாரத் துறைகுறித்து விருப்பத்தைத் தெரிவித்தது. மாநகர, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சுடன் கலந்துரையாடல்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.

**சீனாவின் சென்யங் நகர அரசாங்க பிரிதிநிதிகள் தூதுக்குழு - ஜூன் 01**

கருப்பொருள் பூங்கா அபிவிருத்தி கைத்தொழில்சார்ந்த கருத்திட்டம் குறித்த விருப்பத்தைத் தெரிவித்தது.

**சீனாவின் பூஜியான் மற்றும் லியானின் மாகாணங்களின் வியாபாரத் தூதுக்குழு - 2017 நவம்பர் 26**

சுற்றுலாக் கைத்தொழில், உற்பத்தி மற்றும் சேவைத்துறைகள் குறித்து விருப்பத்தைத் தெரிவித்தது.

**இந்தியாவின் கைத்தொழில் கொன்படரேசன், இந்தியா - ஜூன் 29**

இலங்கை வர்த்தக கபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட "Sri Lanka and Business Conclave" இல் தூதுக்குழு பங்குபற்றிய அதேவேளையில் முதலீட்டுச் சபையின் தலைவர் மற்றும் சிரேட்ட உத்தியோகத்தர்களைச் சந்தித்தது. விவசாயக் கைத்தொழில் / செயல்முறை / IT / BPO, உயர் கல்வி, சுற்றுலா / ஓய்வு மற்றும் LNG துறைகள் குறித்து விருப்பத்தைத் தெரிவித்தது.

**ரொஜானா கைத்தொழில் பேட்டை பொதுக் கம்பனி - ஆகஸ்ட் 21**

2017 பெப்ரவரி மாதத்தில் இடம்பெற்ற தாய்லாந்துக்கான சுற்றுலாவின் பின்னர் முதலீட்டுச் சபையுடன் இலங்கை மில்லனிய கைத்தொழில் பேட்டையின் முகாமைத்துவத்திற்காக கைச்சாத்திடுவதற்கு.

**சீனாவின் சேஜியான் மாகாணத்தின் டொங்யங் நகரின் ஓரியன்டல் பிஸ்னஸ் தூதுக்குழு ப்ளெட்போம் - 2017 செப்டம்பர் 05**

வீடமைப்பு, சுற்றுலா, ஹோட்டல், தொடர்மாடி வீடுகள், கடைதொகுதி, வர்த்தகம் மற்றும் விவசாயத் துறைகளில் முதலீடு செய்வதற்கு விருப்பத்தைத் தெரிவித்தது.

**சீனாவின் ஹென்சூ வியாபார மன்றத்தின் தூதுக்குழு - 2005 செப்டம்பர் 05**

வீடமைப்பு, சுற்றுலா, ஹோட்டல், தொடர்மாடி வீடுகள், கடைதொகுதி, வர்த்தகம் மற்றும் விவசாயத் துறைகளில் முதலீடு செய்வதற்கு விருப்பத்தைத் தெரிவித்தது.

**கேடீஜளம்ஏ தூதுக்குழு, கொரியா - 2017 செப்டம்பர் 06**

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் வியாபாரப் பேரவை மற்றும் டீ2டீ நிகழ்ச்சித்திட்டம்

**ஜின் ஹுவா நகரின் தூதுக்குழு, சீனா - 2017 செப்டம்பர் 19**

நிலைமைகளை ஆராய்வதற்கான தூதுக்குழு

**சீனாவின் சினோ சைன் தூதுக்குழு - 2017 டிசம்பர் 17**

விவசாயம் மற்றும் சுற்றாடல் துறைகளில் முதலீடு செய்வதற்கு விருப்பத்தைத் தெரிவித்தது.

**சீனாவின் கின் காய் மாகாணத்தின் தூதுக்குழு - 2017 டிசம்பர் 21**

விவசாயம் வீடமைப்பு மற்றும் கைத்தொழில் துறைளில் முதலீடு செய்வதற்கு விருப்பத்தைத் தெரிவித்தது.

## 2. ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனைப் பிரிவு

### செயற்பாடுகள்

ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனைப் பிரிவினால் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் தொடர்பான மேம்படுத்தல்களை செய்வதற்கான முன்மொழிவுகளும் ஆலோசனைகளும் சமர்ப்பிக்கப்படுகின்ற அதேவேளையில் அது முதலீடுகளுக்கு உரிய கொள்கை மறுசீரமைப்பு செயற்பாடுகளை துரிதப்படுத்துகின்ற பிரதான காரணிகளாகும். இந்தச் சூழ்நிலையில் இலங்கையின் வியாபார சூழலை மேம்படுத்தும்போது அரசாங்கத்திற்கு உதவி வழங்குவதற்காக பல்வேறு கொள்கைகள், சட்டங்கள் மற்றும் நடவடிக்கை முறைகள் ஆகியவற்றுக்கான மேம்படுத்தல்களுக்கு முன்மொழிவுகளை வழங்கவும் கொள்கை ரீதியான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் இந்தப் பிரிவு பொறுப்பாக இருக்கின்ற அதேவேளையில் அதன்மூலம் தேவைப்படுகின்ற வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டினைக் கவர்ந்தீர்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

#### முன்னேற்றம்

- உலக வங்கியின் முதலீட்டு ஊக்குவிப்பு தூதுக் குழுவினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவியுடன் இலங்கை முதலீட்டுச் சபையின் 2017 - 2020 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவுத் திட்டத்தை மேம்படுத்துவது குறித்து 2017 ஆம் ஆண்டில் செயற்பாடுகளில் முக்கியமான கவனம்செலுத்தப்பட்டது.
- தற்போது இருக்கின்ற மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நாணயமாற்று சட்டத்தைப் பயன்படுத்துவதனை ஆராய்வது தொடர்பாக திணைக்களம் முக்கிய பணியொன்றை ஆற்றியுள்ள அதேவேளையில் புதிய ஊக்குவிப்பு நிர்வாகம் பற்றி சமர்ப்பித்தல் மற்றும் சுருக்கமான பட்டியலின் மூலம் முதலீட்டுச் சபை பதவியணிக்கும் முதலீட்டாளர்களுக்கும் இடையில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.
- முதலீட்டுச் சபையின் கூட்டுறவுத் திட்டத்திற்கு இணையாக உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் முதலீட்டு ஊக்குவிப்பு சான்றுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - IPCP என்ற தலைப்பில் திறன்விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குசெய்யும்போது திணைக்களத்தினால் முக்கியமான பணியொன்று மேற்கொள்ளப்பட்டது.
- மேலும் இலங்கை முதலீட்டுச் சபையின் ஏனைய பிரிவுகளினதும் ஒத்துழைப்புடன் முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கையைத் தயாரிப்பதற்காக பொறுப்புக் கூறவேண்டியது இந்தப் பிரிவாகும்.
- ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனைப் பிரிவு பின்வரும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளது.
  - “இலங்கை அதன் வெளிநாட்டு நேரடி முதலீட்டு இலக்குகளை அடைவதில் ஏன் தோல்விகண்டுள்ளது?, முக்கியமான காரணிகளும் சரியான நடவடிக்கைகளும்” என்ற தலைப்பில் வெள்ளைப்பத்திரமொன்றைத் தயாரித்தல்.
  - முதலீட்டு ஊக்குவிப்புக்கான முன்னணி பிரிவுகளை அடையாளம் காணுதல் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஹாவார்ட் பல்கலைக்கழக நிலையத்தின் ஒத்துழைப்புடன் “முதலீட்டு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புக்காக இலக்கு வைக்கப்பட்ட துறைகள்” என்ற தலைப்பின்கீழ் விபரமான அறிக்கையொன்றைத் தயாரித்தல்.
  - வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக இருதரப்பு முதலீட்டு உடன்படிக்கைகள், சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் விபரமான பொருளாதார பங்குடைமை உடன்படிக்கைகள் உட்பட சர்வதேச முதலீட்டு உடன்படிக்கைகளை வரைவுசெய்தல் / கலந்துரையாடுதல்.
  - இரு நாடுளுக்கிடையில் வர்த்தக மற்றும் முதலீடு தொடர்பான உறவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் பல்வேறு நாடுகளை (அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, ரஸ்யா, வியட்நாம், சீனா, ஜப்பான், கட்டார், சிங்கப்பூர், சுவிட்சர்லாந்து மற்றும் தென் கொரியா) முதன்மையாகக்கொண்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்.
  - உள்வாரி மற்றும் வெளிவாரி பங்குதாரர்களுக்கான தகவல்களை வழங்கும் பணியினை மேற்கொள்ளுதல் மற்றும் முகாமைத்துவத் தகவல் தொகுதி ஆகியவற்றின் மூலம் முதலீடுகளுடன் தொடர்புபட்ட தரவுகளை வழங்குதல்.
  - இலங்கை முதலீட்டுச் சபையின் பிரதான செயலாற்றுகைச் சுட்டி தொடர்பாக இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக காலாண்டு அடிப்படையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

## 3. முதலீட்டு சேவைப் பிரிவு

### செயற்பாடுகள்

இலங்கை முதலீட்டு சபைச் சட்டத்தின் 17 வது வாசகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களுக்காக வழங்கப்படும் சேவைக்கு பிரதானமாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளுக்காக வழங்கப்படும் சேவைக்குப் பின்னரான சேவைகளுக்காக முதலீட்டு சேவைப் பிரிவினால் வசதிகள் வழங்கப்படுகின்றன. மேற்கூறப்பட்ட சேவை வழங்கல்களுக்காக சரக்குப் பொருள் ஒப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ளும் 09 மத்திய நிலையங்களுக்கு மேலதிகமாக கொழும்பு உலக வர்த்தக மத்திய நிலையம், கட்டுநாயக்க, பியகம, கொக்கல ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்கள் உட்பட கண்டி தொழில்நுட்பப் பூங்காவில் அமைந்துள்ள ஐந்து முதலீட்டு சேவை மத்திய நிலையங்கள் இப்பிரிவின் கீழ் அடங்குகின்றன.

முதலீட்டு சேவைப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- ஏற்றுமதி / இறக்குமதி ஆவணங்களைத் தயாரித்தல்.
- சரக்குப் பொருள் ஏற்றுமதி இறக்குமதி ஒப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- ஐரோப்பிய ஒன்றியத்தின் கீழ் அடங்கும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் துணி மற்றும் தைத்த ஆடை உற்பத்திக்காக உரிய தரச்சான்றிதழ்களை வழங்குதல்.
- இணைந்த குதங்களிலிருந்து பொருட்களை தீர்வைக்குட்படுத்துவதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல்.
- துணை ஒப்பந்தம், பொறுப்பளிப்புக்கள் உள்நாட்டு விற்பனைகள்மற்றும் மூலப் பொருட்கள் மற்றும் இயந்திரங்களுக்கான கடன்கள் ஆகியவற்றுக்கான அங்கீகாரங்களை வழங்குதல்.
- பொருட்களை மீள் ஏற்றுமதி மற்றும் மீள் இறக்குமதி ஆகியவற்றுக்கான அங்கீகாரங்களை வழங்குதல்.
- இலங்கை முதலீட்டு சபை வர்த்தக தொழில் முயற்சிகளில் முதலீட்டுப் பிரச்சினைகளுக்குரியதாக அரச அமைப்புக்களுடன் இணைந்து செயற்பாடுகளை மேற்கொள்ளல்
- மறைமுக ஏற்றுமதியிற்காக ஜிஆர்என் செயல்முறைப்படுத்தலும் அங்கீகரித்தலும்.
- தகவல் தொழில்நுட்பம் / முதலீட்டுச் சபையின் கருத்திட்டத்திற்காக இணையத்தளங்களில் சமர்ப்பிப்பது சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- ஏனைய நாடுகளில் உள்ள நபர்களுக்கு வீசாக்களை வழங்குவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினகட்டுப்பாட்டாளர் நாயகம் அவர்களுக்கு பரிந்துரைகளை வழங்குதல். (வலய தொழில்முயற்சிகளுக்காக மாத்திரம்)










*மூலம்: முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு, இமுச*

## 4. முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவு

முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவு முதலீட்டுத் துறைகளை அடையாளம் காணும்போது விண்ணப்பப் படிவங்களைப் பொறுப்பேற்கும் கட்டத்திலிருந்து இலங்கையில் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது வரை தொடர்ச்சியாக வசதிகளை வழங்கி முக்கியமான பணியொன்றை ஆற்றுகின்றது.

அதன்மூலம் கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடுசெய்தல் அதேபோன்று முதலீட்டுச் சபையின் நோக்கத்தையும் அரசாங்கத்தின் பொருளாதார இலக்குகளையும் அடைந்துகொள்வதற்காக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்காக கொள்கை மற்றும் கட்டளைகளைத் தயாரிப்பதற்குப் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

அரசாங்கத்தின் தற்போதைய கொள்கைக்கு அமைவாக முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் முதலீட்டுச் சபையின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக இந்தப் பிரிவில் அடையாளம் காணப்பட்ட துறைகளுக்கு அமைவாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| அறிவை அடிப்படையாகக் கொண்ட சேவைகள் | - | IT/BPO/KPO/ உயர் கல்வி/ தொழிற் பயிற்சி/ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி |
| சேவைகள் | - | நிலையம்/சேவைகளின் ஏற்றுமதி/வர்த்தக நிலையங்கள் (ஆடை தவிர்ந்த) / கொண்டுசெல்லல் மற்றும் பண்டகசாலை/பிராந்திய செயற்பாட்டு தலைமை அலுவலகம். |
| உற்பத்தி | - | ஆடைகள் தவிர்ந்த அனைத்து உற்பத்திக் கருத்திட்டங்கள். |
| ஆடைக் கைத்தொழில் | - | ஆடை மற்றும் புடைவை உட்பட ஆடைத் தொழில்சார்ந்த வர்த்தக நிலையங்கள். |
| உட்கட்டமைப்பு வசதிகள் | - | தொடர்மாடி வீடுகள்/வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி/கலப்பு அபிவிருத்தி (ஹோட்டல், சேவைகள் சார்ந்த தொடர்மாடி வீடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள்/கடைத்தொகுதிகள் /வைத்தியசாலைகள் /வீதி அபிவிருத்தி/ விமான நிலையங்கள் /துறைமுகங்கள் /கைத்தொழில் வலயங்கள் |
| சுற்றுலாத்துறை மற்றும் பொழுதுபோக்கு | - | ஹோட்டல் /வில்லா/நீர் பூங்காக்கள்/கருப்பொருள் பூங்காக்கள/..... சுற்றுலாத்துறை/விமான சேவை/கலப்பு அபிவிருத்திகள் (ஹோட்டல் மற்றும் சேவைகள் தொடர்மாடி வீடுகள்) |
| பயன்பாடுகள் | - | தொலைத்தொடர்பு / சக்தி மற்றும் எரிசக்தி / கழிவு முகாமைத்துவம்/ வெகுசன தொடர்பாடல் / நீர்முகாமைத்துவம் |
| விவசாயம் | - | விவசாய பதனிடல் / பாலுற்பத்தி / வேளாண்மை / கால்நடை / நன்னீர் மீன்பிடி / ஆழ்கடல் மீன்பிடி / மீன் பதனிடல் |

### செயற்பாடுகள்

1. முதலீட்டுச் சபையின் கட்டளைகளுக்கு, இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் பிரகடனப்படுத்தப்பட்ட முதலீட்டுக் கொள்கை ஆவணங்களுக்கும் இலங்கை மத்திய வங்கியின் கொள்கை ஆவணங்களுக்கும் அமைவாக முதலீட்டு முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல்.
2. அங்கீகாரத்தை வழங்குவதற்கு முன்னர் கருத்திட்டம் தொடர்பான தேசிய கொள்கையை அடிப்படையாகக்கொண்டு தேவையான பரிந்துரைகளை/ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக தொடர்புடைய நிரல் அமைச்சுக்களுடன் கூட்டிணைப்பை மேற்கொள்ளுதல்.
3. பணிப்பாளர் சபையின்/ தலைவரின்/ பணிப்பாளர் நாயகம் அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கருத்திட்ட முன்மொழிவுகளுக்காக பரிந்துரைகளை வழங்குதல்.

4. முதலீட்டுச் சபை சட்டத்தின் பீ அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கருத்திட்டத்திற்கான சுங்கத் தீர்வையையும் ஏனைய வரிச் சலுகைகளையும் பெற்றுக்கொள்வதற்கு கருத்திட்டங்களுக்கு வசதிகளை வழங்குதல்.
5. வியாபாரத்தின் விடயப்பரப்பின் மாற்றுவதற்கான அங்கீகாரத்தை வழங்குதல்.
6. அமைவிடம், உற்பத்தி மற்றும் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக அனுமதியை வழங்குதல்.
7. சுங்க விசாரணைகள், கைத்தொழில் உறவுப் பிரச்சினைகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்தலும் அதற்காக தலையீடுகளை மேற்கொள்ளுதலும்.
8. நேரடி வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பிலான எதிர்பார்ப்பு ஆவணங்களை தயாரித்தல்
9. ஏனைய நாடுகளின் பிரஜைகளுக்கு (முதலீட்டாளர்கள் மற்றும் ஊழியர்கள்) வீசாக்களைப் பரிந்துரை செய்தல்.
10. முதலீட்டுடன் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபை, வியாபார வசதியளித்தல் பேரவை போன்ற முதலீட்டுடன் தொடர்புபட்ட பல்வேறு பேரவைகளில் பங்குபற்றுதல்.
11. நிதியமைச்சு, ஏனைய நிரல் அமைச்சுக்கள் மற்றும் பல்வேறு துறைகள் ஆகியவற்றுக்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவுடன் கொள்கைகளைத் தயாரிக்கும் கூட்டங்களில் பங்குபற்றுதல்.
12. நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை தேயிலைச் சபை, புவியியல் ஆய்வு மற்றும் அகழ்வுப் பணியகம், இலங்கைச் சுங்கத் திணைக்களம், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, காணி அமைச்சு, வனப் பாதுகாப்புத் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முன்னர் சகல திணைக்களங்களும் நிரல் அமைச்சுக்களுடன் தொடர்பாடலையும் கூட்டிணைப்பையும் மேற்கொள்ளுதல்.
13. சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரம், இலங்கை சுங்கம் உட்பட ஏனைய நிரல் முகவர் நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்காக பங்கேற்றல் மற்றும் வரவேற்பினை வழங்குதல்.

முன்னேற்றங்கள்

| | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | உத்தேச முதலீடு | | வேலைவாய்ப்புகள் |
|---|---|---|---|---|
| | | வெளிநாடு (ரூ.மில்) | உள்நாடு (ரூ.மில்) | |
| கிடைக்கப்பெற்ற புதிய கருத்திட்ட முன்மொழிவுகள் | 101 | 592,555 | 181,064 | 20,969 |
| அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்கள் | 87 | 436,189 | 154,098 | 18,680 |
| கைச்சாத்திடப்பட்ட கருத்திட்டங்கள் | 55 | 301,620 | 136,338 | 13,764 |

விரிவாக்கங்கள்

| | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | உத்தேச முதலீடு | | வேலைவாய்ப்புகள் |
|---|---|---|---|---|
| | | வெளிநாடு (ரூ.மில்) | உள்நாடு (ரூ.மில்) | |
| கிடைக்கப்பெற்ற புதிய கருத்திட்ட விரிவாக்கல் முன்மொழிவு | 60 | 38,710 | 102,198 | 21,913 |
| அனுமதிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவு (முன்னைய வருடத்தில் கிடைக்கப்பெற்ற முன்மொழிவுகள் உட்பட) | 52 | 16,570 | 73,118 | 17,775 |
| உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட கருத்திட்டங்கள் | 47 | 6,342 | 45,082 | 15,989 |

## 5. கருத்திட்ட கண்காணிப்புப் பிரிவு

**செயற்பாடுகள்**

கருத்திட்டக் கண்கானிப்புப் பிரிவின் பிரதான பணி முதலீட்டுச் சபையின் உடன்படிக்கையில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்திசெய்து வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களின் செயலாற்றுகையினைப் பரிசீலனை செய்தலாகும். இது இலங்கை முதலீட்டு சபையினால் அங்கீகாரம் பெறப்பட்ட செயற்திட்டங்கள் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள மொத்த கால எல்லை பூராகவும் முறையாக மற்றும் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய பணிகளாக மாற்றமடைந்துள்ளது.

முதலீட்டு சபை சட்டத்தின் 16 மற்றும் 17 ஆம் பிரிவுகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட கம்பனிகள் பற்றிய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் அரையாண்டு செயலாற்றுகைக் கூற்றுக்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட கருத்திட்டங்கள் தொடர்பிலான வேலைவாய்ப்புக்கள் பற்றிய புள்ளிவிபரங்கள் போன்ற காலத்திற்கேற்ற தகவல்களின் மூலம் பரிசீலனை செய்யப்படுகின்றது.

பிரிவின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான துறைகளில் உள்ளடங்குபவை : வரிச்சலுகைக்கு தகைமை பெற்றுள்ள கம்பனிகளுக்காக வரிச் சான்றிதழை வழங்குதல். கருத்திட்டத்தின் சுற்றோட்டத்தை முடிவுறுத்தியுள்ள கருத்திட்டங்கள், அதேபோன்று முதலீட்டுச்சபை உடன்படிக்கைகளுக்கு இணங்கியதாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற கருத்திட்டங்களை உரிய விதத்தில் முடிவுறுத்துதல். தொடர்புடைய பிரிவினால் தீர்மானத்தை எடுப்பதற்கு அறிக்கைகளை வழங்குவதற்கு முதலீட்டுச் சபை சட்டத்தின் 16 மற்றும் 17 ஆம் பிரிவுகளின்கீழ் கருத்திட்டத்தைப் பரிசீலனை செய்தல். கம்பனிக்காக வழங்கப்பட்டிருந்த குஊடீரு வசதிகளை நீக்குவதற்காக வணிக வங்கிகளுடன் உடன்படிக்கையை முடிவுறுத்தியுள்ள கருத்திட்டங்கள் பற்றி காலாண்டு ரீதியில் சமர்ப்பித்தல்.

**முன்னேற்றம்**

- மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் முதலீட்டுச் சபையில் பதிவுசெய்துள்ள கம்பனிகளுக்காக 122 வருடாந்த வரிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- 2017 ஆம் ஆண்டில் கம்பனியினால் 1477 நிதிக் கூற்றுக்கள் திரட்டப்பட்ட அதேவேளையில் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசீலனைகளின் எண்ணிக்கை உத்திசைவான கண்காணிப்புத் திட்டத்தைத் தொடர்ந்து 112 வரை அதிகரித்தது.
- மீளாய்வுக் காலப்பகுதியில் கருத்திட்டக் கண்கானிப்புப் பிரிவினால் நிதி ரீதியான பிரச்சினைகள், விற்பனை மற்றும் காணிகளை தேடுவதிலுள்ள பிரச்சினை போன்றவற்றை ஏற்படுத்தி உடன்படிக்கைகளில் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்குதல் போன்ற விடயங்களின் காரணமாக 154 உடன்படிக்கைகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. இந்த முடிவுறுத்தல்களில் சாத்தியவளத்தைக் கொண்டுள்ள முதலீட்டாளர்களினால் சொத்துக்களைக் கைக்கொள்ளுதல் மற்றும் கம்பனிகளை ஒருங்கிணைத்தல் அல்லது இணைத்தல் ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டுள்ளது என்பதனைக் குறிப்பிடுதல் வேண்டும்.

## 6. கருத்திட்ட செயற்படுத்துகை பிரிவு

**செயற்பாடுகள்**

கருத்திட்ட செயற்படுத்துகை பிரிவின் பிரதான நோக்கம் "முதலீட்டுச் சபையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்படுத்துகை உடன்படிக்கைக ளுக்கு இணங்க கருத்திட்டத்திற்கு வெற்றிகரமாக வசதிகள் வழங்குவதனை உறுதிப்படுத்துதல்" ஆகும்.

- முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் கம்பனிகளின் கோரிக்கையின் அடிப்படையில் காலத்தை நீடிக்கும் கடிதத்தை வழங்குதல்.
- செயற்படுத்துகையினை பூர்த்திசெய்ய முடியாத கருத்திட்டங்களை அடையாளம் கண்டு கருத்திட்ட மதிப்பீட்டுப் பிரிவுக்கு உடன்படிக்கையை முடிவுறுத்துவது சம்பந்தமான பரிந்துரைகளைச் செய்தல்.
- கருத்திட்டத்தின் நிலைமை மாற்றங்களை அடையாளம்கண்டு முகாமைத்துவ தகவல் தொகுதியை இற்றைப்படுத்துதல்.

**முன்னேற்றம்**

84 கருத்திட்டங்களை வணிகச் செயற்பாடுகளை ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் வரை நடைமுறைப்படுத்தப்பட்டன. கருத்திட்டத்தை செயற்படுத்தும் காலத்தை நீடிப்பதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பணிப்பாளர் சபைக்கு 155 பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்தவதற்காக 80 வேலைத்தள பரிசீலனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கருத்திட்டங்களுக்கான தடங்கள்களை நீக்கி முதலீட்டாளர்களுக்கு வசதிகளை வழங்கி அவற்றின் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் ஆலோசகர் திரு. பாஸ்கரலிங்கம் அவர்களின் தலைமையில் கௌரவ பிரதமர் அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ள "முதலீட்டினை அங்கீகரிப்பதற்கான வசதிகளை வழங்கும் குழு" (IAFC) கருத்திட்டத்தைச் செயற்படுத்தும் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கருத்திட்டம் சம்பந்தமாக முதலீட்டுச் சபையின் உத்தியோகத்தர்களை நன்கு பழக்கப்படுத்திக்கொள்வதற்கும் அவற்றைத் தடைகளின்றி நடைமுறைப்படுத்துவதற்கும் திணைக்களத்தினால் ஏனைய பிரிவுகளின் தலைவர்களுடனும் ஆரம்பக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதலீட்டாளர்களுடன் கருத்திட்டத்தின் செயலாற்றுகை பற்றி கலந்துரையாடுவதற்காக 44 கருத்திட்டங்கள் சம்பந்தமான கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## 7. சட்டப் பிரிவு

**செயற்பாடுகள்**

முதலீட்டுச் சபை சம்பந்தமான சகல சட்டரீதியான விடயங்கள் தொடர்பான சட்டப் பிரிவினால் முதலீட்டுச் சபைக்கு ஆலோசனை மற்றும் உதவி வழங்கப்படுகின்றது. அதன்மூலம் முதலீட்டுச் சபைக்கும் அதேபோன்று முதலீட்டாளர்களுக்கும் முதலீட்டுக்குத் தேவையான தொழில் ரீதியான ஆலோசனை சேவைகளை செயற்படுத்தும் சட்ட உதவியை வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கை முதலீட்டுச்சபை சட்டத்தின் 17 பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உபாயத்திட்ட அபிவிருத்தி கருத்திட்ட (திருத்தற்) சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில் முயற்சியாளர்களின் கருத்திட்டங்களுக்கு முதலீடுகளைச் செய்யும்போதும் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும்போதும் தொடர்புடைய சட்ட நிர்வாகம் சம்பந்தமாக முதலீட்டாளர்களுக்கு உரிய சேவைகளை வழங்குவதும் இதில் உள்ளடங்குகின்றது.

**முன்னேற்றம்**

இந்தகாலப் பகுதியில் முதலீட்டுச் சபையினால் இலங்கையின் புதிய வியாபார கம்பனிகளை தாபிப்பதற்காக முதலீட்டுச் சபையின் சட்டத்தின் 17 ஆவது பிரிவின் கீழ் பிரதான உடன்படிக்கைகள் 55 கைச்சாத்திடப்பட்டுள்ளன. முதலீட்டுச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படு கின்ற பிரதான கருத்திட்டங்கள்

- ரிஜிட் டயர் கோபரேசன் (ப்ரைவேட்) லிமிட்டட் - டில் ரோசா 9 யார்ட்ஸ் அப்பரல் (ப்ரைவேட்) லிமிட்டட்
- ஹம்பாந்தோட்டை இன்டர்நெசனல் போர்ட் குரூப் (ப்ரைவேட்) லிமிட்டட்
- ஹம்பாந்தோட்டை இன்டர்நெசனல் போர்ட் சேர்விசசஸ் கம்பனி (ப்ரைவேட்) லிமிட்டட்
- பெஸ்ட் பெசுபிக் டெக்ஸ்டைல் லங்கா (ப்ரைவேட்) லிமிட்டட்

இதற்கு மேலதிகமாக கருத்திட்டத்தின் விடயப்பரப்பை மாற்றுதல், ஏனைய இடங்களுக்கு கொண்டு செல்லுதல், சுவீகரித்தல் மற்றும் ஒன்றினைத்தல் போன்ற தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்ற முதலீட்டு மாற்றங்கள் சம்பந்தமாக நடப்பிலுள்ள முதலீட்டுச் சபையின் கருத்திட்டங்களுடன் குறை நிரப்பு ஒப்பந்தங்கள் 225 கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இவற்றில் உள்ளடங்குகின்ற கருத்திட்டங்களில் வேலை வாய்ப்புக்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன:

- அன்சல் லங்கா (ப்ரைவேட்) லிமிட்டட்
- மாஸ் பெப்ரிக் பார்க் (ப்ரைவேட்) லிமிட்டட் (கிரிஉல்ல விரிவாக்கம் - முன்னர் காபூல் லேஸ் நிறுவனம் அமைந்திருந்த இடம் - லொகிவிஸ் லிமிட்டட்)
- செரன்டிப் ப்லா மில்ஸ் (ப்ரைவேட்) லிமிட்டட
- பியுச்ச எனர்ஜி (ப்ரைவேட்) லிமிட்டட்

மேலும் சட்டப் பிரிவினால் 2018 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திறமுறை அபிவிருத்தி கருத்திட்ட (திருத்தற்) சட்டத்தில் காட்டப்பட்டுள்ள முறைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அதேவேளையில் ஹம்பாந்தோட்டை இன்டர்நெசனல் போர்ட் குரூப் (ப்ரைவேட்) லிமிட்டட் மற்றும் ஹம்பாந்தோட்டை இன்டர்நெசனல் போர்ட் சேர்விசசஸ் கம்பனி (ப்ரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றுக்கான ஆரம்ப ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

## 8. தகவல் தொழில்நுட்ப சேவைகள் பிரிவு

**செயற்பாடுகள்**

இலங்கை முதலீட்டு சபையினால் முகாமை செய்யப்படுகின்ற ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் மற்றும் கைத்தொழில் பூங்காக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப சேவைப் பிரிவு பொறுப்பாக இருக்கின்றது. இதன் பிரதான பணி புதிய முதலீட்டு வலயங்களைத் தாபித்தல் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல் செயற்படுத்துதல் பராமரித்தல் மற்றும் தீர்மானித்தல் ஆகியவற்றுக்காக தொழில்நுட்ப இடுகைகளை வழங்குதல், புதிய முதலீட்டுக் கருத்திட்டங்களுக்காக முதலீட்டாளர்களுக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய காணிகள் பற்றி பிரச்சாரம் செய்தல் மற்றும் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகளை உரிமை மாற்றும்போது தொடர்புடைய அதிகாரிகளுக்கு உதவியளித்தல்.

**முன்னேற்றம்**

அ. 2017 ஆம் ஆண்டில் ஊக்குவிப்பு வலயங்களில் / கைத்தொழில் பூங்காக்களில் காணப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக முதலீட்டுச் சபையினால் ரூ.377 மில்லியன் செலவிடப்பட்டது. மீளாய்வு வருடத்தில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு, காணப்படுகின்ற வீதி வலையமைப்பு, கட்டடங்கள், நீர் வழங்கல், வலயத்தைச் சூழவுள்ள எல்லைகளின் வேலிகள் ஆகியவற்றை நிர்மானித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காக பாரிய அளவில் விரிவுபடுத்தல் /மேம்படுத்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆ. உள்ளக வீதிகளை நிர்மானித்தல் வலையமைப்பு களஞ்சியம் ஆகியவற்றுக்கான பொறிமுறை மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை தாபிப்பதன்மூலம் வகவத்தை கைத்தொழில் வலயத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள் போன்ற புதிய வலய அபிவிருத்திக்காக ரூ.56 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. உள்ளக வீதி வலையமைப்பை விரிவுபடுத்துதல் மின்சாரம் வழங்குதல் நீர்வழங்கல், அதனைச்சுற்றி வேலிகளை அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் வரை புதிய ஊக்குவிப்பு வலயத்திற்காக பொருத்தமான இடங்களை அடையாளம் காணும் ஆரம்ப விசாரணைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

2017 ஆம் ஆண்டுக்கான நடவடிக்கைத்திட்டத்தின்கீழ் ரூ.433 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 9. வலய முகாமைத்துவப் பிரிவு

**செயற்பாடுகள்**

இலங்கை முதலீட்டுச் சபையின்கீழ் உள்ள ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் / கைத்தொழில் பூங்காக்களில் பணிகளை முழுமையாகக் கூட்டிணைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகியவற்றுக்காக வலய முகாமைத்துவப் பிரிவு பொறுப்பாக இருக்கின்றது. பிரிவினால் வலயத்துடன் தொடர்புபட்ட முகாமைத்துவத் தகவல்களை வழங்குகின்ற அதேவேளையில் வலயங்களில் தொழில்நுட்ப மற்றும் செயற்படுத்துகைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உதவியளிக்கின்றது. அதன்மூலம் சுற்றாடல் பிரச்சினைகள், காணி பற்றிய பிரச்சினைகள் ஆகியவற்றைத் தீர்ப்பதற்காக வழிகாட்டப்படுகின்ற அதேவேளையில் மிகச் சிறந்த எதிர்பார்ப்புக்களுக்காக வலயங்களில் தொழில்முயற்சியாளர்களுக்கு வசதிகள் வழங்கப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக பிரிவினால் வளங்களின் தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்தல் மற்றும் வலயங்களுக்காக / பூங்காக்களுக்காக வளங்களை ஒதுக்குவதற்காக தலையீடுசெய்தல்.

**முன்னேற்றம்**

- காணிகளுக்காக போட்டிக்குரிய முறிகளைக் கோரும் புதிய முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அதேவேளையில் முதலீட்டாளர்களுக்கு காணிகளை ஒதுக்கிக்கொடுப்பதன்மூலம் அதிகூடிய வருமானமொன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

- கட்டுநாயக், பியகம மற்றும் சீத்தாவக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள் போன்ற பிரதான ஏற்றுமதி வலயங்களில் காணி பயன்படுத்தப்பட்டுள்ள அளவு பொதுவாக 90% ஐ தாண்டியுள்ளது. ஏனைய முதலீட்டு வலயங்களில் எஞ்சியுள்ள காணிகளுக்காக அதிகூடிய கேள்வி நிலவுகின்றது. முதலீட்டு வலயங்களில் காணிகளுக்கு உள்ள கேள்வியை நிரப்புவதற்காக மீரிகம ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் பீ வலயத்தில் காணி மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றைக்கொண்டதாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- புதிய ஊழியர்ளைக் கவர்ந்திருத்தல் மற்றும் தற்போதிருக்கின்ற ஊழியர்களை தக்க வைத்துக்கொள்ளும்போது வலய முகாமைத்துவப் பிரிவு அதற்காக பாரிய கவனத்தைச் செலுத்தியுள்ள அதேவேளையில் பல்வேறு நிறுவனங்களுக்காக புதிய ஊழியர்களைக் கவர்ந்தீர்ப்பதற்காக வர்த்தக பிரச்சார முறை அதேபோன்று விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- முதலீட்டு வலயங்களில் தொழில் முயற்சிகளில் இறக்குமதி / ஏற்றுமதி செயலாற்றுகை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ள அதேவேளையில் புதிய முறைமையொன்றை நடைமுறைப்படுத்துதல் மற்றும் முதலீட்டு வலயங்களில் இருக்கின்ற முதலீட்டுச் சபையின் பதவியணிக்குத் தேவையான பயிற்சியினை வழங்குவதன்மூலம் சேவை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

- 2017 ஆம் ஆண்டில் வலயங்களில் குறிப்பிடத்தக்க தீ அபாயம் மற்றும் பாரிய தொழில் பிரச்சினைகள் பதிவாகவில்லை.

## 10. சுற்றாடல் முகாமைத்துவ பிரிவு

**செயற்பாடுகள்**

முதலீட்டுச் சபையின் கீழுள்ள கருத்திட்டங்கள் சம்பந்தமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் கலந்துரையாடி அதன் அனுமதியுடன் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்தின் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமான பணிகளை மேற்கொள்வது சுற்றாடல் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. கருத்திட்டங்களுக்காக சுற்றாடல் அனுமதியை வழங்குதல், சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை வழங்குதல், சுற்றாடல் பாதுகாப்பு பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்தலும் அவற்றைத் தீர்த்தலும் மற்றும் இயற்கைவள முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்துதல் பற்றிய நடவடிக்கைகளின்போது ஏனைய நிறுவனங்கள், அமைப்புக்கள் மற்றும் திணைக்களங்கள் ஆகியவற்றுடன் தொடர்புகளை மேற்கொள்வது சுற்றாடல் முகாமைத்துவப் பிரிவின் பணிகளாகும்.

**முன்னேற்றம்**

| செயற்பாடுகள் | எண்ணிக்கை |
|---|---|
| 1. (அ) கருத்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட சுற்றாடல் அனுமதிகளின் எண்ணிக்கை | 63 |
| (ஆ) கருத்திட்டத்தின் விரிவாக்கம் / மீளமைத்தல் ஆகியவற்றுக்காக வழங்கப்பட்ட சுற்றாடல் அனுமதிகளின் எண்ணிக்கை | 31 |
| 2. வழங்கப்பட்ட / புதுப்பிக்கப்பட்ட சுற்றாடல் மாசடைவு பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 979 |
| 3. தொலைத் தொடர்பு கோபுரங்களை நிர்மாணிப்பதற்காக உத்தேச இடங்கள் குறித்து வழங்கப்பட்ட ERR களின் எண்ணிக்கை | 99 |
| 4. சுற்றாடல் பிரச்சினை சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு தீர்வுகள் வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 107 |
| 5. சுற்றாடல் கண்காணிப்பு | |
| (அ) தொழிற்சாலைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுநீரின் மாதிரிகள்<br>(ஆ) பொது நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுநீரின் மாதிரிகள் | 1,164 |
| (இ) நீர் மாதிரிகளின் எண்ணிக்கை | 176 |

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு மேலதிகமாக இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சூழலுடன் / இரசாயனத்துடன் சம்பந்தப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள சர்வதேச உடன்படிக்கைளுக்கு அமைவாக தாபிக்கப்பட்டுள்ள தேசிய குழுக்களிலும் சேவையாற்றுகின்றது.

1. பேசல், ரொட்டர்டம், ஸ்டொக்ஹோம் மற்றும் மினாமாட்டா உடன்படிக்கைகள் பற்றிய தேசிய கூட்டிணைப்புக் குழு
2. ஓசோன் படலத்தின் திரவம் பற்றிய மொன்றீல் உடன்படிக்கை
3. காலநிலை மாற்றம் பற்றிய ஐக்கிய நாடுகளின் வரைசட்டக உடன்படிக்கை (UNFCCC)
4. முன்னோடி கட்டுப்பாட்டு அதிகாரி இதன் தலைமைத்துவத்தை வகிக்கின்றார்.

சகல முதலீட்டு சபையின் கருத்திட்டங்கள் இந்த சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணங்கியதாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிசெய்கின்றது.

ISO 9001 : 2008 தரங்களை அடிப்படையாகக்கொண்ட தரமுகாமைத்துவத் தொகுதியின்கீழ் 2017 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்ட இலக்கு அடையப்பெற்றது. இதன்கீழ் முதலீட்டுச் சபையின் கருத்திட்டங்களில் 98% ஆனது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்த இலக்கு வழங்கப்பட்டுள்ள அதேவேளையில் அந்த இலக்கு அடையப்பெற்றுள்ளது.

பின்வரும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக பிரிவு பங்குபற்றியுள்ள அதேவேளையில் அவற்றில் தீர்மானமெடுக்கும் செயற்பாட்டின்போது செயற்பாட்டுடன் பங்களிப்பினை வழங்கியது.

அ. ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் மற்றும் கைத்தொழில் பூங்காக்களில் இருந்து வெளியில் அமைந்துள்ள உயர் மற்றும் நடுத்தர மட்டத்திலுள்ள சூழல் மாசடைவு கைத்தொழிலைத் தீர்மானிப்பதற்காகப் பின்வரும் குழு

ஆ. பாசல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு

இ. கைத்தொழில் இரசாயன முகாமைத்துவத்திற்கான தொழிலநுட்ப ஆலோசனைக்குழு (TACMIC) இந்த 03 தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவுக்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைமைவகித்தது.

## 11. பொறியியல் அங்கீகாரங்கள் மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு

### செயற்பாடுகள்

பொறியியல் அங்கீகாரம் மற்றும் விசேட கருத்திட்டம் இரு பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. அவை பொறியியல் அங்கீகாரப் பிரிவு காணி மற்றும் வசதிகளை வழங்கும் பிரிவு என்பனவாகும். பொறியியல் அங்கீகாரப் பிரிவு வளாகத்திற்காக இலங்கை முதலீட்டு சபையின் மேற்பார்வைக் கிளையாக செயற்படுவதுடன் இலங்கை முதலீட்டு சபைச் சட்டத்தின் 17 வது வாசகத்தின் கீழ் செயற்திட்டங்களுக்காக உரிய இடங்களை அங்கீகரித்தல், திட்டங்களை அங்கீகரித்தல், அளவையில் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் ஒப்பீட்டுச் சான்றிதழ்களை வெளியிடல் போன்ற பிரதான சேவைகளை வழங்குவது தொடர்பில் இப்பிரிவிற்குப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டன.

காணி மற்றும் வசதிகளை வழங்கும் பிரிவு முதலீட்டாளர்களுக்காக பின்வரும் சேவைகளை வழங்குவதற்காகப் பொறுப்புக் கூறுகின்றது.

- முதலீட்டுச் சபையின் கருத்திட்டங்களுக்காக அரசாங்கத்தின் காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முதலீட்டாளர்களுக்கு உதவிசெய்தல்.
- முதலீட்டுச் சபையின் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் காணிகளை / தனியார் காணிகளை சுவீகரித்தல்.
- புதிய முதலீட்டாளர்களின் பிரயோசனத்திற்காக அரசாங்க மற்றும் தனியார் காணிகள் பற்றிய காணி வங்கியொன்றைப் பேணிவருதல்.
- - காணி தொடர்பிலான செயற்பாடுகளின் போது இலங்கை முதலீட்டு சபையின் சட்டப் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளுக்கு உதவிகளை வழங்குதல்.

### முன்னேற்றம்

| | | |
|---|---|---|
| இடம் சார்ந்த அங்கீகாரங்களின் எண்ணிக்கை | - | 191 |
| கட்டடத் திட்டமிடல் அங்கீகாரங்களின் எண்ணிக்கை | - | 173 |
| வரிச் சலுகை விடுவிக்கப்படும் பொருட்களின் தீர்வை | - | 3,737 |
| ஒப்பீட்டுச் சான்றிதழ் | - | 60 |

முதலீட்டாளர்களின் பிரயோசனத்திற்காக அரசாங்கத்தின் காணிகள் மற்றும் தனியார் காணிகள் பற்றி இந்த வங்கிச் சேவையைப் பேணிவருதலும் இற்றைப்படுத்துதலும்.

## 12. கைத்தொழில் உறவுகள் பிரிவு

### செயற்பாடுகள்

இலங்கை முதலீட்டு சபைக்குரிய வர்த்தகங்களின் சிறந்த முகாமைத்துவ மற்றும் உற்பத்தித் திறனை ஏற்படுத்துவதற்காக கைத்தொழில் உறவுகளை சிறந்த முறையில் பேணுவது தொடர்பில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் இலங்கை முதலீட்டு சபையின் கைத்தொழில் உறவுகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்து. இதன் இலக்கினை எட்டுவதற்காக கைத்தொழில் உறவுகள் பிரிவினால் மூலம் கீழ்க் குறிப்பிட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இலங்கை முதலீட்டு சபையின் கீழுள்ள வர்த்தகங்களின் தொழிலாளர் முகாமைத்துவம், இணைப்புக்கள், தொழில்நுட்ப சமாதானம் மற்றும் ஐக்கியம் உட்பட உயரிய மட்டத்திலான உற்பத்தித் திறனை முன்னெடுப்பதற்காக ஊக்குவிப்புப் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் அதற்கான வசதிகளை வழங்குதல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் இலங்கை முதலீட்டு சபைக்குரிய வர்த்தகங்களில் முகாமைத்துவத்திற்கு மற்றும் ஊழியர்களுக்காக தொழிலாளர் சட்டம் / ஒழுங்குக் கோவைகள் மற்றும் கைத்தொழில் உறவுகள் தொடர்பிலான ஆலோசனை சேவைகள் உட்பட வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்.
- ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள முதலீட்டு சபை வேலை வாய்ப்பு சேவை அலகின் மூலமும், தொழில் வங்கி இணையத்தளம் மூலமும் ஆட்சேர்ப்பு உதவி சேவை வேலைத்திட்டத்தின் ஊடாகவும் ஊழியர் அணியினை சேர்த்துக் கொள்ளும் தேவையினை நிவர்த்தி செய்ய முதலீட்டாளர்களுக்கு உதவிகளை வழங்குதல்.

### முன்னேற்றம்

- 2017 ஆம் ஆண்டில் முதலீட்டு வலயங்களில் அமைந்துள்ள முதலீட்டு சபைகளின் வர்த்தகத்தைப் போன்று வலயங்களுக்குப் புறம்பாக அமைந்துள்ள முதலீட்டு சபைத் தொழில் முயற்சிகளில் 922 தொழிலாளர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மேற்கூறப்பட்ட கணக்காய்வுகளின போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் / தாமதக் குறைபாடுகளை விருத்தி செய்வதற்காக மீள்ஊட்டல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.
- 2017 ஆம் ஆண்டில் 150 ஊழியர் சபைகள் ஏற்படுத்தப்பட்டு செயற்பாடுகளுக்காக கைத்தொழில் உறவுப் பிரிவினால் வசதிகள் வழங்கப்பட்டன.
- 2017 ஆம் ஆண்டில் கட்டுநாயக்கா, பியகம, கொக்கல, வதுபிட்டிவல ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்கள் மற்றும் கண்டி தொழில்நுட்பப் பூங்காவில் தாபிக்கப்பட்ட வசதிகளை வழங்கும் ஐந்து நிலையங்கள் செயற்படுகின்றன. தொழிற்சங்க உத்தியோகத்தர்களுக்கு உரிய வலயத்தில் வர்த்தகத்தில் சேவையாற்றும் அவர்களின் அங்கத்தவர்களுக்கு அவர்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் சுதந்திரமாக மற்றும் தனிப்பட்ட மட்டத்தில் சந்திப்புக்களுக்காக இவ் வசதிகள் மத்திய நிலையத்தினால் வழங்கப்பட்டுள்ளன.
- உரிய அரச முகவர் நிறுவனங்களின் இணைப்புடன் 2017 ஆம் ஆண்டில் முதலீட்டு சபை வர்த்தகங்களில் ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்காக சமூக உரையாடல் பொதுவான விழிப்புணர்வு, வேலைத்தள ஒத்துழைப்புக்கள், நட்புறவு ரீதியிலான செயற்பாடுகள் மற்றும் தொழிலுடன் தொடர்புபட்ட சுகாதாரம் உட்பட பாதுகாப்புக்கள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக விழிப்புணர்வுநிகழ்ச்சித்திட்டங்கள் 115 நடாத்தப்பட்டுள்ளது.
- இலங்கை முதலீட்டு சபைக்குரிய வர்த்தகங்களில் கைத்தொழில் சமாதானம் மற்றும் ஐக்கியத்தைப் பேணும் போது அவ் வர்த்தகங்களில் ஏற்படக்கூடிய எந்தவொரு கைத்தொழில் பிணக்கிணையும் தீர்ப்பதற்காக கைத்தொழில் இணைப்பு உத்தியோகத்தர்கள் தலையீடு செய்கின்றனர். தேவையான சந்தர்ப்பங்களில் தொழிலாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் உதவியினையும் பெற்று 2017 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டு சபையில் எழுந்த கைத்தொழில் பிணக்குகள் பணிப் பகிஸ்கரிப்புக்கள் 10 இற்கு தீர்வுகள் வழங்கப்பட்டன.
- - 2017 ஆம் ஆண்டில் 68,129 தொழில் எதிர்பார்ப்போர் ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களில் அமைந்துள்ள தொழில் வாய்ப்பு சேவைப் பிரிவுகளில் பதிவு செய்துள்ளனர். இவர்களில் 66,801 பேர்களை தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுத்தும் நோக்குடன் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக இலங்கை முதலீட்டு சபைக்குரிய தொழில் முயற்சிகளுக்கு ஈடுபடுத்தப்பட்டனர். இதற்கு மேலதிகமாக இலங்கை முதலீட்டு சபையின் தொழில் முயற்சிகளில் காணப்படும் தொழில் வாய்ப்புக்களில் தொழில் எதிர்பார்ப்போரில் கூடுதலானோரைக் கவர்ச்சிக்குட்படுத்தும் நோக்குடன் இதனை வேறு உரிய முகவர் நிறுவனங்களின் இணைப்புடன் தொழில் சந்தை / தொழில் வழிகாட்டல் ஆலோசனை வேலைத்திட்டங்களை நடாத்துவதற்காக கைத்தொழில் உறவுகள் பிரிவினால் வசதிகள் வழங்கப்படுகின்றன. மீளாய்விற்குட்படுத்தப்பட்ட கால எல்லைக்குள் நாடுபூராகவும் அவ்வாறான தொழில் சந்தைகள்/ தொழில் வழிகாட்டல் ஆலோசனை வேலைத்திட்டங்கள் 14 நடாத்தப்பட்டுள்ளது.
- கட்டுநாயக்கா ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தில் முதலாவது பகற்காப்பு மத்திய நிலையம் மற்றும் முன்பள்ளியினைத் தாபிப்பதன் மூலம் வலயத்திற்குள் பாதுகாப்பான இடத்தில் ஊழியர்களின் பிள்ளைகளைத் தங்க வைத்து அதே சமயத்தில் அவர்களின் தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பமான ஊழியர்களுக்கு இது மிகவும் பயன்மிக்க தீர்வாக அமைந்தது. இறுதியில் வலயங்களில் உயரிய மட்டத்தில் ஊழியர் புறள்வினைக் குறைக்க தீர்வு வழங்க முடிவதுடன் புதிதாக ஆட்சேர்ப்போருக்கு வலயங்கள் தொடர்பில் கவர்ச்சிமிக்க சிந்தனைகளை ஏற்படுத்தவும் இது பெரும் உதவியாக அமைந்துள்ளது. ஆண்டின் இறுதியில் 72 பிள்ளைகளுக்கு வசதியளிக்கப்பட்ட அதேவேளையில், அதில் 60 பிள்ளைகள் முன்பள்ளியிலிருந்து கலந்தகொண்டனர்.

## 13. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

**செயற்பாடுகள்**

இலங்கை முதலீட்டுச் சபைக்கு தகவல் தொழில்நுட்ப தீர்வுகளைத் திட்டமிடுதல், தயாரித்தல், மேம்படுத்துதல், மதிப்பீடுசெய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப பிரிவின் மூலம் நிறுனத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளங்களின் பெறுகை, நிறுவுதல் மற்றும் பராமரித்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

பிரிவினால் தொடர்பாடல்களுக்குத் தேவையான கணணி மென்பொருள் மற்றும் வன்பொருள் ஆகியவற்றுடன் சகல தகவல் தொழில்நுட்ப தேவைகளுக்கும் தேவையான உட்கட்மைப்பு வசதிகளைச் செய்வதன்மூலம் அதன் பயன்படுத்துநர்களுக்குத் தொடர்ச்சியான சேவைகளை வழங்குவதன்மூலம் நாள்முழுவதும் நிறுவனத்தின் இணைந்த கணனி வலையமைப்பு பேணப்பட்டுவருகின்றது.

**முன்னேற்றம்**

வெளிநாட்டு நேரடி முதலீடு பற்றிய தகவல்களைத் திரட்டும்போது மேற்கொள்ளப்படுகின்ற சிக்கலான முறைமையைத் தவிர்ப்பதற்காக பிரிவினால் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஆய்வுப் படிவத்தை வலைய வழியில் சமர்ப்பித்தல் இணையத்தள தீர்வுகளை மேம்படுத்தி நடைமுறைப்படுத்துவதனை ஆரம்பித்துள்ளது. தொகுதியின் மூலம் தொழில்முயற்சியாளர்களுக்கு அவர்களின் வெளிநாட்டு நேரடி முதலீட்டு ஆய்வுப் படிவத்தை சமர்ப்பிப்பதற்கும் அவர்களது சமர்ப்பிப்புக்களின் முன்னேற்றத்தை வலைய வழியின் மூலம் மேற்பார்வை செய்வதற்கும் உதவியளிக்கின்றது. ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனை பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு வலய வழியில் சமர்ப்பிக்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் படிவத்தை பார்க்கக்கூடியதாக இருக்கின்ற அதேவேளையில் தரவு முகாமைத்துவத் தகவல் தொகுதிக்கு மாற்றக்கூடியதாக இருக்கும்.

- முதலீட்டுச் சபையின் தொழில் முயற்சிகளிலுள்ள ஊழியர்களின் அடையாள அட்டைக்கான கோரிக்கைகளை வலய வழியில் சமர்ப்பிப்பதற்காக இணையத்தள தீர்வொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தப்பட்டது. அவர்களுக்கு அவர்களின் அடையாள அட்டைக்காக வலய வழிக் கோரிக்கையை சமர்ப்பிப்பினைப் பெற்று கணக்கின் ஊடாக வலய வழியில் கொடுப்பனவுகளைச் செய்யும் வசதிகளும் உள்ளன. ஊழியர் அடையாள அட்டையை வழங்கும்போது தற்போது கையாள் மேற்கொள்ளப்படுகின்ற முறைமையை நீக்கி மிகவும் முறையானதும் தன்னியக்க இணையவழித் தீர்வொன்றை வழங்குவதற்கு இந்த முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் முதலீட்டுச் சபையின் உத்தியோகத்தர்களின் தொலைபேசி பெயர்ப்பட்டியலுக்காக mobile App. ஒன்றினை நிர்மானித்து அறிமுகப்படுத்தியுள்ளது. முதலீட்டுச் சபையின் உத்தியோகத்தர்களுக்கு மேற்கூறப்பட்ட mobile App. இனை அவர்களின் கையடக்கத் தொலைபேசியில் தரவிறக்கம் செய்து எந்தவொரு கையடக்கத் தொலைபேசி இலக்கத்தையும் தேடுவதற்கும் தொலைபேசி அழைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் எந்தவொரு முதலீட்டுச்சபை உத்தியோகத்தர்களுக்கும் அதனூடாக மின்னஞ்சலை அனுப்பவும் முடியும்.
- தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு செயலாற்றுகையினை மேற்பார்வை செய்வதற்கும் இலக்குகளை பின்னூட்டல் செய்வதற்கும் முறைமையொன்றைத் திட்டமிட்டு மேம்படுத்தி நடைமுறைப்படுத்தியுள்ளது.
- பணிப்பாளர் சபை பத்திரத்தைத் தயாரித்தல் மற்றும் பணிப்பாளர் சபை கூட்டங்களை முகாமை செய்தல் ஆகியவற்றுக்காக வெளியிலிருந்து பெறப்பட்ட மென்பொருள் தொகுதியுடன் புதிய மென்பொருள் தீர்வொன்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது.
- பயன்படுத்துநர்களின் சகல தேவைகளையும் நிறைவேற்றுவதற்கும் முகாமைத்துவத்திற்கான அறிக்கையை மாற்றுவதற்கும் தீர்க்கமான தீர்மானங்களை மேற்கொள்ளும்போது தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் வீசா முறைக்காக பல்வேறு மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 14. ஊடக மற்றும் பிரச்சாரப் பிரிவு

**செயற்பாடுகள்**

இலங்கை முதலீட்டு சபையின் ஊடக மற்றும் பிரச்சாரப் பிரிவு இலங்கையில் காணப்படும் முதலீட்டுச் சந்தர்ப்பங்கள், நாட்டின் வர்த்தகச் சூழல், முதலீட்டு சபையின் வெற்றிகள் போன்ற விடயங்கள் தொடர்பில் பல்வேறுபட்ட ஊடகங்கள் மூலம் பல்வகையான நேயர்கள் தொடர்பில் கவனம் செலுத்தி அவர்களை அறிவுறுத்துவதற்காக வெளித் தொடர்புசாதன செயற்பாடுகளை அமுல்படுத்துவது குறித்து பொறுப்புவாய்ந்த பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**முன்னேற்றம்**

2015 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டு சபையின் பல்வேறுபட்ட ஊடகங்களைப் பயன்படுத்தி பிரச்சார வேலைத்திட்டங்களில் ஈடுபட்டது. மேலும் விரிவான அடிப்படையில் நேயர்களுக்கு முதலீட்டு சபையின் தகவல்களைப் பிரச்சாரம் செய்வதற்காக இலங்கை முதலீட்டு சபையினால் அச்சு ஊக்குவிப்புப் பொருட்களை விருத்தி செய்தல், வெளியீடுகளின் பிரச்சார விளம்பரங்களும் பிரசுரிக்கப்பட்டன.

பங்குபற்றிய நிகழ்வுகள்

- குருணாகல், அவிசாவளை மற்றும் கண்டி ஆகிய இடங்களில் தொழிற்சந்தைகள்

ஊடக சந்திப்பு

- ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான கலந்துரையாடல்
- ஒக்ஸ்போர்ட் வியாபார குழு அறிக்கையை வெளியிடுதல்

செய்தியாளர் மாநாடு

ஏனைய நடைமுறை அல்லாத நிதி சொத்துக்களில் ஒரு வருடத்தை விடக் குறைந்த பாகம் ஏனைய நடைமுறை நிதி சொத்துக்கள் ரூபா 174,534,643 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **14.1 பணியாளர் கடன்களும் முற்பணங்களும்** | | |
| பணியாளர் கடன்களும் முற்பணங்களும் - முதிர்வுகாலம் ஒரு வருடத்திற்கு கூடுதலானது **(குறிப்பு 14.3)** | 550,320,565 | 518,297,444 |
| பணியாளர் கடன்களும் முற்பணங்களும் - முதிர்வுகாலம் ஒரு வருடத்திற்கு குறைவானது **(குறிப்பு 15)** | 174,534,643 | 160,018,228 |
| **பணியாளர் மொத்த கடன்களும், முற்பணங்களும்** | **724,265,705** | **678,315,672** |

| | | |
|---|---|---|
| **14.2 நிதி உதவி நிகழ்ச்சித் திட்டம்** | | |
| ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி | 29,560,360 | 46,741,333 |
| ஆண்டு காலத்தில் மீளச் செலுத்தப்பட்டவை | (3,216,297) | (17,180,972) |
| இழப்பீட்டு ஏற்பாட்டிற்கு முன்னர் டிஸம்பர் 31ஆம் திகதியன்று மீதி | 26,344,063 | 29,560,360 |
| கழிக்க - இழப்பீட்டிற்கான ஏற்பாடு | (26,344,064) | (28,646,982) |
| இழப்பீட்டு ஏற்பாட்டிற்கு பின்னர் டிஸம்பர் 31ஆம் திகதியன்று மீதி | - | 913,378 |
| ஒரு வருடத்தை விடக் குறைவான கால முதிர்வு பாகத்தில் தேய்மான கிரயம் அளவவிடப்பட்டுள்ளது | - | 913,378 |
| **நிதி உதவி நிகழ்ச்சித் திட்டங்களின் மொத்தம்** | - | 913,378 |

## இலங்கை முதலீட்டுச் சபை

### நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

**டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 14.3 நடைமுறை அல்லாத நிதி சொத்துக்கள்

கடன்களும் பெற்றுக்கொள்ள வேண்டியவையும் பின்வருமாறு முதிர்வு திகதி அடிப்படையில் பகுதி பகுதியாக தேய்மான கிரயத்தில் அளவிடப்பட்டுள்ளன.

| | | முதிர்வு | |
|---|---|---|---|
| | **31.12.2017**<br>**ரூபா** | 1முதல்5 ஆண்டு-களுக்கு இடையில் | 5 ஆண்டுகளின் பின்னர் |
| பணியாளர் கடன்களும் முற்பணங்களும் | 550,320,565 | 372,888,519 | 177,432,046 |
| **நடைமுறை அல்லாத மொத்த நிதி சொத்துக்கள்** | **550,320,565** | **372,888,519** | **177,432,046** |

| | | முதிர்வு | |
|---|---|---|---|
| | **31.12.2016**<br>**ரூபா** | 1முதல்5 ஆண்டு-களுக்கு இடையில் | 5 ஆண்டுகளின் பின்னர் |
| பணியாளர் கடன்களும் முற்பணங்களும் | 518,297,443 | 349,733,978 | 168,563,465 |
| **நடைமுறை அல்லாத மொத்த நிதி சொத்துக்கள்** | **518,297,443** | **349,733,978** | **168,563,465** |

| | **2017**<br>**ரூபா** | **2016**<br>**ரூபா** |
|---|---|---|
| **15 நடைமுறை நிதி சொத்துக்கள்** | | |
| ஒரு வருடத்தை விடக் குறைவான கால முதிர்வு பாகத்தில் தேய்மான கிரயம் அளவிடப்பட்டுள்ளது. | | |
| பணியாளர் கடன்கள் | 163,636,306 | 151,764,891 |
| பணியாளர் முற்பணங்கள் | 10,898,338 | 8,253,338 |
| பணியாளர் மொத்த கடன்களும் முற்பணங்களும் | 174,534,643 | 160,018,229 |
| நிதி உதவி நிகழ்ச்சித் திட்டம் **(குறிப்பு 14.2)** | - | 913,378 |
| முதிர்வடையும்வரைக்காக பேணப்பட்ட முதலீடு | | |
| நிலையான வைப்பு-அரச கடன் மற்றும் முதலீட்டு வங்கி | 6,263,246 | 6,048,665 |
| நிலையான வைப்பு | 20,000 | 20,000 |
| **மொத்த நடைமுறை நிதி சொத்துக்கள்** | **180,817,889** | **167,000,272** |

# இலங்கை முதலீட்டுச் சபை

## நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

| டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| **16 தொழில் முயற்சிகள் மூலம் கிடைக்கவேண்டியவை** | | |
| தொழில் முயற்சிகள் மூலம் கிடைக்கவேண்டியவை | 594,291,216 | 564,553,943 |
| கழிக்க - கடன்படுனர் இழப்பீடுகள் மீதான ஏற்பாடுகள்(குறிப்பு 16.1) | (349,670,032) | (304,664,041) |
| | **244,621,184** | **259,889,902** |

| **16.1 கடன்படுனர் இழப்பீடுகள் மீதான ஏற்பாடு** | | |
|---|---|---|
| ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி | 304,664,041 | 290,480,584 |
| ஆண்டில் பதிவழிக்கப்பட்டவை | - | - |
| ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டவை | 45,005,991 | 14,183,457 |
| டிஸம்பர் 31 ஆம் திகதியன்று மீதி | **349,670,032** | **304,664,041** |

| **17 முற்பண கொடுப்பனவுகளும் ஏனைய கிடைக்கவேண்டியவையும்** | | |
|---|---|---|
| முற்பண கொடுப்பனவுகள் | 2,823,796 | 2,218,845 |
| முற்பண கொடுப்பனவுகள் வெளிநாட்டு பயணம் | 742,559 | 569,999 |
| வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூது பணிகள் | 395,839 | 285,734 |
| நடமாடும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான முற்பணம் | 52,709,549 | 29,820,616 |
| முற்செலுத்தப்பட்ட செலவினங்கள் | 513,900 | - |
| வட்டி வருமானம் - கிடைக்க வேண்டியவை | 75,453,767 | 64,553,536 |
| கிடைக்கவேண்டிய வைப்பு | 11,085,104 | 10,191,354 |
| பூர்த்தியடையாத வழக்கிற்கு எதிரான வைப்பு | 105,766,250 | 105,766,250 |
| கிடைக்கவேண்டிய ஏனையவை | 281,357,610 | 490,544,092 |
| கழிக்க - கடன்படுனர் இழப்பீடுகள் மீதான ஏற்பாடுகள் (குறிப்பு 17.1) | (71,710,332) | (142,005,280) |
| | **459,138,042** | **561,945,146** |

| | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| **17.1 கடன்படுனர் இழப்பீடுகள் மீதான ஏற்பாடுகள்- ஏனைய கிடைக்கவேண்டியவை** | | |
| ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி | 142,005,280 | 33,049,931 |
| ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டவை | (70,294,948) | 108,955,349 |
| டிஸம்பர் 31 ஆம் திகதியன்று மீதி | **71,710,332** | **142,005,280** |

## இலங்கை முதலீட்டுச் சபை

### நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

| டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| **18 சாதகமான காசும், காசுக்கு சமமானவையும்** | | |
| இலங்கை வங்கி- தனியார் கிளை | 65,501,814 | 22,851,661 |
| இலங்கை வங்கி- தனியார் கிளை | 1,261,158 | 2,203,505 |
| இலங்கை வங்கி- தனியார் கிளை | 246,955 | 3,574,308 |
| சம்பத் வங்கி | 22,611 | 25,000 |
| இலங்கை வங்கி- கட்டுநாயகா | 29,766,885 | 31,936,303 |
| இலங்கை வங்கி- பியகம | 47,934,429 | 90,211,131 |
| இலங்கை வங்கி -கொக்கல | 6,126,785 | 4,729,127 |
| இலங்கை வங்கி - திகன | 4,561,930 | 2,418,480 |
| இலங்கை வங்கி - அவிசாவளை | 16,503,426 | 23,979,266 |
| இலங்கை வங்கி - இங்கிரிய | 3,036,019 | 16,106,528 |
| இலங்கை வங்கி - மீரிகம | 26,065 | 23,609,253 |
| இலங்கை வங்கி - நிட்டம்புவ | 5,471,748 | 5,044,141 |
| இலங்கை வங்கி - குருநாகல் | 4,570,527 | 3,212,586 |
| தங்க சவரன்கள் | 44,800 | 44,800 |
| பிராங்க் இயந்திர மீதி | 317,859 | 289,781 |
| தற்காலிக மிகை நிதியம் - இலங்கை வங்கி | 3,310,905 | 3,113,847 |
| தேசிய சேமிப்பு வங்கி - பணியாளர் பிணை வைப்புக்கள் | 221,324 | 210,560 |
| வைப்பு - பணிக்கொடை | 246,337,081 | |
| வைப்பகம் | 2,733,000,000 | 2,108,000,000 |
| அழைப்பு வைப்பு / ஏனைய வைப்புக்கள் | - | 75,059,096 |
| **மொத்த காசும், காசுக்கு சமானமானவையும்** | **3,168,262,320** | **2,416,619,374** |

**19 தள்ளிவைக்கப்பட்ட செலவினம்**

2008 இல் உலக வர்த்தக மையத்தின் 9 மாடிகள் BOI இனால் சுவீகரிக்கப்பட்டதுடன், உள்ளக அலங்காரப் பணிகள், தரை விரிப்பு, இடப் பரப்பை வேறுபடுத்தும் பணிகளுக்கான செலவினம் என்பன வருமானக் கூற்றில் 10 ஆண்டுகளென மதிப்பீடு செய்யப்பட்ட பயன்மிக்க ஆயுட்காலம் பூராகவும் நேர் கோட்டு முறைமை அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்ட வலய அபிவிருத்திக் கிரயம் 20 ஆண்டுகள் பூராகவும் இனங்காணப்பட்டுள்ளது.

| | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி | 419,319,798 | 437,454,012 |
| ஆண்டில் தள்ளிவைக்கப்பட்ட செலவினம் | 44,256,925 | 26,894,607 |
| கழிக்க - நடைமுறை ஆண்டு செலவினம் | (47,683,182) | (45,028,821) |
| டிஸம்பர் 31 ஆம் திகதியன்று மீதி | **415,893,541** | **419,319,798** |

## இலங்கை முதலீட்டுச் சபை

### நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

| டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | | 2017 | 2016 |
|---|---|---|---|
| **20 தள்ளிவைக்கப்பட்ட வருமானம்** | | ரூபா | ரூபா |
| காணி கட்டுப்பணம் | 20.1 | 15,358,994,399 | 15,100,455,558 |
| கொடை | 20.2 | 13,609,041 | 20,413,561 |
| | | **15,372,603,440** | **15,120,869,118** |

**20.1 தள்ளிவைக்கப்பட்ட வருமானம் - காணி கட்டுப்பணம்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி | 15,100,455,558 | 14,983,690,654 |
| ஆண்டில் கிடைக்கப்பெற்றவை | 461,771,403 | 343,740,891 |
| மாற்று இழப்பு | (230,437) | |
| அழிக்கப்பட்ட உடன்படிக்கை | (1,610,046) | (4,560,050) |
| வருமான கூற்றுக்கள் மூலம் இனங்காணப்பட்ட வருமானம் | (201,392,079) | (222,415,937) |
| டிஸம்பர் 31 ஆம் திகதியன்று மீதி (குறிப்பு 20.1.1) | **15,358,994,399** | **15,100,455,558** |

**20.1.1 தள்ளிவைக்கப்பட்ட வருமானம்**

| | 31.12.2017 ரூபா | முதிர்வு: 01 ஆண்டுக்குள் | 1முதல்5 ஆண்டு-களுக்கு இடையில் | 5 ஆண்டுகளின் பின்னர் |
|---|---|---|---|---|
| காணி கட்டுப்பணம் | 15,358,994,399 | 201,392,079 | 1,006,960,394 | 14,150,641,925 |
| | **15,358,994,399** | **201,392,079** | **1,006,960,394** | **14,150,641,925** |

| | 31.12.2016 ரூபா | முதிர்வு: 01 ஆண்டுக்குள் | 1முதல்5 ஆண்டு-களுக்கு இடையில் | 5 ஆண்டுகளின் பின்னர் |
|---|---|---|---|---|
| காணி கட்டுப்பணம் | 15,100,455,558 | 222,415,937 | 1,112,079,686 | 13,765,959,935 |
| | **15,100,455,558** | 222,415,937 | 1,112,079,686 | 13,765,959,935 |

**20.2 தள்ளிவைக்கப்பட்ட வருமானம் - கொடை**

ஜப்பானிய அரசாங்கத்தால் கிடைக்கப்பெற்ற கொடை நடைமுறை அல்லாத சொத்தாக அவற்றின் நியாயப் பெறுமதியில் இனங்காணப்பட்டுள்ளது. இனங்காணப்பட்ட அந்த சொத்துக்களின் தேய்மான செலவினத்திற்கு இசைவாக அக்காலத்திற்கான வருமானமாக கொடை இனங்காணப்பட்டுள்ளது.

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி | 20,413,561 | 27,218,081 |
| வருமான கூற்றுக்கள் மூலம் இனங்காணப்பட்ட வருமானம் | (6,804,520) | (6,804,520) |
| டிஸம்பர் 31 ஆம் திகதியன்று மீதி | **13,609,041** | **20,413,561** |

**21 ஓய்வூதிய அனுகூலமான கடப்பாடுகள்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி கடப்பாடுகளின் மொத்த தற்போதைய பெறுமதி | 236,228,948 | 249,038,271 |
| வட்டி செலவினம் | 25,985,184 | 24,903,827 |
| நடைமுறைச் சேவை செலவினம் | 12,530,688 | 11,481,759 |
| கடப்பாடுகள் மீதான ஆயுட்கணக்கர் (இலாபம்)/இழப்பு | 25,054,316 | (14,247,556) |
| **கழிக்க** - செய்யப்பட்ட கொடுப்பனவுகள் அல்லது ஆண்டில் செலுத்தவேண்டியவை | (34,114,597) | (34,947,353) |
| உரிய அனுகூலமான கடப்பாடுகளின் மொத்த தற்போதைய பெறுமதி | 265,684,539 | 236,228,948 |

## இலங்கை முதலீட்டுச் சபை

### நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

| டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **ஓய்வூதிய அனுகூலமான கடப்பாடுகள் (தொடர்ச்சி)** | | |
| **21.1 வருமான கூற்றில் இனங்காணப்பட்ட செலவினங்கள்** | | |
| வட்டி செலவினம் | 25,985,184 | 24,903,827 |
| நடைமுறைச் சேவை செலவினம் | 12,530,688 | 11,481,759 |
| ஆயுட்கணக்கர் (இலாபம்)/இழப்பு | 25,054,316 | (14,247,556) |
| ஓய்வூதிய பிரதிலாப கடப்பாடுகள் மொத்த செலவினங்கள் | 63,570,189 | 22,138,030 |

தொழில்துறைசார் ஆயுட்கணக்கர் M/S எம். பூபாலநாதனினால் டிஸம்பர் 31, 2017 திகதியன்றுள்ளவாறு ஓய்வூதிய பிரதிலாபகடப்பாட்டின் சுயாதீன ஆயுட்கால கணிப்பீட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. ஓய்வூதிய பிரதிலாப கடப்பாட்டை மதிப்பிடுவதற்கு "Projected Unit Credit Method" மதிப்பீட்டு முறை பயன்படுத்தப்பட்டது.

ஆயுட்கால கணிப்பீடுகள் பயன்படுத்தப்பட்ட பிரதான ஊகங்கள் கீழே உள்ளவற்றையும் உள்ளடக்குகிறது.

| | 2017 | 2016 |
|---|---|---|
| (i) கழிவு விகிதாசாரம் | 10% | 11% |
| (ii) சம்பளப்படி உயர்வு விகிதாசாரம் | நிலையானது | நிலையானது |
| (iii) எதிர்கால இறப்பு விகிதாசாரம் தொடர்பான ஊகம் | A1967/70 | A1967/70 |
| (iv) ஓய்வுபெறும் வயது | 60 ஆண்டுகள் | 60ஆண்டுகள் |

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **22 நிதி குத்தகை** | | |
| ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி | 56,660,901 | 57,326,624 |
| ஆண்டில் பெறப்பட்ட நிதி குத்தகை | 60,618,420 | 30,517,380 |
| VAT சீராக்கல் | - | 1,467,349 |
| ஆண்டில் செலுத்தப்பட்ட தவணைக் கட்டணங்கள் | (38,350,593) | (32,650,451) |
| டிஸம்பர் 31 ஆம் திகதியன்று மீதி | 78,928,729 | 56,660,902 |
| கழிக்க - தொங்கல் வட்டி | (17,228,557) | (11,672,072) |
| செலுத்தப்படவேண்டிய மூலதனம் | **61,700,171** | **44,988,830** |
| ஒரு வருடத்திற்குள் உள்ளான நீண்ட காலக் கடன் | 13,776,989 | 24,808,691 |
| ஒரு வருடத்திற்குப் பின்னரான நீண்ட காலக் கடன் | 47,923,182 | 20,180,139 |
| செலுத்தப்படவேண்டிய மொத்த நிதி குத்தகை | **61,700,171** | **44,988,830** |

| | 2017 | 2016 |
|---|---|---|
| **23** | | |
| **சேர்ந்த செலவினங்களும்,செலுத்தப்பட வேண்டிய ஏனையவையும்** | | |
| பல்வகை கடன்கொடுத்தவர்கள் | 90,216,777 | 53,238,525 |
| சேர்ந்த செலவினங்கள் | 214,861,337 | 209,565,324 |
| பொதுநலவாய FDI விருத்திக்காக கிடைக்கப்பெற்ற நிதி | 917,160 | 1,917,160 |
| சுனாமிக்காக கிடைக்கப்பெற்ற நிதி | 1,163,958 | 1,958,839 |
| வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்காகக் கிடைக்கப்பெற்ற நிதி | 761,058 | - |
| டயலக் - உதவிப்பணம் | 232,849 | - |
| எம்ஏஎஸ் ஹோல்டிங் - கொடை | 1,000,000 | - |
| முன்னதாகப் பெறப்பட்ட பெறுவனவுகள் | 319,418,722 | 277,689,681 |
| மீளளிக்கக்கூடிய வைப்புக்கள் | 113,243,633 | 107,263,729 |
| காணி முன் ஒதுக்கீட்டுக் கட்டணம் | 14,730,035 | 10,124,859 |
| கொடுக்கப்படவேண்டிய வைப்புக்கள் | 299,611,644 | 326,533,604 |
| மத்திய சுற்றுச் சூழல் அதிகாரசபை | 4,760,197 | 4,760,197 |
| **மொத்த செயற்பாடுகள் மற்றும் ஏனைய செலுத்தவேண்டிய நிதி** | **1,060,917,370** | **993,051,918** |

## இலங்கை முதலீட்டுச் சபை

### நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்
### டிஸம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு

| | | 2017<br>ரூபா(மிலி.) | 2016<br>ரூபா(மிலி.) |
|---|---|---|---|
| **24** | **செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசு** | | |
| | வருமானவரிக்குப் பின்னரான மிகை | 731.37 | 735.03 |
| | தேய்மானம் | 466.73 | 444.60 |
| | வருமானவரி செலவினம் | 70.76 | 47.34 |
| | ஓய்வூதிய அனுகூலமான கடப்பாட்டிற்கான ஏற்பாடு | 38.52 | 36.39 |
| | ஆயுட்கணக்கர் இலாபம் / நட்டம் | 25.05 | (14.25) |
| | கடன்படுனர் இழப்பீட்டிற்கான ஏற்பாடு | (27.59) | 21.00 |
| | பதிவழிக்கப்பட்ட இழப்பீடு | - | (1.23) |
| | தள்ளிவைக்கப்பட்ட வருமானம் - காணி கட்டுப்பணம் | (201.39) | (222.42) |
| | தள்ளிவைக்கப்பட்ட வருமானம் - மானியம் | (6.80) | (6.80) |
| | அழிக்கப்பட்ட உடன்படிக்கை மீதான வருமானம் | (1.61) | - |
| | நிலையான சொத்துக்கள் விற்பனை (இலாபம்)/நட்டம் | 0.14 | (2.97) |
| | முதலீட்டு வருமானம் | (336.92) | (195.64) |
| | குத்தகை மீதான வட்டி | 10.23 | 1.80 |
| | பின்போடப்பட்ட செலவினத்தின் தேய்மானம் | 47.68 | 45.03 |
| | **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான நடைமுறைத் தொழிற்பாட்டு மிகை** | **816.16** | **887.87** |
| | **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| | இருப்புகள் | (0.28) | (0.79) |
| | வர்த்தக தொழில் முயற்சிகளிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியவை | (29.74) | (90.73) |
| | முற்பண கொடுப்பனவும் ஏனைய கிடைக்கவேண்டியவையும் | (29.76) | 127.21 |
| | நிதி சொத்துக்கள் | (13.82) | (8.58) |
| | சேர்ந்த செலவினங்களும், செலுத்தப்பட வேண்டிய ஏனையவையும் | 67.87 | 169.10 |
| | **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்குப் பின்னரான நடைமுறைத் தொழிற்பாட்டு மிகை** | **810.44** | **1,084.08** |

**25 சம்பந்தப்பட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்கள்**

பார்க்க : இணைப்பு 1

**26 எதிர்பாராத பொறுப்பு**

**26.1** இணைக்கப்பட்டுள்ள விசாரணைக்கென நிலுவையிலுள்ள நிரலும், அவற்றின் பொறுப்புக்களும் செம்மையாக உறுதிப்படுத்த முடியாதுள்ளது. (இணைப்பு II)

**26.2** 01.01.2015 ஆம் திகதி இலங்கை முதலீட்டுச் சபைக்கு எதிராக மிலியன் காமன்ற் (பிறைவேற்) லிமிடட் இனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தினால் கைப்பற்றப்பட்ட ரூபா 102,135,350.00 க்கான ஒதுக்கம்

**இணைப்பு 1**

**சம்பந்தப்பட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்கள்**

1. திரு துமிந்த்ர ரத்நாயக்க, தலைவர் - 2017 இல் இமுச தொழில் முயற்சிகளுடன் அவருக்கு எந்த கொடுக்கல் வாங்கல்களும் இல்லையென இமுச குறிப்பிட்டுள்ளது.

2. திரு பீ.பி. மங்கள யாப்பா, சபை அங்கத்தவர் - 2017 இல் இமுச தொழில் முயற்சிகளுடன் அவருக்கு எந்த கொடுக்கல் வாங்கல்களும் இல்லையென இமுச குறிப்பிட்டுள்ளது

3. திரு சாகர குணவர்தன, சபை அங்கத்தவர் - 2017 இல் இமுச தொழில் முயற்சிகளுடன் அவருக்கு எந்த கொடுக்கல் வாங்கல்களும் இல்லையென இமுச குறிப்பிட்டுள்ளது

4. திரு ஹேமந்த விக்ரமசிங்க, சபை அங்கத்தவர் - 2017 இல் இமுச தொழில் முயற்சிகளுடன் அவருக்கு எந்த கொடுக்கல் வாங்கல்களும் இல்லையென இமுச குறிப்பிட்டுள்ளது.

5. திரு அஜித் குணவர்தன, சபை அங்கத்தவர் - இமுச பின்வரும் இமுச தொழில் முயற்சிகளைக் கட்டுப்படுத்துவதுடன்/அல்லது குறிப்பிடப்பட்ட செல்வாக்கைக் கொண்டிருக்கிறது. இமுச வுடன் 2017 இல் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ளது.

    1. ஜோன் கீல்ஸ் இன்டர்நஷனல் (தனியார்) லிமிடட்
    2. கொழும்பு ஐஸ் கம்பனி (தனியார்) லிமிடட்
    3. ஜோன்கீல்ஸ் கம்பியூட்டர் சேவைகள் (தனியார்) லிமிடட்
    4. ஜோன் கீல்ஸ் BPO சொலூசன்ஸ் லங்கா (தனியார்) லிமிடட்
    5. ஹபரண லொட்ஜ் லிமிடட்
    6. இன்ரர்நஷனல் ரூறிஸ்ட்ஸ் மற்றும் ஹோரலியர்ஸ் லிமிடட்
    7. கண்டி வோக் இன் லிமிடட்
    8. ரஜவெல்ல ஹோரல்ஸ் லிமிடட்
    9. ஏசியன் ஹோரல்ஸ் அன்ட் ப்ரொபரீஸ் PLC
    10. ரான்ஸ் ஏசியா ஹோரல்ஸ் PLC
    11. யால விலேஜ் (தனியார்) லிமிடட்
    12. பேருவல ஹொலிடே றிசோாட்ஸ் (தனியார்) லிமிடட்
    13. ட்ரிங்கோ ஹொலிடே றிசோட்ஸ் (தனியார்) லிமிடட்
    14. ஹிக்கடுவ ஹொலிடே றிசோாட்ஸ் (தனியார்) லிமிடட்
    15. ஜோன் கீல்ஸ் றெசிடென்ஷல் ப்ரொபரீஸ் (தனியார்) லிமிடட்
    16. பிரிட்டிஷ் ஓவர்சீஸ் (தனியார்) லிமிடட்
    17. வோட்டர்ப்ரொன்ட் ப்ரொபரீஸ் (தனியார்) லிமிடட்
    18. ரான்ஸ்வெயர் லொஜிஸ்ரிக்ஸ் (தனியார்) லிமிடட்
    19. சவுத் ஏசியா கேற்வே ரேமினல்ஸ் (தனியார்) லிமிடட்
    20. லங்கா மரைன் சேவிஸஸ் (தனியார்) லிமிடட்
    21. ஜோன் கீல்ஸ் லொஜிஸ்ரிக்ஸ் (தனியார்) லிமிடட்
    22. சப்ரோன் ஏவியேஷன் (தனியார்) லிமிடட்
    23. ரஜவெல்ல ஹோல்டிங் லிமிடட்
    24. ஜோன் கீல்ஸ் வெயர்ஹவுஸிங் (தனியார்) லிமிடட்
    25. மக்கினோன்ஸ் ட்ரவல்ஸ் (தனியார்) லிமிடட்
    26. விரவில வோக் இன் லிமிடட்

# 31.12.2017 இல் பூர்த்தியாகாத சட்டபூர்வமான வழக்குகள்

| தொ/ இல | வழக்கு இல. | வாதிப் பிரதிவாதிகள் | கொண்டுநடத்தும் அலுவலர் | அறிவுறுத்தும் வழக்கறிஞர்/அதிகாரம் பெற்ற பிரதிநிதி | சட்ட ஆலோசகர்/கள் |
|---|---|---|---|---|---|
| 1 | உ.நீ மேல் வழக்கு 31/09 உம் 35-78/09 **(45 வழக்குகள்)** | இமுச -எ- சந்தன கருணாதிலகவும் ஏனைய 44 பேரும் | Ms. நப்லா நியாஸ், சட்ட உத்தியோகத்தர் | M/S சமரரட்ன அசோசியேட்ஸ் | திரு. எஸ். ஏ. பரதலிங்கம், ஜனாதிபதி சட்டத்தரணி |
| 2 | உ.நீ மேல் வழக்கு 53/2012 | பொனாவென்சர் ரெக்ஸ்ரைல்ஸ் (லங்கா) லிமிடட் இன் இணை கலைப்பலுவலர்கள் -எ- இமுச | Ms. டீல்றுக்ஷி தெஹிதென்ய, உபபணிப்பாளர் (சட்டம்) | M/S ஷிராந்தி குணவர்தன அசோசியேட்ஸ் | திரு. ஹிரான் எம்.சீ. டீ அல்விஸ், சட்டத்தரணி |
| 3 | உ.நீ மேல் வழக்கு 54/2012 | பொனாவென்சர் எப்பரல்ஸ் (லங்கா) லிமிடட் இன் இணை கலைப்பலுவலர்கள் -எ- இமுச | | | |
| 4 | உ.நீ. (மத்தி) 1254/2002 | மில்லியன் காமன்ட்ஸ் (தனியார்) லிமிடட் -எ- இமுச | Ms.ஹெமதரீ நவோருன்ன, சட்ட உத்தியோகத்தர் | M/S ஷிராந்தி குணவர்தன அசோசியேட்ஸ் | திரு ரொனால்ட் சீ பெரேரா, ஜனாதிபதி சட்ட த்தரணி |
| 5 | உ.நீ. (குடியியல்) 49/2011/CO | ப்ரோபக் ஷெரீன (தனியார்) லிமிடட்-எ- ஹைகவ இன்டஸ்றீஸ் (தனியார்) லிமிடட் | Ms.செவாந்தி மதுபாஷினி, சட்ட உத்தியோகத்தர் | M/S ஷிராந்தி குணவர்தன அசோசியேட்ஸ் | திரு. லக்ஷ்மன் பெரேரா, ஜனாதிபதி சட்டத்தரணி |
| 6 | மா.நீ. கொழும்பு DMR 01262/13 | இமுச -எ- உபசேன ப்ரொபட்டி டெவலப்மென்ற் (தனியார்) லிமிடட் | Ms. ரோஷ்னி ரணதுங்க, நிறைவேற்று (சட்டம்) | M/S ஷிராந்தி குணவர்தன அசோசியேட்ஸ் | திரு. தினேஷ் விதானபத்ரண, சட்டத்தரணி |
| 7 | மத்தியஸ்தம் | வெஹிக்கிள்ஸ் லங்கா (தனியார்) லிமிடட் -எ- இமுச | Ms. நப்லா நியாஸ், சட்ட உத்தியோகத்தர் | அதிகாரம் பெற்ற பிரதிநிதி தேவைப்படவில்லை | திரு. எஸ். ஏ. பரதலிங்கம், ஜனாதிபதி சட்டத்தரணி |
| 8 | மத்தியஸ்தம் | க்ரவுண் சிற்றி டெவலப்பர்ஸ் (தனியார்) லிமிடட் -எ- இமுச | Ms. சுகுமாரி நிரஞ்சன், உதவி பணிப்பாளர் (சட்டம்) | அதிகாரம் பெற்ற பிரதிநிதி தேவைப்படவில்லை | திரு. லக்ஷ்மன் பெரேரா, ஜனாதிபதியின் சட்டஆலோசகர் |
| 9 | எல்.சீ.ஐ.ஏ. மத்தியஸ்தம் 163250 | ஹவுஸிங் அன்ட் கொன்ஸ்ரக்ஷன்ஸ் லங்கா (தனியார்) லிமிடட் -எ- இமுச | Ms. சுகுமாரி நிரஞ்சன், உதவி பணிப்பாளர் (சட்டம்) | அதிகாரம் பெற்ற பிரதிநிதி தேவைப்படவில்லை | திரு. டினால் பிலிப்ஸ், ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் |
| 10 | மா.நீ.கொழும்பு DMR 02244/2015 | ஸ்ரேலிங் குரூப் லங்கா (தனியார்) லிமிடட் | Ms. ஹேமத்ரி நவோதுன்ன - சட்ட உத்தியோகத்தர் | M/S சமரரட்ன அசோசியேட்ஸ் | திரு.ஷிவான் குரே, சட்டத்தரணி |
| 11 | மே.மு.நீ. (கட்டளை) 444/2015 | யு.ரீ.எம்.ரீ. றிசோட் (தனியார்) லிமிடட் -எ- இமுச | Ms.செவாந்தி விஜயசிங்க, சட்ட உத்தியோகத்தர் | M/S சமரரட்ன அசோசியேட்ஸ் | திரு.சண்டமால் ராஜபக்ஷ, சட்டத்தரணி |
| 12 | மே.மு.நீ. (கட்டளை) 488/2015 | இமுச - எ- வன பாதுகாவலரும் ஏனைய 25 பேரும் | Ms.செவாந்தி விஜயசிங்க, சட்ட உத்தியோகத்தர் | M/S சமரரட்ன அசோசியேட்ஸ் | திரு ரொனால்ட் சீ பெரேரா, ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் |
| 13 | மே.மு.நீ. (கட்டளை) 465/2015 | எட்னா கொக்கோவா ப்ரடக்ஸ் (தனியார்) லிமிடட் -எ- இமுச யும் ஏனைய 02 பேரும் | Ms.றுஷ்டா நியாஸ், சட்ட உத்தியோகத்தர் | M/S ஷிராந்தி குணவர்தன அசோசியேட்ஸ் | திரு.சண்டமால் ராஜபக்ஷ, சட்டத்தரணி |

| தொ/ இல | வழக்கு இல. | வாதிப் பிரதிவாதிகள் | கொண்டுநடத்தும் அலுவலர் | அறிவுறுத்தும் வழக்கறிஞர்/அதிகாரம் பெற்ற பிரதிநிதி | சட்ட ஆலோசகர்/கள் |
|---|---|---|---|---|---|
| 14 | உ.நீ (F/R) 455/2015 | எஸ். வை. நவரட்ன -எ- இமுச யும் ஏனைய 09 பேரும் | Ms.றுஷ்டா நியாஸ், சட்ட உத்தியோகத்தர் | M/S சமரரட்ன அசோசியேட்ஸ் | திரு ரொனால்ட் சீ பெரேரா, ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் |
| 15 | மே.மு.நீ. (கட்டளை) 455/2015 | உபாலி ஆனந்த குணசிங்க -எ- இமுச யும் ஏனைய 06 பேரும் | Ms.ஹெமதரீ நவோருன்ன, சட்ட அதிகாரி | M/S சமரரட்ன அசோசியேட்ஸ் | திரு. எஸ். ஏ. பரதலிங்கம், ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் |
| 16 | மே.மு.நீ. (கட்டளை) 487/2015 | ரீ.ஆர்.ரட்னசிறி - எ - இமுச யும் ஏனைய 08 பேரும் | Ms.காயத்ரி பர்ணாந்து, சட்ட உத்திரோகத்தர் | M/S சமரரட்ன அசோசியேட்ஸ் | திரு. ஜே.சீ. வெலியமுன, சட்டத்தரணி |
| 17 | மே.மு.நீ. (கட்டளை) 469/2015 | எச்.வீ.ஏ.பார்ம்ஸ் (தனியார்) லிமிடட் - எ - இமுச யும் ஏனைய 08 பேரும் | Ms. நுப்லா நியாஸ், சட்ட உத்தியோகத்தர் | M/S சமரரட்ன அசோசியேட்ஸ் | திரு. ஜே.சீ. வெலியமுன, சட்டத்தரணி |
| 18 | மே.மு.நீ. (கட்டளை) 49/2016 | மோர்பொக் எம்டீஎப் லங்கா (தனியார்) லிமிடட் - எ - இமுச யும் ஏனைய 04 பேரும் | Ms. நுப்லா நியாஸ், சட்ட உத்தியோகத்தர் | M/S சமரரட்ன அசோசியேட்ஸ் | திரு. ஜே.சீ. வெலியமுன, சட்டத்தரணி |
| 19 | உ.நீ. (F/R) 141/2015 | ரவீந்ர குணவர்தன காரியவாசம் - எ - இமுச யும் ஏனைய 09 பேரும் | Ms.ஷெஹானி பெரேரா, சட்ட உத்தியோகத்தர் | சட்டமா அதிபர் திணைக்களம் | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 20 | தொ.தீ.கொழும்பு 01/20/2016 | எம்.எம்.அமில் ஜனக் -எ - இமுச | Ms.ஷெரோம் விஜயசிங்க, நிறைவேற்று (சட்டம்) | அதிகாரம் பெற்ற பிரதிநிதி தேவைப்படவில்லை | திரு.மதுபாஷன ஆரியதாஸ, சட்டத்தரணி |
| 21 | மே.மு.நீ (R/I) 08/2016 | இமுச - எ - மில்லியன் காமன்ட்ஸ் (தனியார்) லிமிடட் | Ms.றுஷ்டா நியாஸ், சட்ட உத்தியோகத்தர் | M/S ஷிராந்தி குணவர்தன அசோசியேட்ஸ் | திரு ரொனால்ட் சீ பெரேரா, ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் |
| 22 | உ.நீ. களுத்துறை ALT 39/2016 | இலங்கை பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் - எ - இமுச யும் ஏனைய 02 பேரும் | Ms. செவாந்தி மதுபாஷினி, சட்ட உத்தியோகத்தர் | திரு.வீ.எல். அசுரப்புலி, சட்டத்தரணி | திரு.வீ.எல். அசுரப்புலி, சட்டத்தரணி |
| 23 | உ.நீ. களுத்துறை ALT 40/2016 | இ மு ச - எ - இலங்கை தோட்ட பணியாளர் சங்கமும் ஏனைய 02 பேரும் | | | |
| 24 | உ.நீ. (குடியியல் 56/2016/CO | எம்ஜ.கே. பெரேரா - எ - லுமியரே ரெக்ஸ்ரைல்ஸ் லிமிடட் உம் ஏனைய 06 பேரும் | Ms.ஷெரோம் விஜயசிங்க, நிறைவேற்று (சட்டம்) | M/S சமரரட்ன அசோசியேட்ஸ் | திரு.சண்டமால் ராஜபக்ஷ, சட்டத்தரணி |
| 25 | மா.நீ. கொழும்பு DSP 152/2016 | எஸ்.வை. நவரட்ன - எ - இமுச யும் இன்னும் ஒருவரும் | Ms.றுஷ்டா நியாஸ், சட்ட உத்தியோகத்தர் | M/S சமரரட்ன அசோசியேட்ஸ் | திரு ரொனால்ட் சீ பெரேரா, ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் |
| 26 | மே.மு.நீ. (கட்டளை) 386/2016 | ஆசிரி சேர்ஜிக்கல் ஹொஸ்பிற்றல்ஸ் பீஎல்சீ - எ - இமுச யும் ஏனைய 02 பேரும் | Ms. செவாந்தி மதுபாஷினி, சட்ட உத்தியோகத்தர் Ms.காயத்ரி பர்ணாந்து. சட்ட உத்தியோகத்தர் | M/S சமரரட்ன அசோசியேட்ஸ் | திரு ரொஹான் சகபாந்து, ஜனாதிபதி வழக்குரைஞர் |
| 27 | மே.மு.நீ. (கட்டளை) 393/2016 | லங்கா ஹெல்த் கெயர் சேவிஸஸ் (தனியார்) லிமிடட் - எ - இமுச யும் ஏனைய 06 பேரும் | | M/S சமரரட்ன அசோசியேட்ஸ் | திரு.ஷிவான் குரே, சட்டத்தரணி |

| தொ/ இல | வழக்கு இல. | வாதிப் பிரதிவாதிகள் | கொண்டுநடத்தும் அலுவலர் | அறிவுறுத்தும் வழக்கறிஞர்/அதிகாரம் பெற்ற பிரதிநிதி | சட்ட ஆலோசகர்/கள் |
|---|---|---|---|---|---|
| 28 | மே.மு.நீ. (கட்டளை) 382/2016 | இந்திவரி அக்வா (தனியார்) லிமிடட் ம் இன்னும் ஒருவரும் - எ - இமுச யும் 09 பேரும் | Ms.ஷெரோம் விஜயசிங்க, நிறைவேற்று (சட்டம்) | Ms. லிலாந்தி டி சில்வா, சட்டத்தரணி | திரு. வருணா சேனாதிரா, சட்டத்தரணி |
| 29 | தொ.தீ. கொழும்பு 01/10/2017 | கே.டி.ஜயவர்தன - எ - இமுச | Ms.ஷெஹானி பெரேரா, சட்ட உத்தியோகத்தர் | அதிகாரம் பெற்ற பிரதிநிதி தேவைப்படவில்லை | திரு. நிமால் றன்முக்காராச்சி, சட்டத்தரணி |
| 30 | மே.மா. (HCCA) 24/2016 | எஸ் என்.கனகாம்பை -எ- தலைவர் (இமுச) | Ms. ரோஷ்னி ரணதுங்க நிறைவேற்று (சட்டம்) | திரு. பிரியலால் சிறிசேன | திரு. பீ .இராதாகிருஷ்ணன், சட்டத்தரணி |
| 31 | மே.மா. (HCCA) 23/2016 | ஆர்.எம்.ஏ.ஐ. ராஜகருணா - எ - தலைவர் (இமுச) | | | |
| 32 | தொ. தீ. (கொழும்பு 08/137/2017 | கே.லஷ்மி மல்காந்தி -எ- இமுச | Ms. ரோஷ்னி ரணதுங்க நிறைவேற்று (சட்டம்) | அதிகாரம் பெற்ற பிரதிநிதி தேவைப்படவில்லை | திரு. நிமால் றன்முக்காராச்சி, சட்டத்தரணி |
| 33 | மே.நீ. (SPL) L.A. 182/2017 | ஆர். ஏ. தர்மதாஸ - எ - இமுச | | சட்ட பகுதி - இமுச | திரு.ஜனபிரித் பெர்ணான்டோ, சட்டத்தரணி |
| 34 | மே.நீ (F/R) 265-274 & 346-348/11 (13 வழக்குகள்) | எச். எம்.எம். சம்பத் குமார வும் ஏனைய 12 பேரும் -எ- ஓஐசீ, பொலிஸ் நிலையம், கட்டுநாயக வும் ஏனைய 07 பேரும் | Ms. சுகுமாரி நிரஞ்சன், உதவி பணிப்பாளர் (சட்டம்) | இமுச சட்ட பகுதி | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 35 | மே.மு.நீ. (கட்டளை) 366/2010 | சவுத் வெஸ்ற் அப்பரல் (தனியார்) லிமிடட் -எ- பணிப்பாளர் (I/R) - இமுச யும் ஏனைய 600 பேரும் | Ms.ஷெரோம் விஜயசிங்க, நிறைவேற்று (சட்டம்) | இமுச சட்ட பகுதி | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 36 | மே.மு.நீ. (கட்டளை) 307/2008 | MTV சனல் (தனியார்) லிமிடட் -எ- சுங்க பணிப்பாளர் நாயகமும் ஏனைய 03 பேரும் | Ms.காயத்ரி பர்ணாந்து, சட்ட உத்தியோகத்தர் | இமுச சட்ட பகுதி | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 37 | உ.நீ. (குடியியல்) 36/2012/CO | மக் சப்ளை செயின் சொலூசன்ஸ் (தனியார்) லிமிடட்(வாதி) யும் இப்போது லிங்கொன் சந்திரசோம பியசேன (மீ-கப்பிற்றல் கொன்சொலிடேற்றட் லங்கா பிளாவேற் லிமிடட் கலைப்பலுவலர் -எ- ஸ்ரார் க்ளோதிங் இன்ரர்நஷனல் (தனியார்) லிமிடட் உம் ஏனைய 02 பேரும் | Ms.ஷெரோம் விஜயசிங்க, நிறைவேற்று (சட்டம்) | இமுச சட்ட பகுதி | சட்டமா அதிபர் திணைக்களம் |

| தொ/ இல | வழக்கு இல. | வாதிப் பிரதிவாதிகள் | கொண்டுநடத்தும் அலுவலர் | அறிவுறுத்தும் வழக்கறிஞர்/அதிகாரம் பெற்ற பிரதிநிதி | சட்ட ஆலோசகர்/கள் |
|---|---|---|---|---|---|
| 38 | மா.நீ. கம்பஹ 2165/L | எம்.எம்.எம். ஸ்மைல் -எ- இமுச | Ms.ஷெஹானி பெரேரா, சட்ட உத்தியோகத்தர் | இமுச சட்ட பகுதி | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 39 | ICC மத்தியஸதம் 18656/CYK | செவனகல சுகர் இன்டஸ்ரீஸ் லிமிடட் -எ- இமுச | செ.ஹெமதரீ நவோருன்ன, சட்ட அதிகாரி | அதிகாரம் பெற்ற பிரதிநிதி தேவைப்படவில்லை | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 40 | உ.நீ. (குடியியல்) 579/2016 MR | டீ.பீ. ஜயசிங்க பில்லிங் கம்பனி (தனியார்) லிமிடட் -எ- இமுச யும் ஏனைய 02 பேரும் | Ms.ஷெஹானி பெரேரா, சட்ட உத்தியோகத்தர் | சட்டமா அதிபர் திணைக்களம் | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 41 | மே.மு.நீ. (கட்டளை) 112/2015 | சென்ரர் பொ என்வயர்மென்ரல் ஜஸ்ரிஸ் (உத்தரவாதம்) லிமிடட் -எ- இமுச யும் ஏனைய 07 பேரும் | Ms.காயத்ரி பர்ணாந்து, சட்ட உத்திரோகத்தர் | சட்டமா அதிபர் திணைக்களம் | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 42 | மே.நீ. (F/R) REF 57/2017 | சென்ரர் பொ என்வயர்மென்ரல் ஜஸ்ரிஸ் (உத்தரவாதம்)லிமிடட்டும் ஏனைய 04 பேரும் -எ- பணிப்பாளர் நாயகம் (இமுச) யும் ஏனைய 16 பேரும் | Ms.றுஷ்டா நியாஸ், சட்ட உத்தியோகத்தர் | சட்டமா அதிபர் திணைக்களம் | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 43 | மா.நீ. கொழும்பு DSP 68/2017 | டி.எம். இன்டஸ்ரீஸ் லிமிடட் -எ- இமுச யும் ஏனைய 02 பேரும் | Ms.ஷெஹானி பெரேரா, சட்ட உத்தியோகத்தர் | சட்டமா அதிபர் திணைக்களம் | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 44 | உ.நீ. 3505/06 | M/s மில்லியன் காமன்ட்ஸ் (தனியார்) லிமிடட் தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் ரஞ்சித் அமரசிங்கவிற்கு எதிராக குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு | Ms.றுஷ்டா நியாஸ், சட்ட உத்தியோகத்தர் | அதிகாரம் பெற்ற பிரதிநிதி தேவைப்படவில்லை | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 45 | c.eP.H.C. 3127/06 | M/s மில்லியன் காமன்ட்ஸ் (தனியார்) லிமிடட் தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் ரஞ்சித் அமரசிங்கவிற்கு எதிராக குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு | Ms.றுஷ்டா நியாஸ், சட்ட உத்தியோகத்தர் | அதிகாரம் பெற்ற பிரதிநிதி தேவைப்படவில்லை | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 46 | உ.நீ. (F/R) 355/2017 | கே.பீ. விதர்ஷன் திஷாந்த பர்னாந்து -எ- இமுச | Ms.றுஷ்டா நியாஸ், சட்ட உத்தியோகத்தர் | சட்டமா அதிபர் திணைக்களம் | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 47 | உ.நீ. (SPL) LA 227/2017 | ஈகோ ரெக் க்ரியேற் 21 கம்பனி (தனியார்) லிமிடட் உம் இன்னொன்றும் -எ- இமுச யும் இன்னும் 07 பேரும் | Ms. நப்லா நியாஸ், சட்ட உத்தியோகத்தர் | சட்டமா அதிபர் திணைக்களம் | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 48 | மே.மு.நீ. (கட்டளை) 384/2017 | சுசுங் லங்கா இன்டஸ்ரீஸ் கம்பனி (தனியார்) லிமிடட் உம் இன்னொன்றும் - எ- இமுச யும் ஏனைய 06 பேரும் | Ms. டில்றுக்ஷி தெஹிதெனிய உதவி பணிப்பாளர்(சட்டம்) | சட்டமா அதிபர் திணைக்களம் | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 49 | உ.நீ.(ARB) 645/2017 | இமுச - எ- அவொகாடிய சிலோன் (தனியார்) லிமிடட் | Ms. டில்றுக்ஷி தெஹிதெனிய உதவி பணிப்பாளர்(சட்டம்) | இமுச சட்ட பகுதி | சட்டமா அதிபர் திணைக்களம் |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

# 2017

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. TIP/B/BOI/1/17/59 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 27 November 2018

INTERNAL AUDIT DEPARTMENT B.O.I. 469 13 DEC 2018

Director General's Office 12 DEC 2018 Board of Investment of Sri Lanka

CHAIRMAN'S OFFICE 10 DEC 2018 BOARD OF INVESTMENT OF SRI LANKA

The Chairman,

Board of Investment of Sri Lanka

**Report of the Auditor General on the Financial Statements of the Board of Investment of Sri Lanka (BOI) for the year ended 31 December 2017 in terms of Section 14(2)(C) of the Finance Act, No.38 of 1971.**

---

Reference to my letter of even number dated 23 October 2018 on the above subject.

02. The Tamil version of the above mentioned report is sent herewith.

D (I.A)
12/12

E.A.G.Ananda
Deputy Auditor General
For Auditor General

Copies : 1. Secretary - Ministry of Finance and Economic Affair

2. Secretary - Ministry of Development Strategies and International Trade

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஜபி/பீ/பீஓஜ/1/17/59    මබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2018 ஒக்தோபர் 23

தலைவர்

இலங்கை முதலீட்டுச் சபை

**இலங்கை முதலீட்டுச் சபையின் (பீஓஜ) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை முதலீட்டுச் சபையின் ("சபை") 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 49 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறு 1978 இன் 4 ஆம் இலக்க கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2017 ஒக்தோபர் 01 இல் சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.    இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.    No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34    +94 11 2 88 72 23    ag@auditorgeneral.gov.lk    www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை முதலீட்டுச் சபையின் (பீஓஐ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான (எல்கேஏஎஸ்) இணக்கப்பாடு.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **எல்கேஏஎஸ் 01 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்:-** திரண்ட நிதியிலிருந்து நேரடியாகக் கழிக்கப்பட்ட பாரிய செயற்திட்டங்களிற்கான உட்கட்டமைப்பு வசதிகளிற்காக ஏற்பட்ட செலவினத்துடன் தொடர்புபட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், தன்மை மற்றும் சந்தர்ப்பங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்:-** சபை கொள்வனவு ஆண்டில் நிலையான சொத்துக்களின் மீது பெறுமானத்தேய்வினை விதித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், அகற்றப்படும் ஆண்டில் முழுமையாக அது விதிக்கப்பட்டிருந்தது. ஆகையினால், மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு நிதிக்கூற்றுக்களில் ரூபா 7,866,369 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) **எல்கேஏஎஸ் 24 – தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்:-** தொடர்புடைய தரப்பினர்களுடன் நடாத்தப்பட்ட தனித்தனியான முக்கியத்துவம்வாய்ந்த கொடுக்கல்வாங்கல்களின் தன்மை மற்றும் பெறுமதியினை வெளிப்படுத்த சபை தவறியிருந்தது.

(ஈ) **எல்கேஏஎஸ் 39 – நிதிக்கருவிகளினை இனங்காணல் மற்றும் அளவிடல்:-** நீண்ட காலம் நிலுவையாகவுள்ள உத்தியோகத்தர் கடன் மீதி மீதான நட்டக்கழிவு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் இலங்கை மர முந்திரிகைக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறவேண்டியவையாக ரூபா 209,600,000 தொகையொன்று காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் சபைக்கு செலுத்தவேண்டியவையாக தொடர்புடைய தொகை காட்டப்பட்டிருக்காததுடன் இது சபைக்குக் கூட உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், அந்த மீதியின் அறவிடுதன்மை கணக்காய்வில் ஐயத்திற்குரியதாகக் காணப்பட்டது.

(ஆ) ஹொரன ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களில் (எச்ஈபிஇசட்) தனியார் கம்பனியொன்றிடமிருந்து பெறப்பட்ட காணி கட்டண வருமானம் ரூபா 1,410,549 இனால் மியைாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் கணிப்பிட்டு பிழை காரணமாக சம தொகையினால் பிற்போடப்பட்ட வருமானம் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான பிற்போடப்பட்ட செலவினம் மீதான நட்டக்கழிவு கணிப்பீட்டுப் பிழை காரணமாக ரூபா 1,330,929 இனால் மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) மிரிஜ்ஜவில ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தின் 3 நிர்மாண வேலைகள் தொடர்பிலான ரூபா 930,142 மொத்த ஒப்பந்தப் பெறுமதி 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த வேலைகள் மூலதனமாக்கப்பட்டிராது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை வேலைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கஞ்செய்யப்படாத வித்தியாசங்கள்

---

உண்மையான மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான ஓய்வு நலக் கடப்பாட்டிற்கான ஏற்பாடு ரூபா 24,115,267 ஆகக் காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 25,054,316 ஆகக் காட்டப்பட்டிருந்தது. ஆகையினால், ரூபா 939,049 இணங்கஞ்செய்யப்படாத வித்தியாசமொன்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான பீஓஐ அங்கீகரிக்கப்பட்ட முயற்சிகளிடமிருந்தான நிலுவை ரூபா 594,291,216 தொகையாகக் காணப்பட்டதுடன் அதில், ரூபா 279,622,328 தொகையொன்று அல்லது 47 சதவீதம் இரண்டு வருடங்களுக்கும் மேலாக நிலுவையாக தொடர்ந்தும் காணப்படுகின்றது. மேலும், பீஓஐ அங்கீகரிக்கப்பட்ட முயற்சியகங்களிடமிருந்தான நிலுவைகள் மீதான நட்டக்கழிவிற்கான ஏற்பாடு மீளாவாண்டின் இறுதியில் உள்ளபடியான மொத்த நிலுவைகளின் 59 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான பெறவேண்டிய வருடாந்த கட்டணங்கள் ரூபா 252,766,237 தொகையாகக் காணப்பட்டதுடன், இதில் ரூபா 156,034,986 தொகையொன்று அல்லது 62 சதவீதம் நான்கு வருடங்களுக்கு மேலாக நிலுவையாக தொடர்ந்தும் காணப்படுகின்றது. அதேவேளை, அவற்றின் மீது மீளாய்வாண்டின் போது ரூபா 221,713,312 நட்டக்கழிவிற்கான ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகளின் 88 சதவீதத்தினை அது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

மேலும், பெறவேண்டிய வருடாந்த கட்டண நட்டக்கழிவிற்கான மொத்த ஏற்பாடுகளில், ரூபா 201,646,285 தொகையொன்று அல்லது 91 சதவீதம், 529 ரத்துச்செய்யப்பட்ட செயற்திட்டங்கள், 151 பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் 75 செயற்பாடு கைவிடப்பட்ட செயற்திட்டங்களிலிருந்தான நிலுவைகளினைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 349,670,032 நட்டக்கழிவிற்கான மொத்த ஏற்பாடுகளில் ரூபா 262,358,801 தொகையொன்று அல்லது 75 சதவீதம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ரத்துச்செய்யப்பட்டு மூடப்பட்ட மற்றும் செயற்பாடுகள் கைவிடப்பட்ட செயற்திட்டங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட நட்டக்கழிவினைப் பிரதிநிதிப்படுத்துகின்றது.

(இ) வதுப்பிட்டிவல வீடமைப்பு அலகுகளினை ஏலத்தில் விற்கப்பட்டுக் காணப்பட்ட தனியார் கம்பனியொன்றிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,604,200 தொகையொன்று ஏழு வருடங்களுக்கும் மேலாக அறவிடப்படாது

தொடர்ந்தும் காணப்பட்டதுடன் கம்பனி மற்றும் சபைக்கிடையே உடன்படிக்கையொன்று காணப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு எவ்வித ஆவணமும் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) ரூபா 507,650 காசு பற்றாக்குறையொன்று பதினான்கு வருடங்களுக்கும் மேலாக மாற்றமின்றி ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் தொடர்ந்தும் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ரூபா 281,357,610 தொகையான மொத்த ஏனைய பெறவேண்டியவைகளில், ரூபா 253,346,759 தொகையொன்று அல்லது 90 சதவீதம் அமைச்சுக்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளிடமிருந்தான நிலுவைகளினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அரச நிறுவகங்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 37,680,103 நிலுவையாகவுள்ள மீதியொன்று 4 வருடங்களுக்கு மேலாக அறவிடப்பட்டிருக்காமை மேலும் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நிறுவகத்தின் பெயர் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிலுவையாகவுள்ள தொகை |
|---|---|
| | ரூபா. |
| மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை | 37,412,573 |
| வெளிவிவகார அமைச்சு | 141,950 |
| இலங்கை அரச தோட்டங்கள் கூட்டுத்தாபனம் | 125,580 |
| **மொத்த தொகை** | **37,680,103** |

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையிடமிருந்த பெறவேண்டிய தொகை பத்து வருடங்களுக்கு மேலாக மாற்றமின்றி தொடர்ந்தும் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 வரையிலும் இந்த மீதிகளினை அறவிடுவதற்கு தவறியதிதிலிருந்து, நான்கு வருடங்களுக்கு மேலதிகமாக அரச நிறுவகங்களிடம் நிலுவையாகவுள்ள மீதிகளின் மீதான நட்டக்கழிவுக்கு 100 சதவீத ஏற்பாடொன்று நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 5,766,335 மொத்த அறவிடமுடியாத உத்தியோத்தர் கடன் மீதியில், ரூபா 3,202,582 தொகையொன்று அல்லது 55 சதவீதம் 4 வருடங்களுக்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாது தொடர்ந்தும் காணப்பட்டது.

**செலுத்தவேண்டிய கணக்குகள்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 5,913,789 கூட்டுத்தொகையான நானாவித கடன்கொடுத்தோர்கள் 3 வருடங்களுக்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 24,405,234 மொத்த பிடிகாசில், 16 ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்ட ரூபா 7,897,111 அல்லது 32 சதவீதம் மூன்று வருடங்களுக்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாது தொடர்ந்தும் காணப்பட்டது.

(இ) முற்பணமாகப்பெற்ற ரூபா 10,313,595 கூட்டுத்தொகை மூன்று வருடங்களுக்கு மேலாக மாற்றமின்றி தொடர்ந்தும் காணப்பட்டது. இது தொடர்பில் எவ்வித முறையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

-----------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் இணங்கப்பாட்டினைப் பெற்ற பின்னர் பொருத்தமான அமைச்சரின் அங்கீகாரமின்றி 2017 திசெம்பர் 31 உள்ளவாறு ரூபா 6,807.75 மில்லியன் தொகையொன்றினை சபை முதலீடுசெய்திருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசின் 770(2) ஆம் நிதிப்பிரமாணம் | கணக்கீட்டு உத்தியோத்தரின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது ரூபா 3,113,255 கிரயமான நிலையான சொத்துக்கள் அகற்றப்பட்டிருந்தது. |
| (இ) | அரச பெறுகை வழிகாட்டல்கள் 2006 | "இலங்கையின் அபிவிருத்திக்கு பீஓஐ'எஸ் இன் பங்களிப்பு" எனும் கருப்பொருளில் சபை கண்காட்சியொன்றை ஏற்பாடு செய்திருந்ததுடன் பெறுகை நடைமுறையினைப் பின்பற்றியிராது இரண்டு தனியார் கம்பனிகளுக்கு ரூபா 7,630,000 இனைச் செலுத்தியிருந்தது. |

## 2.4 போதிய அதிகாரத்தினால் ஆதரவழிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1978 இன் 04 ஆம் இலக்க முதலீட்டு சபை அதிகாரச்சட்டத்தின் 13(2)(ஆ) பிரிவு மற்றும் 1994 யூன் 14 இன் 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையான அனுமதிகளினைப் பெற்றுக்கொண்டிராது சபையின் அனுமதியினை மாத்திரம் பெற்றுக்கொண்ட பின்னர் அதன் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 512,809,119 கூட்டுத்தொகையான 7 படிகளினை சபை செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையினால் வேண்டப்பட்டவாறு முக்கிய செயலாற்றல் செலுத்துகையின் (கேபிபி) கணிப்பீட்டிற்கு அமைச்சரின் வழிகாட்டல்கள் அல்லது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் மற்றும் சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 11 இன் பிஈடீ 03/2017 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக, நிரந்தரமான ஊழியர்களுக்கு ரூபா 45,000 அல்லது ஒரு மாத சம்பளம் இதில் எது அதிகமோ அதுவும் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களுக்கு ரூபா 45,000 எனும் விகிதமொன்றில் 2017 ஆம் ஆண்டிற்கு ரூபா 58,649,750 வருடாந்த மிகையூதியமொன்றை சபை செலுத்தியிருந்தது. ஆகையினால், மீளாய்வாண்டில் மிகையூதியமாக ரூபா 41,302,250 மேலதிக கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டது.

(ஈ) பூச்சிய வட்டி விகிதத்துடன் மூன்று கடன்கள் வகைகளினையும் 4.2 சதவீத வட்டி விகிதமொன்றுடன் ஏழு கடன்கள் வகைகளினை சபையின் ஊழியர்கள் அனுபவிக்கின்றனர். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையின் மனித வளங்கல் கொள்கை கையேட்டில் உத்தியோகத்தர் கடன் திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கின்றதுடன் பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் 2007 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்பட்டுவருகின்றது. 2014 ஆம் ஆண்டில் இந்த கையேட்டிற்கு சபையினால் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி கடன் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உத்தியோத்தர் கடன்களின் மீதி ரூபா 724,855,208 ஆகக் காணப்பட்டது.

(ii) மேலுள்ளவற்றிக்கு மேலதிகமாக, சபையின் ஊழியர்களுக்கு வீடமைப்பு கடன் திட்டமொன்று 1994 ஆகஸ்ட் 09 இலிருந்து அமுலுக்குவரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ஏதேனும் வீடமைப்பு நோக்கத்திற்கு பொது அல்லது தனியார் வங்கியொன்றிடம் அல்லது கடன் வழங்கும் நிறுவகமொன்றிடமிருந்து கடனொன்றை பெற்ற ஊழியர் ஒருவர்க்கு கடன் மீதான உண்மையான வருடாந்த வட்டி மற்றும் 4.2 சதவீதம் தொடக்கம் 20.5 சதவீதத்திற்கிடைப்பட்ட வித்தியாசத்தின் மீளளிப்பு வழங்கப்பட்டது. பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டினுள் மேற்குறித்த கடன் திட்டத்திற்கு ரூபா 42,122,777 தொகையொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 768,128,696 வரிக்கு முன்னரான தேறிய மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 827,183,067 வரிக்கு முன்னரான மிகைகளினை விளைவித்திருந்தமையினால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 59,054,371 ஆன முன்னேற்றமொன்றினைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 162,317,450 இனால் மொத்தச் செலவினம் அதிகரித்தமைக்கு வருமானம் மற்றும் நிதி வருமானம் என்பன முறையே ரூபா 106,717,261 மற்றும் ரூபா 114,654,560 இனால் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளில் இந்த முன்னேற்றத்திற்குப் பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கான சபையின் பிரதான நோக்கங்களினை அடைதலின் செயல்முன்னேற்றம் பின்வருமாறு.

#### (அ) பீஓஐ செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம்

முதலீட்டு சபைச் அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் செயல்படுத்தப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஐந்து ஆண்டுகளுக்கான பீஓஐ செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை (புதிய உடன்படிக்கைகள் மற்றும் விரிவாக்கங்கள்) | வியாபார செயற்பாடுகளினை ஆரம்பித்திருந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை (புதிய உடன்படிக்கைகள் மற்றும் விரிவாக்கங்கள்) | கைவிடப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | மூடப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | உடன்படிக்கைகள் ரத்துச் செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 2017 | 103 | 66 | 7 | 7 | 148 |
| 2016 | 185 | 73 | 7 | 10 | 78 |
| 2015 | 157 | 100 | 5 | 27 | 23 |
| 2014 | 160 | 101 | 0 | 15 | 56 |
| 2013 | 147 | 108 | 3 | 16 | 122 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை 44 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ii) 2013 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியின் போது வியாபார செயற்பாடுகளினை ஆரம்பித்திருந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

**(ஆ) கவரப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள்**

2013 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியின் போது கவரப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (எவ்டிஐ) கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் வருடாந்த இலக்கு 2014 - 2016 மற்றும் 2017 - 2020 | உள்ளபடியானது | வருடாந்த இலக்குகளின் சதவீதமொன்றாக உள்ளபடியான அடைவுகள் |
|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | |
| 2017 | 1,000 | 1,710.00 | 171 |
| 2016 | 5,000 | 801.00 | 16 |
| 2015 | 3,500 | 969.66 | 28 |
| 2014 | 2,500 | 1,616.26 | 65 |
| 2013 | 1,391 | 1,391.40 | 100 |

2017 - 2020 காலப்பகுதிக்கான" கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கவரப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் (எவ்டீஐ) வருடாந்த இலக்கு அசாதாரண முறையொன்றில் அமைக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான இலக்குகளுடன் ஒப்பிடுகையில் அது 20 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. ஆகையினால், முன்னைய ஆண்டிற்கான உள்ளபடியான அடைவுகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பொன்று காணப்பட்டது.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் வடுபிடிவல ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்திற் குளாய் கிணற்றின் போதுமையற்ற நீர் விநியோகத்தின் விளைவொன்றாக, வாடகைக்கமர்த்தப்பட்ட பவுசர்களினைப் பயன்படுத்தி முயற்சியகங்களுக்கு தேவையான நீர் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டின் போது நீரின் $1m^3$ (கனமீற்றர்) இற்கான கிரயம் ரூபா 395 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், முயற்சியகங்களுக்கு விநியோகிக்கப்பட்ட நீரின் $1m^3$ (கனமீற்றர்) இற்கு ரூபா 75 இனை மாத்திரம் சபை அறவிட்டிருந்தது. ஆகையினால் ரூபா 5,280,320 நட்டமொன்றை சபைக்கு ஏற்பட்டிருந்தது. இருப்பினும், 2018 யூன் 30 வரையிலும் நட்டத்தை கழிவளவாக்குவதற்கு முறையானதொரு பொறிமுறைமையினை சபை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 53,667 சதுர அடி பரப்புடை சீதாவக்க ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயம், கொக்கல ஏற்றுமதி செயன்முறைபடுத்த வலயம் மற்றும் கட்டுநாயக்க ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தின் 59 வளாகங்கள் எழுத்து மூலமான உடன்படிக்கைகளினை ஏற்படுத்திக்கொள்ளாது ரூபா 17,207,076 வருடாந்த வாடகையொன்றுக்கு வெளித்தரப்பினர்க்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது.

(இ) பீஓஐ கட்டணங்கள் மற்றும் அறவீடுகளினை மீளமைப்பதற்கு கொள்கையினை முறைமை மற்றும் நெறிப்படுத்துவதற்கு மற்றும் அதன் அனைத்து வருமானம் முறையாக உழைக்கப்படுகின்றமையை நிச்சயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளினை சபை எடுத்திருக்காமை அவதானிக்கப்பட்டது. அதன் விளைவாக, உழைக்கவேண்டியிருந்த வருமானத்தின் நட்டத்தினை சபை தாங்கவேண்டியிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையின் தரப்படுத்தல் குழுவினால் (Rate Committee) பீஓஐ கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் பரிந்துரைக்கப்பட்டு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. அதன் பின்னர் இவை அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. எவ்வாறாயினும், பல சந்தர்ப்பங்களில், விகித குழுவினால் தற்போது காணப்படும் கட்டணம்

அல்லது அறவீடுகளுக்கு சில தொகையினை சேர்ப்பதன் மூலம் முன்மொழியப்பட்ட கட்டணம் அல்லது அறவிடுகை தொடர்புடைய ஏற்றுமதி முறைமைப்படுத்தல் வலயத்தின் தலைமையினால் முன்மொழியப்படுகின்றதுடன் விகித குழுவினால் அது பரிந்துரைக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், தற்போது காணப்படும் கட்டணம் அல்லது அறவிடுகை அல்லது கட்டணம் அல்லது அறவிடுகையின் மீளமைப்புக்கு பயன்படுத்தப்பட்ட அடிப்படைக்கு சேர்க்கப்பட்ட தொயையினை தீர்மானிப்பதற்கான முறைமை கணக்காய்விற்கு கிடைக்கக் கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) சீதாவக்க ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்திலுள்ள நிர்வாகக் கட்டிடத்தின் தரைத்தளத்தின் பகுதியொன்று 2003 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை வங்கிக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. 2003 - 2014 காலப்பகுதிக்கு சதுர அடிக்கு ரூபா 30 விகிதமொன்று அறவிடப்பட்டிருந்ததுடன் 2016 சனவரி 01 இலிருந்த சதுர அடிக்கு ரூபா 45 ஆக அது மீளமைக்கப்பட்டது. எவ்வாறாயினும், வாடகையினை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அடிப்படை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், இது தொடர்பில் இலங்கை வங்கியுடன் உடன்படிக்கையொன்றை சபை ஏற்படுத்தியிருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டது.

(iii) கட்டுநாயக்கா ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தினால் உரிமையைக் கொண்டுள்ள அவரிவத்த பஸ் முடியுமிடத்திலுள்ள 15 வியாபார கடைகள் மற்றும் பேஸ்லைன் (Base line) வீதிக்கு முகப்பிலுள்ள 04 வியாபார கடைகளின் குத்தகை வாடகை அரச விலைமதிப்பாளரின் அறிக்கையின் பிரகாரம் மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை அது மீளமைக்கப்படவேண்டிய போதிலும், 2009 ஆம் ஆண்டிலிருந்து எட்டு வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கு மேலாக மீளமைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2004 செப்தம்பர் 02 இல் சபை மற்றும் கண்டி கைத்தொழில் பேட்டையிலுள்ள தனியார் வங்கி கிளையொன்றிக்குமிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட எழுத்து மூலமான உடன்படிக்கையின் பிரகாரம், வருடாந்த நில வாடகை ஒவ்வொரு மூன்று வருடங்களும் மீளமைக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், உடன்படிக்கையின் பிரகாரம் நில வாடகை சீராக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) சிலோன் ஹெவி இன்டஸ்டிரீஸ் மற்றும் கென்ஸ்டிரக்ஸன் கம்பனி லிமிட்டட் என அறியப்பட்ட சிலோன் ஸ்டீல் கோப்பரேசன் லிமிட்டட்டுடன் அத்துருகிரியயில் காணப்படும் தொழிற்சாலையினை நவீனமயப்படுத்த மற்றும் மேம்படுத்துவதற்கு 1998 மே 07 இல் சபையுடன் உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து, 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தந்திரோபாய அபிவிருத்தி செயற்திட்ட அதிகாரச்சட்டத்தின் கீழ் காணப்படும் தொழிற்சாலையினை நவீனமயப்படுத்த மற்றும் மேம்படுத்துவதற்கு 2011 யூன் 03 இல் இரண்டு தரப்பினர்களுக்கிடையே பிற்சேர்க்கை உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இணங்கப்பட்டவாறு மேலதிக பொருட்களின் வீச்சினை கம்பனி அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

(ii) காணப்படும் உற்பத்தி இயளளவினை 250,000 எம்ரீ (MT) வரை அதிகரிப்பதற்கு இணக்கப்பாடு காணப்பட்ட போதிலும், கம்பனியின் உற்பத்தி இயளளவு 2015 அளவில் 250,000 எம்ரீ வரை அதிகரிக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | உற்பத்தி இயளளவு (எம்ரீ) |
|---|---|
| 2011 | 78,847 |
| 2012 | 138,197 |
| 2013 | 132,765 |
| 2014 | 181,417 |
| 2015 | 169,521 |

(iii) கம்பனிக்கு பத்து வருட வரி விடுமுறை, இறக்குதி வரி சலுகைகள், சங்கத்தீர்வை விலக்களிப்புக்கள் போன்ற நிவாரணங்களினை சபை அளித்திருந்த போதிலும், பிற்சேர்க்கை உடன்படிக்கையிலுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் நிறைவேற்றாமை தொடர்பில் நெருக்கமான கண்காணிப்பினை மேற்கொள்வதற்கு சபை தவறியிருந்தது.

## 4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

### 4.3.1 ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்கள் (ஈபிஇசற்), கைத்தொழில் பேட்டைகள் (ஐபி) மற்றும் பிராந்திய அலுவலகங்களின் செயற்பாடு

மிகையான நிர்வாகச் செலவினங்கள் காரணமாக பின்வரும் ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களில் பல ஆண்டுகளிற்கு மேலாக தொடர்ச்சியாக நட்டங்கள் நிலைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

| வலயத்தின் பெயர் | ஆண்டிற்கான வரிக்கு முன்னரான மிகைகள் / (பற்றாக்குறை) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
| | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' |
| கொக்கல ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயம் | (12,547) | (10,903) | (47,108) | (40,781) | (14,050) | (11,775) |
| வதுபிட்டிவள ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயம் | (16,911) | (9,062) | (3,323) | 777 | (2,969) | (7,767) |
| மல்வத்த ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயம் | (4,824) | 0.2 | (1,914) | (4,376) | (2,748) | (5,531) |
| மிரிஜ்ஜவல கைத்தொழில் பேட்டை | (16,044) | (4,828) | 1,256 | (8,384) | 6,334 | 0.5 |

## 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயமொன்றை (ஈபிஇட்) அபிவிருத்தி செய்வதற்கு 2004 சனவரி 23 இல் கெரகல்லயில் காணியொன்றை சபை கொள்வனவு செய்திருந்ததுடன் வலயத்தில் நிறுவப்படவுள்ள கைத்தொழல் துறைகளில் வேலை வாய்ப்புக்களினை வழங்கும் நோக்கத்துடன் ஈபிஇசட் ஒன்றாக காணி அபிவிருத்தி செய்யப்படும் வரை அனுதாப அடிப்படையில் காணியினைக் கொள்வனவு செய்யும்

நேரத்தில் தொழிலாளர்களாக காணியில் வேலைபுரிந்த நிறுத்தப்பட்ட 08 ஊழியர்களுக்கு ரூபா 3,000 தொடக்கம் ரூபா 6,000 வரை மாதாந்த படியொன்றை செலுத்துவதற்கு சபை இணங்கியிருந்தது. எவ்வாறாயினும், பல்வேறு காரணங்கள் காரணமாக ஈபிஇசட் இன் ஸ்தாபிப்பு தாமதமடைந்திருந்ததுடன் அந்த ஊழியர்களுக்கான படிகளின் செலுத்துகையினை இடைநிறுத்த சபை தீர்மானித்திருந்தது. அதன் விளைவாக, அவர்களில் 06 ஊழியர்கள் அவர்களின் மிகுதியாகவுள்ள தொகையினைக் கோரி தொழிலாளர் உதவி ஆணையாளர் அலுவலகத்தில் சபைக்கு எதிராக முறைப்பாடொன்றினை மேற்கொண்டிருந்தனர். இறுதியில், கைத்தொழில் பிணக்கு அதிகாரச்சட்டத்தின் கீழ் பிணக்கின் சிநேகமான தீர்ப்பனவொன்றுக்கு இரண்டு தரப்பினரும் உடன்படிக்கையொன்றுக்கு வந்ததுடன் 2017 யூலை 12 இல் தொழிலாளர் உதவி ஆணையாளர் அலுவலகம், கம்பஹாவில் இழப்பீடாக ரூபா 1,800,000 தொகையொன்றை சபை வைப்பிலிடவேண்டியிருந்தது.

## 4.5 ஏனைய நிறுவகங்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்களின் 2003 யூன் 02 இன் பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 9.4 ஆம் பிரிவுகளுக்கு முரணாக, சபையின் மூன்று ஊழியர்கள் அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் சர்வதேச வியாபார அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிற்காக சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரப் படிகளாக ரூபா 4,629,590 தொகையொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) முன்னாள் கொள்கைத் திட்டமிடல் மற்றும் அமுல்ப்படுத்தல் அமைச்சு உரிமையைக் கொண்டிருந்த 64-5315 ஆம் இலக்கத்தை தாங்கிய வாகனம் 10 வருடங்களுக்கு அதிகமான காலப்பகுதியொன்றுக்கு சபையினால் பயன்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 வரையிலும் சபைக்கு வாகனத்தை கையேற்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டின் போது வாகனத்தின் பராமரிப்புக் கிரயமாக ரூபா 290,610 தொகையொன்று சபைக்கு ஏற்பட்டிருந்தது.

(இ) உலக வர்த்தக மையத்தில் மீளாய்வாண்டிற்கான தரிப்பிட வசதிகளுக்கான பன்னிரெண்டு மோட்டார் வாகன தரிப்பிட அனுமதிச்சீட்டுகள் சபையினால் அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் சர்வதேச வியாபார அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 720,000 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 வரையிலும்

அமைச்சிடமிருந்து இந்த செலவினத்தை மீளளிப்புச் செய்வதற்கு சபை தவறியிருந்தது.

(ஈ) ரூபா 3,823,250 கிரயமான சபையின் நிலையான சொத்துக்கள் முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் சர்வதேச வியாபார அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

**4.7 மனித வளங்கள் முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் உண்மையான மனித வளங்கள் தேவைப்பாட்டினைக் கருத்திற்கொள்ளாது ஒப்பந்த அடிப்படையில் தொன்னூற்று ஆறு (96) ஊழியர்களும் அமைய அடிப்படையில் நூற்றி மூன்று (103) ஊழியர்களும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் விளைவாக, 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடன் ஒப்பிடுகையில் அறுபத்தி நான்கு (64) முகாமைத்துவ உதவியாளர்களும் (தொழில்நுட்பம் அல்லாத) நூற்றி இருபத்தி ஆறு (126) ஆரம்ப மட்ட ஊழியர்களும் மிகையாகக் காணப்படுகின்றனர். மேலும், இந்த ஆட்சேர்ப்புகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஒன்பது (09) முகாமைத்துவ மட்ட பதவிகள் பதில் அடிப்படையில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 1997 ஒக்தோபர் 24 இன் 124 ஆம் இலக்க நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம், வெற்றியான பதவியொன்றின் கடமைகளினை மேவுகை செய்வது 03 மாத காலப்பகுதியொன்றுக்கு வரையறுக்கப்படல் வேண்டும். 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 மாதங்கள் தொடக்கம் 51 மாதங்கள் வரையான வீச்சினையுடைய காலப்பகுதியொன்று வெற்றிடமாகவுள்ள பதவிகளின் கடமைகளினை மேவுகை செய்வதற்கு 08 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) எதிர்கால மனித வளங்கள் தேவைப்பாட்டிற்கு தொடர்ச்சியான திட்டமொன்று 2017 திசெம்பர் 31 வரையிலும் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளல்

ஐக்கிய நாடுகளின் உறுப்பினர்களினால் 2015 செப்தம்பர் மாதத்தில் இணங்கப்பட்டவாறு ஐக்கிய நாடுகளின் "நிகழ்ச்சித்திட்டம்" 2030 இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவகங்களும் அவர்களின் கடமைகளினை நடாத்திச் செல்லல் வேண்டும். அதற்கமைய, சபை அதன் நாளாந்த செயற்பாடுகளுடன் தொடர்புபட்டதாக 08, 09 மற்றும் 17 ஆம் இலக்க இலக்குகளினை இனங்கண்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த இலக்குகளினை அடைந்துகொள்வதிலுள்ள மயிற்கற்களுடன் கூடிய இலக்குகள், மற்றும் அவ்வாறான இலக்குகளின் அடைவுகளினை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் சபையினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2017 ஆம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையின் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அனைத்து செயற்பாடுகளின் செயலாற்றலினை அளவிடுவதற்கு இயலக்கூடியதாக வெளியீடுகள் அல்லது குறிகாட்டிகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 ஆம் ஆண்டின் போது பூர்த்தியாக்க திட்டமிடப்பட்ட முறையே ரூபா 219.65 மில்லியன் மற்றும் ரூபா 155.3 மில்லியன் ஒதுக்கீட்டுடனான முப்பதியொரு செயற்பாடுகள் மற்றும் முப்பத்தி ஆறு செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில், பட்டியலிடப்பட்டவாறு ஆண்டின் போது ஆரம்பிக்க அல்லது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொறுப்பு

சபையின் செயற்பாடுகளிலிருந்து சுற்றுச்சூழல் மீதான தாக்கம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சீதாவக்க ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயம் மற்றும் சீதாவக்க ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்திலுள்ள ஆடைத்தொழிற்சாலையொன்று மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நியமங்களுடன் இணங்கியிருக்காமை காரணமாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளாது முறையே 2013 ஏப்ரல் மற்றும் 2010 திசெம்பர் 31 இல் இருந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

(ii) 2018 யூலை இன் 06, 09 மற்றும் 19 இல் சீதாவக்க மற்றும் பியகம ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களில் நடாத்தப்பட்ட களப்பரீட்சிப்பின் பிரகாரம், பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- தொழிற்சாலைக் கழிவுகளினை அகற்றுவதற்கு சுற்றுச்சூழல் நட்புறவான பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையினால் தொழிற்சாலையின் திண்மக் கழிவுகள் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிற்கும் வகையொன்றில் வலயத்தின் திறந்த பிரதேசமொன்றில் கொட்டப்படுகின்றது.

- சீதாவக்க ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தின் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், நீர் சுத்திகரிப்பு பொறிக்கு அருகாமையில் அமைந்துள்ள குளமொன்றிக்கு விடுவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், மழை காலப்பகுதிகளில் சுத்திகரிப்புப் பொறியின் மிகைப் பாய்ச்சலொன்றின் விளைவாக, குளத்தின் சுத்திகரிக்கப்பட்ட நீருடன் கழிவு நீர் கலக்கப்படுகின்றதுடன் ஆற்றிக்கும் ஓடுகின்றது.

## 6.3 பெறுகைத் திட்டம்

2017 ஆம் ஆண்டிற்கு சபையினால் பிரதான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பொறுப்புடைய உத்தியோகத்தர் ஒருவரினால் அது அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் பெறுகைகள் வழிகாட்டல் 2016 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பெறுகைத்திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் கூட மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 4.2.1 (ஆ) வழிகாட்டலின் பிரகாரம் பிரதான பெறுகைத்திட்டத்தில் ஆகக் குறைந்தது 3 வருட காலப்பகுதியொன்றுக்கான விபரமான பெறுகைச் செயற்பாடுகள் பட்டியலப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 4.2.1 (உ) வழிகாட்டலின் பிரகாரம் ஆறு மாதங்களினை மிகைத்திராத இடைவெளிகளில் பிரதான பெறுகைத்திட்டம் தொடர்ச்சியாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 31 செயற்பாடுகளில் 28 பெறுகை செயற்பாடுகளுக்கு பெறுகைக்கால பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்காமை வெளிப்படுத்தப்பட்டதுடன் 03 பெறுகை செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைக்கால பட்டியல்கள் 4.2.2 (ஆ) வழிகாட்டலுடன் இணங்கியிருக்கவில்லை.

(iv) ஆண்டின் போது பூர்த்தியாக்கப்பட்ட 196 பெறுகை செயற்பாடுகள் பிரதான பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2017 ஆம் ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 272.63 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடனான 21 பெறுகை செயற்பாடுகள் ஆண்டின் போது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.4 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

கொள்கலன்களினை சோதனையிடல் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் சுங்க உத்தியோகத்தர்களுக்கான அடிப்படை வசதிகளுக்கு இடமளிக்கும் பொருட்டு 2011 ஆம் ஆண்டில் சீத்தாவாக்கயிலுள்ள ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தில் முன்மொழியப்பட்ட பிரதான நுழைவாயில் கட்டிடத்தின் நிர்மாணத்திற்கான ஆரம்ப எண்ணக்கரு உருவாக்கப்பட்டிருந்தது. இந்த செயற்பாடு பிரதான பெறுகைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிற்கான சபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுக் காணப்பட்டது. பிரதான நுழைவாயிலில் முறையான கட்டிடம் வராமையினால் முதலீட்டாளர்கள், சேவை வழங்குனர்கள் மற்றும் ஊழியர்கள் சிரமங்களினை முகங்கொடுக்கின்ற போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை முன்மொழியப்பட்ட கட்டிடத்தின் நிர்மாணம் தாமதமடைந்து காணப்பட்டது.

## 6.5 பாதீட்டுக் கட்டுப்பாடுகள்

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கிடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால், பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

## 6.6 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

(அ) அழிவடைந்த வளவுகளில், அதன் குத்தகை உரிமைகள் மற்றும் வட்டிகளினை முதலீட்டுக் கம்பனிகளுக்கு அடகு வைப்பதற்கு மற்றும் அங்குள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்து பொறி, இயந்திரம் மற்றும் பொருத்துக்களினை முத்தரப்பு உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதன் மூலம் ஏதேனும் வங்கி அல்லது / அத்துடன் கடன் நிறுவகத்திற்கு அழிவடைந்த வளவுகளினை நிரந்தரமாக நிறுவுவதற்கு சபை அனுமதியினை வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சில கம்பனிகள் நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்களினை தீர்ப்பனவுசெய்யத் தவறியதன் மூலம் கலைக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டன.

(ii) அடமானம் வைக்கப்பட்ட ஆதனங்களுடன் தொடர்புடைய தீர்ப்பனவு செய்யப்படாத பிரச்சினைகள் காரணமாக மறுக்கப்படும் காணிப் பெறுமதியின் நட்டம், விளைவற்ற காணியின் சந்தர்ப்பச் செலவு மற்றும் சபையினால் பெறவேண்டிய நிலுவைகளினை சபை தாங்க வேண்டியிருந்தது.

(iii) மபுதுகல ஹொரணயிலுள்ள போர்த் தோட்டம் வரையறுக்கப்பட்ட வித்யோதயா ஆயுர்வேத மருந்துவக் கல்லூரி தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. குறித்த ஆதனம் ரூபா 5 மில்லியன் தொகை கடனொன்றை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்டிருந்தது. மேலும், குறித்த கடனைப் பெற்றுக் கொள்கையில் முத்தரப்பு உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. கடனை செலுத்த தவறியதன் காரணமாக 2013 மே 12 இல் வங்கியினால் ஆதனம் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன், பொது ஏலமிடுதலில் ஆதனத்தை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் குத்தகை ஆதனத்தினை கொள்வனவு செய்வதற்கு புதிய முதலீட்டாளரொருவர் இணங்கியிருந்த போதிலும், 2018 மே 31 வரையிலும் சபை மற்றும் புதிய முதலீட்டாளரிற்கிடையே உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

சகல கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்களை மாற்றுவதற்கு முதலிடுகின்ற கம்பனியை வேண்டியிருந்தது. சபையானது இணங்கியவாறு இழப்பீட்டைச் செலுத்துவதற்கு தவறியிருந்தமையால் விடயமானது இலங்கை தேசிய பிணக்குத்தீர்த்தல் நிலையத்திற்கு விசாரணைக்கு விடப்பட்டிருந்ததுடன் முழுவதுமாக மற்றும் இறுதி தீர்ப்பனவாக ரூபா 23,835,535 ஆன தொகையை செலுத்துவதற்கு 2000 ஆகஸ்ட் 07 இல் தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட தொகையின் கொடுப்பனவு மீது சபையிடமிருந்து ரூபா 37,200,000 தொகையான மேலுமொரு கொடுப்பவை வேண்டி நடுவர் தீர்ப்பை வலியுறுத்தி நடுவர் தீர்ப்பு அதிகாரச்சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் எச்சீ/ஏஆர்பீ/1254/02 ஐ கொண்ட வழக்கொன்றை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் கம்பனி தாக்கல்செய்திருந்தது. 2012 மே 14 இல் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம், சபையானது ரூபா 102,138,350 ஆன மேலதிக தொகையை செலுத்த வேண்டியிருந்தது. சபையானது உயர் நீதிமன்ற தீர்மானத்துடன் இணங்க தவறியிருந்தமையால் ரூபா 102,138,350 ஆன தொகைக்காக 1431688 ஆம் இலக்கத்தைக் கொண்ட வங்கி பீஓசி கணக்கை பறிமுதல் செய்வதற்கு 2014 திசெம்பர் 22 இல் வர்த்தக உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் கட்டளையிட்டிருந்தார். எவ்வாறாயினும், சபையால் 2015 சனவரி 01 இல் ரூபா 102,138,350 தொகை உயர் நீதிமன்ற வங்கிக் கணக்கில் வைப்புச்செய்யப்பட்டிருந்தது. தீர்ப்பு மற்றும் வழக்குக்கு எதிராக சபை பதிவுசெய்த வழக்கொன்று 2017 திசெம்பர் 31 வரையிலும் செயல்முறையில் காணப்பட்டது.

(ஈ) சபை பல்வேறு முறைக்கேடுகள் தொடர்பில் சபையின் ஊழியரொருவரை வேலையிலிருந்து நிறுத்தியிருந்ததுடன் நிறுத்திய தீர்மாணத்திற்கு எதிராக கொழும்பு ஊழியர் நியாய சபையில் வழக்கொன்றை ஊழியர் தாக்கல் செய்திருந்தார். ஊழியர் நியாயசபையினால் வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம், 2016 ஆகஸ்ட் 22 இல் கொழும்பு ஊழியர் நியாயசபையினால் இழப்பீடாக ரூபா 3,627,900 தொகையை சபை வைப்பிலிட வேண்டியிருந்தது. அதன் பின்னர் கொழும்பு ஊழியர் நியாயசபையினால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கெதிராக சபை மேன்மறையீடு செய்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 வரையிலும் வழக்கு செயன்முறையிலிருந்தது.

(உ) 2012 மார்ச் 22 ஆம் திகதிய 12/356/504/045 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், கனரக கைத்தொழில் வலயத்தை அபிவிருத்தி செய்வதற்கு திருகோணமலை சம்பூரிலுள்ள 818 ஏக்கர்கள் பரப்பளவுடைய காணியை சபைக்கு மாற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. காணியானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் முன்னாள் தலைவரால் கட்டணமின்றி சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. காணி

சுவீகரிப்பின் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களை இடம்மாற்றுவதற்காக 1218 வீடுகளை நிர்மாணிப்பதற்காக மூதூர் பிரதேச செயலாளரிற்கு ரூபா 347,130,000 தொகை வரை நிதிகளை விடுவிப்பதற்கான அங்கீகாரத்தை சபை வழங்கியிருந்தது. அதற்கிணங்க, 2014 ஆகஸ்ட் 01 இல் பகுதிக் கொடுப்பனவாக மூதூர் பிரதேச செயலாளரிற்கு ரூபா 20,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்திற்காக சபைக்கு வழங்கப்பட்ட காணி 2015 மே 07 ஆம் திகதியில் 1913/19 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. செலுத்தப்பட்ட தொகையினை பொறுப்புடைய தரப்பினர்களிடமிருந்து அறவிடுதவற்கு 2017 திசெம்பர் 31 வரையிலும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) ரூபா 97,937,000 கிரயத்தில் 2004 சனவரி 23 இல் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட 122 ஏக்கர்கள், 01 கால் ஏக்கர்கள், 27.4 பேர்ச்கள் பரப்பளவுள்ள மலிடுவகந்த தோட்டம் என்ற பெயருடைய காணியொன்று 2018 யூன் இறுதி வரை எவ்வித நோக்கத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இந்தக் காணியின் புத்தகப் பெறுமதி ரூபா 100,800,000 ஆகக் காணப்பட்டது.

(எ) சுனாமி நிவாரண நிதியின் மீதி மற்றும் பொதுநலவாய எவ்டிஐ மேம்பாட்டிற்கு பெறப்பட்ட நிதிகள் முறையே ரூபா 1,163,958 மற்றும் ரூபா 917,160 குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டிராது மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் மாற்றமின்றி தொடர்ந்தும் காணப்பட்டது.

(ஏ) 2009 ஆம் ஆண்டில் வதுபிட்டிவள ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்திலுள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறியின் முன்னேற்றங்களிற்கான முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க, நாளொன்றிற்கு 400($m^3$) கன மீற்றரிலிருந்து 650($m^3$) கன மீற்றரிற்கு பொறியின் இயலளவை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2016 மே 14 இல் சுத்திகரிப்புப் பொறியின் பராமரிப்பு சேவைகளை வழங்குகின்ற கம்பனியானது சுத்திகரிப்புப் பொறியின் சீரான செற்பாட்டிற்கும் பராமரிப்பிற்கும் பொறியின் இயலளவு போதாமை பாரிய தாக்கமளித்திருப்பதால் கழிவுநீர் வெளியேற்றும் அளவை எதிர்கொள்வதற்கான பொறியின் இயலளவை அதிகரித்தல் மிகவும் முக்கியமானதெனவும் பொறி வெளியீட்டின் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தர நியமங்களை எதிர்கொள்வதற்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் சபைக்கு அறிவித்திருந்தது. 2016 ஆகஸ்ட் 03 இல்

தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 மே 31 வரையிலும் செயற்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) மொத்தக் கிரயத்துடன் ஒப்பிடுகையில் பதவியணியினர் கிரயம் அதிகரித்திருந்தமையினால் நிறுவகத்தின் செயலாற்றலுக்கு சீரான முறையில் அவர்களின் பங்களிப்புக்கு ஊக்குவிப்பு செலுத்துகை முறையொன்றை உருவாக்குவதற்கு சபை அடியெடுத்து வைப்பதற்கு 2017 மே 05 இல் நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் குழு (சீஓபிஈ) வழிகாட்டியிருந்தது. எவ்வாறாயினும், சபை சீஓபிஈ வழிகாட்டலினைப் பின்பற்றியிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் காலத்திற்குக் காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| ஆளணி வேதனங்கள் மீதான கட்டுப்பாடு | தொழில்சார் படிகள், மாதாந்த போக்குவரத்துப் படிகள் மற்றும் முக்கிய செயலாற்றல் கொடுப்பனவுகள் போன்ற பதவியணியினர் படிகளிற்காக முறையான அங்கீகாரங்களை சபை பெற்றிருக்கவில்லை. |
| முயற்சிகளிடமிருந்தான நிலுவைகளின் சேகரிப்பு | சபையினால் பல்வேறு நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருந்தமையினால், பீஓஐ அங்கீகரிக்கப்பட்ட முயற்சிகளிடமிருந்து நிலுவையாகவுள்ள மீதிகளினை அறவிடுவதற்கு முடியாமலிருந்தது. |
| பெறுகை திட்டமிடல் | பெறுகைத் திட்டம் முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| கணக்கீடு | சபை அதன் ஆவணங்களினை சரியாக வகைப்படுத்துவதற்கு முறையான பொறிமுறையைக் கொண்டிருக்கவில்லை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காய்வு அறிக்கை 2017

## கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

1999.11.19 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை PF/PE/3 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க கணக்காய்வுக் குழு தாபிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டின் நடாத்தப்பட்ட இரண்டு கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் பின்வரும் உத்தியோகத்தர்களை உள்ளடக்கியிருந்தது.

1. தலைவர் - திரு.புத்தி அதாவுத (இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்)
2. உறுப்பினர் - திரு.எம்.சீ.குரே (இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்)
3. உறுப்பினர் - திரு.எம்.ஏ.நீத் உதேச (இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்)

வருடத்தின் இரண்டாவது அரையாண்டில் முகாமைத்துவத்தில் இடம்பெற்ற மாற்றங்களின் காரணமாக எஞ்சிய கணக்காய்வுக் குழுக்கூட்டங்கள் பின்வரும் உத்தியோகத்தர்களை உள்ளடக்கியிருந்தது.

1. தலைவர் - திரு.மங்கல யாப்பா (இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்)
2. உறுப்பினர் - திரு.சாகர குணவர்தன (இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்)
3. உறுப்பினர் - திரு.ஹேமந்த விக்ரமசிங்க (இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்)
4. உறுப்பினர் - திரு.அஜித் குணவர்தன (இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்)
5. கண்காணிப்பாளர் - திரு.சீ.ஜயசூரிய (திறைசேரி பிரதிநிதி)
6. ஆலோசகர் - திரு.லசந்த விக்ரமசிங்க (கணக்காய்வுக் குழுவுக்கான தன்னார்வ ஆலோசகர்)

பதில் பணிப்பாளர் (உள்ளக் கணக்காய்வு) கணக்காய்வுக் குழுவின் செயலாளராக ∴ அமைப்பாளராகக் கடமையாற்றினார்.

அரசாங்கத்தின் கணக்காய்வு அதிபதி கணக்காய்வுக் குழுவில் கண்காணிப்பாளராக கணக்காய்வு அதிபதியைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் மூலம் உள்ளகக் கணக்காய்வு அதிபதியின் பிரதிநிதிகள் மற்றும் முதலீட்டுச் சபை முகாமைத்துவம் உள்ளக நிர்வாகத்தைப் பரிசீலனைகளினதும் மதிப்பீடுகளினதும் பிரதிபலனைப் பற்றிய கலந்துரையாடல்களுக்கு வசதிகளை வழங்கினார்.

உள்ளகக் கணக்காய்வாளருடன் தொடர்ச்சியாக கூட்டிணைப்பினை மேற்கொண்டு வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தை மீளாய்வு செய்தல் மற்றும் அனுமதித்தல் என்பவற்றின் ஊடாக உள்ளகக் கணக்காய்வு விடயப் பரப்பிற்கும் பொறுப்புக்களுக்கும் இணங்குதல் கணக்காய்வுக் குழுவினால் உறுதிசெய்யப்படுகின்றது.

உள்ளகக் கணக்காய்வாளர் பதவியினரினால் நிறுவனத்தின் சுயாதீனத் தன்மைக்கு சேதத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதனைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் மூலம் கணக்காய்வுக் குழு உள்ளகக் கணக்காய்வின் பாதுகாப்பினையும் சுயாதீனத் தன்மையையும் உறுதிப்படுத்துகின்றது.

கணக்காய்வுக் குழு உள்ளக நிர்வாகத்தின் செயற்பாடு மற்றும் நடைமுறைப்படுத்தல் சம்பந்தமான அபாயங்களை மீளாய்வு செய்வதற்கும் அதனுடன் இணைந்த அபாயங்களைக் குறைப்பதற்கும் தவிர்ப்பு நடவடிக்கைகளை மீளாய்வு செய்வது குறித்து கவனம் செலுத்தியது.

குழுவுக்கான நியதிகள் மற்றும் பரிந்துரைகள் அனைத்தும் முக்கியமான பண்புகளுக்கு இணங்க செயற்படுகின்றது என்பது கணக்காய்வுக் குழுவின் அபிப்பிராயம் ஆகும்.

## இமுச வினது 31.12.2017 அன்று உள்ளவாறான சிரேஷ்ட உத்தியோகத்தர்கள்

| பெயா | பதவி | அமைவிடம் |
|---|---|---|
| திரு. டீ.ஆர். ரத்னாயக்க | தலைவர் | உலக வர்த்தக மையம் |
| திரு. டீ.பீ. ஆரியசிங்க | பணிப்பாளர் நாயகம் | உலக வர்த்தக மையம் |

| நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் | னுநியசவஅநவெ | டுழஉயவழைெ |
|---|---|---|
| *பெயர்* | | |
| திரு. பி.ஜே. பனாப்பிட்டிய | பொறியியல் அங்கீகாரமும், விசேட திட்டங்களும் | உலக வர்த்தக மையம் |
| Ms. ஆர்.எம். வீரக்கோன் | திட்டக் கண்காணிப்பு | உலக வர்த்தக மையம் |
| Ms. சீ.பீ. மலல்கொட | ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனை | உலக வர்த்தக மையம் |
| Ms. பீ.டீ.எஸ். முத்துகுமாரண | நிதி | உலக வர்த்தக மையம் |
| திரு. எஸ்.பீ.கே. விஜயதிலக | முதலீடுகள் ஊக்குவிப்பு | உலக வர்த்தக மையம் |
| திரு. கே.பீ.வீ.டி. பெர்ணாந்து | முதலீடுகள் ஊக்குவிப்பு | உலக வர்த்தக மையம் |
| திரு. ஏ.ஆர். கருணாரத்ன | பாதுகாப்பு | உலக வர்த்தக மையம் |
| திரு. ஆர்.எம்.யூ. செனரத் | திட்ட அமுலாக்கல் | உலக வர்த்தக மையம் |
| திரு. எம். ராமநாயக்க | முதலீட்டாளர் சேவைகள் | உலக வர்த்தக மையம் |
| Ms. ஏம்.எஸ்.ஆர். பீரிஸ் (ஆலோசகர்) | சட்டம் | உலக வர்த்தக மையம் |

| பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் | பிரிவு | அமைவிடம் |
|---|---|---|
| *பெயர்* | | |
| திரு. ஏம்.கே.டீ .லோரன்ஸ் | வலய முகாமைத்துவம் | கட்டுநாயக்க ஏ.ஊ.வ. |
| திரு. ஏ.கே.ஜே. மகின்த | தொழில்நுட்ப சேவைகள் | உலக வர்த்தக மையம் |

| பணிப்பாளர்கள் | பிரிவு | அமைவிடம் |
|---|---|---|
| *பெயர்* | | |
| திரு. எஸ். சமரசிங்க | ஊடகமும், பிரச்சாரமும் | உலக வர்த்தக மையம் |
| திரு. எச்.எம் .ஜயசுந்தர | வலய முகாமைத்துவம் | வடமேல் பிராந்திய அலுவலகம் |
| Ms. என்.டீ. சில்வா | முதலீட்டு ஊக்குவிப்பு | உலக வர்த்தக மையம் |
| திரு. ஜே.பீ.சீ. ஜயலத் | தகவல் தொழில்நுட்பம் | உலக வர்த்தக மையம் |
| திரு. ஏ.கே .ஜயசிங்க | வலய முகாமைத்துவம் | பியகம ஏ.ஊ.வ |
| திரு. என்.என். குமாரதுங்க | முதலீட்டு மதிப்பீடு | உலக வர்த்தக மையம் |
| திரு.டபிள்யூ.யூ.கே.எம்.எஸ்.விஜயகுலதிலக | முதலீட்டு மதிப்பீடு | உலக வர்த்தக மையம் |
| Ms. எச்.எஸ். உறுகொடவத்த | கைத்தொழில் தொடர்புகள் | கட்டுநாயக்க ஏ.ஊ.வ |
| திரு. ஜீ தஹநாயக்க | வலய முகாமைத்துவம் | கோக்கல ஏ.ஊ.வ. |
| திரு. எம்.ஜே.கே. மொஹொற்றல | பிராந்திய அபிவிருத்தி | கண்டி கைத்தொழில் பூங்கா |
| Ms. .ஏ.எஸ் பெலிங் | சூழல் முகாமைத்துவம் | உலக வர்த்தக மையம் |
| திரு. ரீ.எம்.டீ. திலகரத்ன | வலய முகாமைத்துவம் | வத்துபிட்டிவல ஏ.ஊ.வ. |
| திரு .டபிள்யூ.ஏ.ஜீ .ஜயதிலக | முதலீட்டு மதிப்பீடு | உலக வர்த்தக மையம் |
| திரு. ஏ.எஸ்.கே.ரீ.ஆர்..சிபேரா | முதலீட்டு மதிப்பீடு | உலக வர்த்தக மையம் |
| Ms. .பீ.எஸ்பீ. பிலப்பிற்றிய | பொறியியல் அங்கீகாரமும், விசேட திட்டங்களும் | உலக வர்த்தக மையம் |
| Ms. எஸ்.ஏ.டீ.டீ. சுரவீர | நிதி | உலக வர்த்தக மையம் |
| திரு. ஏ.கே. ராஜகருண | முதலீட்டாளர் சேவைகள் | உலக வர்த்தக மையம் |
| Ms. டீ.என.சமரவீர | ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசகர் | உலக வர்த்தக மையம் |
| திரு.பிரிகேடியர் டீ.ஏ. அமுனுகம | பாதுகாப்பு | உலக வர்த்தக மையம் |

| பதில் பணிப்பாளர்கள் | பிரிவு | அமைவிடம் |
|---|---|---|
| *பெயர்* | | |
| திரு.எச்எம்.கீர்த்திரத்ன | மனிதவள முகாமைத்துவம் | உலக வர்த்தக மையம் |
| Ms. டீ.ஏ.எஸ். அமரக்கோன் | உள்ளக கணக்காய்வு | உலக வர்த்தக மையம் |
| Ms. என்.என். அந்த்ரகென்னடி | கைத்தொழில் தொடர்புகள் | உலக வர்த்தக மையம் |

# முதலீட்டு சபையின் அலுவலக விபரக் கொத்து

தலைமை அலுவலகம் (உவநி அலுவலகம்)
தளம் 05,06,08,09,19,24,25,26&27
மேற்கு கோபுரம் உவநி
எச்சலன் சதுக்கம், கொழும்பு 01
தொ.பே. 011 2434403-5, 2435027, 2447531, 2385972-6, 2346131-3
தொ.ந. 011 2447995, 2329795, 2430512, 2422407
மி.அஞ்சல்: info@boi.lk

கட்டுநாயக்க ஏற்றுமதி செயல்முறை வலயம்
கட்டுநாயக்க
தொ.பே. 011 2252364-5, 2252140, 2252038, 4833737,4833741,4833774,833779, 4833817, 4833819
தொ.ந. 011 2253207
மி.அஞ்சல்: kepz@boi.lk

பியகம ஏற்றுமதி செயல்முறை வலயம்
வல்கம, மல்வான.
தொ.பே. 011 2465206-09
தொ.ந. 011 2465227
மி.அஞ்சல்: bpz@boi.lk

ஹொரண ஏற்றுமதி செயல்முறை வலயம்
பொரலுகொட, பொறுவதந்த
தொ.பே. 034 2269296. 2269752, 2258077
தொ.ந. 034 2255687, 2258029
மி.அஞ்சல்: hepz@boi.lk

மீரிகம ஏற்றுமதி செயல்முறை வலயம்
மஹயயவத்த, லொலுவகொட, மீரிகம
தொ.பே. 033 2274657, 2276626, 2276393
தொ.ந. 033 2274657, 2276393
மி.அஞ்சல்: mepz@boi.lk

வத்துபிற்றிவல ஏற்றுமதி செயல்முறை வலயம்
வத்துபிற்றிவல.
தொ.பே. 033 2281604, 2281381
தொ.ந. 033 2282364
மி.அஞ்சல்: wepz@boi.lk

மல்வத்த ஏற்றுமதி செயல்முறை பூங்கா
திஹாரிய, நிற்றம்புவ.
தொ.பே. 033 2288826, 2296166, 2296620
தொ.ந. 033 2288826
மி.அஞ்சல்:mepp@boi.lk

சீதவாக்க ஏற்றுமதி செயல்முறை வலயம்
அவிசாவல.
தொ.பே. 036 2231082
தொ.ந. 033 2231083
மி.அஞ்சல்: sip@boi.lk

ஹொரக்கல ஏற்றுமதி செயல்முறை வலயம்
ஹொரக்கல, ஹபராதுவ.
தொ.பே. 091 2283425
தொ.ந. 091 2283370
மி.அஞ்சல்: kgepz@boi.lk

கண்டி கைத்தொழில் பூங்கா
கென்கல்ல, கண்டி.
தொ.பே. 081 2420019, 2420025, 2423992, 2423994
தொ.ந. 081 2420091, 2423995
மி.அஞ்சல்: kip@boi.lk

வட மேல் பிராந்திய அலுவலகம்
மாஸ் பப்ரிக் பார்க், குருநாகல் வீதி, துல்கிரிய
தொ.பே. 037 2277037, 2277038
தொ.ந. 037 2277036
மி.அஞ்சல்: nwro@boi.lk

பொல்காவல ஏற்றுமதி செயல்முறை வலயம்
கேகாலை வீதி, பொல்காவல.
தொ.பே. 037 2244657, 2241526
தொ.ந. 037 2244657
மி.அஞ்சல்: pwepz@boi.lk

மாவத்துகம ஏற்றுமதி செயல்முறை வலயம்
டைனோ் எஸ்டேட், கண்டி வீதி, மாவத்துகம
தொ.பே. 037 2298147
தொ.ந. 037 2296041
மி.அஞ்சல்: mwepz@boi.lk

மத்திய செவ்வைபார்த்தல் முனையம்
இலங்கை சிப்பிங் லைன்ஸ் யாட்,
இல.70, அவிசாவல வீதி, உருகொடவத்த
தொ.பே. 025 47485, 4411591, 4978969
தொ.ந. 011 2547485, 2053421

விமான சரக்கு செவ்வைபார்த்தல் அலகு
பண்டாரநாயக்க சா்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க
தொ.பே. 011 2252155, 4833834, 2265183
தொ.ந. 011 2252155

இமுச விசேட பொருளாதார வலயம்
பிரிமா தொழிற்சாலை வீதி, சீனன்குடா, திருகோணமலை
தொ.பே. 026 2233003
தொ.ந. 026 2233002

மிரிஜ்ஜாவில ஏற்றுமதி செயல்முறை வலயம்
100, பீற் வீதி, மிரிஜ்ஜாவில, அம்பாந்தோட்டை
தொ.பே. 047 2258800
தொ.ந. 047 2258800

யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம்
தேவீஅச கட்டடம். சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 2221336, 2222130
தொ.ந. 021 2221336